விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 07 ஞாயிற்றுக்கிழமை (22.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 339

## நீரில் மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் உயிரிழப்பு

### மண்டைதீவில் பெரும் சோகம்



(மண்டைதீவு)

யாழ்.மண்டைதீவில் நீரில் மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் வேளை இச் சோக சம்பவம் இடம் பெற்றுள்ளது. 15

### மாவீரர் வாரத்தின் முதல்நாள்

## நல்லூரில் முன்னணியினர் விளக்கேற்றி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மண் விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த மாவீரர்களுக்கு கார்த்திகை 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரையில் அஞ்சலி செலுத்தும் வாரமாக உள்ளது.

அந்த வகையில் 15

## சிறுப்பிட்டியில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறுப்பிட்டியில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், வீட்டின் ஜன்னல்களும் உடைக்கப்பட்டுள் 15

## சாவகச்சேரியில் இளம் யுவதி சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

மட்டுவில் கிழக்கு தேவாலய வீதிப் பகுதியில் 22 வயது பெண் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தந்தை, தாய் வேலை நிமித்தம் வெளியில் சென்றிருந்த 15

### மாவீரர் வாரத்தின் இறுதி நாளான 27ஆம் திகதி

# அனைவரும் வீட்டு வாசலில் தீப ஒளியை ஏற்றுவோம்

## அனைத்து தமிழ்க் கட்சிகள் தீர்மானம்

*(யாழ்ப்பாணம்)*

**மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நவம்பர் 27ஆம் திகதி அனைத்து தமிழ் மக்களும் தமது வீட்டு வாசல்களில் தீப ஒளியை ஏற்றி அஞ்சலி செலுத்துமாறு அனைத்து தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் - மாவீரர் துயிலும் இல்லங்கள் சார்ந்த நினைவேந்தல் ஏற்பாட்டு குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் சீ.வீ.கே சிவஞானம், சரவணபவன், பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் பிரதிநிதியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் 15

### மாவீரர் வாரத்தை முன்னிட்டு

## மணிவண்ணன் தலைமையில் சுடரேற்றி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தின் முதலாம் நாளான நேற்று சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் பிரத்தியேக இடமொன்றில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் 15

## வடக்கு, கிழக்கின் பல பகுதிகளில் இராணுவம், பொலிஸ் குவிப்பு

### மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படலாம் என கருதப்படும் இடங்கள் இராணுவ கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரம் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் வடக்கு, கிழக்கின் பல பகுதிகளில் இராணுவம், பொலிஸ் குவிக்கப்பட்டுள்ளது. 15

### கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக

## மாவீரர் நாள் கடைப்பிடித்த காணியில் திடீர் இராணுவ முகாம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக மாவீரர் நாள் கடைப்பிடித்த காணியில் இராணுவம் திடீரென முகாம் அமைத்து அப்பகுதியையும் ஆக்கிரமித்துள்ளது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் 15

## 9 ஒரே நாளில் பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் ஒரே நாளில் கோவிட் -19 தொற்றால் மேலும் 9 பேர் உயிரிழந்துள்ளனர் என்று நேற்று சனிக்கிழமை இரவு அறிவிக்கப்பட்டுள்ளது. 15

### கொழும்பிலிருந்து

## கிளிநொச்சிக்கு வந்த இருவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

கொழுமபிலிருந்து கிளிநொச்சிக்கு வந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் 15

## நாட்டில் மேலும் +487 தொற்றாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் +487 பேர் கொரோனா 15

### பாதீட்டின் 2ஆம் வாசிப்பு

## 99 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 99 வாக்குகள் வித்தியாசத்தில் பாராளுமன்றத் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



இளைப்பாறிய நில அளவையாளரும்
உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்க
உறுப்பினரும் பதிவு பெற்ற நில அளவையாளருமான

**அமரர்**

## கிருஸ்னர் பரமேஸ்வரன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சர்ந்தி!!!*

(4706)

**உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம் (வட. பகுதி )**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 04 . 1947



மறைவு 04 . 12 . 2019

அமரர்

## கண்மணியம்மா கணபதிப்பிள்ளை

[ கிளியக்கா ]

**( திதி : 22.11.2020 )**

உயிர் ஓவியமாய் - எம்
இல்லத்தை அலங்கரித்த
எம்மவளை காலனவன்
கவர்ந்து சென்று
ஐம்பத்திரண்டு வாரங்களாயிற்றா!
நம்ப முடியவில்லை - அம்மா
நம்ப முடியவில்லை
உங்கள் ஆசி பெற்ற
பேரப்பிள்ளைகள் நற்பேறு
எய்த செய்தி கூற
அப்பம்மா கூட இல்லையே...!

என ஏங்கித் தவிக்கின்றனரே - அம்மா
ஏக்கமும் தவிப்பும் வியர்த்தம்
தானென்று அவர்கள் புரிவார்களா?
ஏனெனில் நேற்று வரை ஆசி
வழங்கிய எங்கள் அம்மா
அருள் பாலிக்கும் இறைவன் ஆனது
எமக்கு மட்டும் தானே தெரியும்!
அம்மா உங்கள் ஆசியும் அருளும்
உள்ளவரை உம் ((எம்)) குலமும்
என்றென்றும் ஓங்கி வளரும் அம்மா:
உம் நீங்கா நினைவுடன்...

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(4666)

குருந்தடி வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

உம் நீங்கா நினைவுடன்
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,
ஆனைக்கோட்டை, நவாலி வீதி
மெயின் றோட்டுடன் 3
பரப்புக் காணி விற்பனைக்கு
உள்ளது.
1 1/2 பரப்பாகப் பிரித்துக்
கொடுக்கப்படும்.
(தரகர் தேவையில்லை.)
( ஆனைக்கோட்டைச் சந்தியில்
இருந்து 70 மீற்றர் தூரம்.)

(4701)

**077 623 4204,**
**077 288 0152**

## காணிகள் தேவை

யாழ்ப்பாணம்,
கோப்பாய், நல்லூர்
பிரதேச செயலக
எல்லைகளுக்குள்
20 பரப்பு தொடக்கம்
50 பரப்பு வரையான
காணி தேவை.
( தரகர் தேவையில்லை. )

(4701)

**076 221 2037**

## LATHE MACHINE விற்பனைக்கு

தாய்வான், கொங்ஹொங், சீனா, மலேசியா ஆகிய நாடுகளில் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 3 அடி தொடக்கம் 8 அடி வரை நீளமுள்ள Lathe Machine (லேத் மெசின்கள் ) விற்பனைக்குண்டு.
இவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(4698)

**தொடர்பு : 071 648 6814 , 077 560 2119**
**நாகராஜா இலட்சுமணதாசன்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். ஆவரங்கால் மகாஜனவின் மைந்தன்

## பிரதீபன் பஜாஸ்

**167**

நடந்து முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்று எமது கிராமப் பாடசாலைக்கும் எமது ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.
இவர் மென்மேலும் பல வெற்றிகளைப் பெற மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவரை ......

Congratulations

அப்பா பிரதீபன், அம்மா உசாயினி, தங்கை கஜீனா, அப்பப்பா இரத்தினசிங்கம், அப்பம்மா உதயகுமாரி, அம்மப்பா தங்கராசா, அம்மம்மா கமலாதேவி மற்றும் மாமன்மார்கள், சித்தாமார்கள், அத்தைமார்கள், அன்ராமார்கள், சித்திமார்கள், அண்ணன்மார்கள், தம்பிமார்கள், அக்காமார்கள், தங்கைமார்கள், மச்சான்மார்கள், மச்சினிமார்கள் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

(4704)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ குடத்தனை கரையூர் றோ. க. த. க பாடசாலையில்
கல்வி கற்கும் மாணவர்களில் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி வெட்டுப்புள்ளிக்கு
மேல் பெற்று பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக
சித்தியடைந்து பாடசாலைக்கும் ஆசிரியருக்கும் அதிபருக்கும்
பெற்றோருக்கும் பெருமை சேர்த்த
**அ. நியூட்டன் (174) , க. தனராஜ் (164)**
மாணவர்களை வாழ்த்துவதோடு
தனது முழு முயற்சியால் தரம் 1 முதல் 5 வரை மிகவும்
சிறந்த முறையில் கற்பித்து மாணவர்களை நெறிப்படுத்திய
பாடசாலை ஆசிரியை திருமதி **விஜயவனிதா தவராசா**
அவர்களையும்
அதிபர் திரு. **ஆறுமுகம் வினோதன்**
அவர்களையும் வாழ்த்தி மகிழ்கின்றோம்.



Congratulations

**அ. நியூட்டன்**
**( 174 )**

Congratulations

**க. தனராஜ்**
**( 164 )**

(C-749)

குடும்பத்தினர்
பொற்பதி, குடத்தனை.

# நட்பு, சமத்துவமான கல்விமுறைமையை அறிமுகப்படுத்துங்கள்

## முன்னாள் சபாநாயகர் கோரிக்கை

(கொழும்பு)

**சிறுவர்களுக்கு நட்புறவானதும் சமத்துவமானதுமான கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என கரு ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.**



அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவு ஒன்றிலேயே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான பாரிய போட்டிக் களமாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மாறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அபாயகரமான போட்டித் தன்மைக்கு குழந்தைகளை உட்படுத்துவதால் சிறுவர்களுக்கு நட்புறவானதும் சமத்துவமானதுமான கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டியது உடனடித் தேவையாகும் எனவும் அவர் என மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் முடக்கப்பட்ட பகுதிகள் விரைவில் வழமைக்கு

(கொழும்பு)

மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் முடக்கப்பட்ட பகுதிகள் விரைவில் வழமைக்குத் திரும்பும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் 24 பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் தற்போது தனிமைப்படுத்தல் சட்ட விதிகளுக்கமைய செயற்பட்டு வருவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அந்த பகுதிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுக்கும் இவர்கள் கட்டுப்பட்டு செயற்பட்டு வருகின்றனர். தொடர்ந்தும் இவ்வாறு செயற்பட்டால் அந்தப் பகுதிகளையும் வழமைக்குக் கொண்டுவர முடியும்.

கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் விசேட வைத்தியர்கள் அடங்கிய நடமாடும் சேவை நேற்று முன்தினம் முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் தொற்றா நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் உள்ளிட்ட நீண்டகாலமாக நோய் வாய்ப்பட்டவர்களுக்கான சிகிச்சைகளை வழங்குவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# 180 பில்லியன் தேவைக்கு 16 பில்லியன் மட்டுமே ஒதுக்கீடு

## பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

உலக சுகாதார அமைப்பு விரைவில் வெளியிட திட்டமிடப்பட்டிருந்த கொரோனாத் தடுப்பூசிக்கான எந்த ஒதுக்கீடும் வரவு-செலவுத் திட்டத்தில் செய்யவில்லை என்று பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



அமெரிக்காவில் ஏற்கனவே தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அமெரிக்கா செய்துள்ளது என குறிப்பிட்டுள்ள அவர், அது எப்போது கிடைக்கும் என்றும் பாராளுமன்றில் கேள்வியெழுப்பினார்.

தடுப்பூசியை வழங்குவதற்காக அமெரிக்கா ஒரு இராணுவத் தளபதி தலைமையிலான குழுவை நியமித்துள்ளது என்றும் இதற்காக 26 பில்லியன் அமெரிக்க டொலர்களை அந்நாட்டு அரசாங்கம் ஒதுக்கியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே இந்த செயன்முறைக்கு குறைந்தபட்சம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை அதாவது 180 பில்லியன் ரூபாவை ஒதுக்க வேண்டும் என்றாலும் தற்போது வரவு-செலவுத் திட்டத்தில் 16 பில்லியன் ரூபாய் மட்டுமே ஒதுக்கியுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

அத்தோடு முறையான திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைப்பு தேவைப்படும் ஒரு சிக்கலான செயன்முறையாக அது இருந்ததால், தடுப்பூசியை மக்களுக்கு வழங்குவதற்கான செயன்முறையை இலங்கை எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ஜ-4)

# குணமடைந்தோர் 13,271

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து நேற்று முன்தினம் மேலும் 319 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இது வரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 271 ஆக அதிகரித்துள்ளது.


5 ஆயிரத்து 616 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெறுவரும் அதேவேளை 480 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் நாட்டில் கொரோனாத் தொற்றினால் இதுவரை 74 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாராளுமன்றில் சஜித் முதலிடம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய தரவுகளை சேகரித்து ஆய்வு செய்யும் Manthri.lk இணையத் தளத்திற்கு அமைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 2020 ஒக்டோபரில் மிகவும் செயற்பாட்டு ரீதியான பாராளுமன்ற உறுப்பினராக தரப்படுத்தப்பட்டு முன்னிலையில் உள்ளார்.



அநுரகுமார திஸாநாயக்க இரண்டாம் இடத்திலும், மகிந்தானந்த அளுத்கமகே மூன்றாம் இடத்திலும், ஹர்ஷ டி சில்வா நான்காவது இடத்திலும், மொஹமட் அலிசப்ரி ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

இந்த தரப்படுத்தல் கடந்த ஒக்டோபர் 6 முதல் 23 வரை நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டங்களில் அவர்கள் வழங்கிய பங்களிப்புகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-4)

# மத்திய வங்கியின் அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனாவால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பமாகி, எதிர்வரும் ஆறுமாத காலத்திற்கு நீடிக்கக்கூடிய வகையிலான கடன்கால தாமதத்தினை வழங்குமாறு உரிமம் பெற்ற வங்கிகளிடம் மத்திய வங்கி கேட்டுக் கொண்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை காரணமாக வியாபாரங்களும் தனிநபர்களும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். அதற்குத் தீர்வைப் பெறுக்கொடுக்கும் நோக்கில் மத்திய வங்கி மேற்படி கோரிக்கையை முன்வைத்திருக்கிறது. அதன்படி தகுதியுடைய கடன்படுநர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக கடன்கால தாமதத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்த கடன் காலதாமதம் மூலதனம் மற்றும் வட்டி ஆகிய இரண்டிற்குமாக வழங்கப்படலாம். தகைமையுடைய கடன் படுநர்களில் கொவிட்-19 பரவலினால் நிதிப்பிரச்சினைகளை எதிர்கொள்ளும் அடையாளம் காணப்பட்ட வணிக செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வியாபாரங்கள், உரிமையாளர்கள், தனிநபர்கள், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்கள், சுயதொழில் வணிகங்கள் மற்றும் வெளிநாட்டு வருமானமீட்டுவோர் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

அதேபோன்று கடன்கால தாமதத்திற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையுடைய கடன் வசதிகளில் கடந்த மாதம் முதலாம் திகதியில் செயற்படும் கடன் பிரிவிலுள்ள ரூபாய் மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தவணைக் கட்டணக் கடன்கள், குத்தகை வசதிகள், அடகுபிடித்தல், மேலதிகப்பற்று, வர்த்தக நிதியிடல் மற்றும் சௌபாக்கியா கொவிட் - 19 மீளெழுச்சி வசதி நீங்கலாக ஏனைய கடன் வசதிகள் உள்ளடங்குகின்றன.

கடன்கால தாமதம் தொடர்பான மேலதிக விபரங்களை, தாம் கடன் பெற்ற வங்கிகளைத் தொடர்பு கொள்வதன் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அதற்கமைவாக எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கடன்கால தாமதத்திற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறும் மத்தியவங்கி பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (ஜ-4)

# இலங்கைவாழ் குழந்தைகள் தொடர்பில் ஐ.நா.சிறுவர் நிதியம் ஆய்வு

(ஜெனிவா)

**இலங்கையில் உத்தியோகபூர்வ வறுமை வீதம் மிகக் குறைவாக இருக்கும் போதும் பெரும்பான்மையான குழந்தைகள் நிதி ரீதியாகப் போராடும் குடும்பங்களில் வாழ்வதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.**

36 சதவீத குழந்தைகள் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு 278 ரூபாவை மாத்திரமே செலவிடும் குடும்பங்களில் வாழ்கின்றனர்.

அத்துடன் 74 வீத குழந்தைகள் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு 506 ரூபாவை செலவிடும் குடும்பங்களில் வாழ்வதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.


தமது ஆய்வுகளின்படி இலங்கையில் சிறுவர்களை முன்னேற்றுவதற்காகக் கடந்த 10 ஆண்டுகளில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் சிறுவர்கள் எங்கு வாழ்கிறார்கள். அவர்கள் எந்த அடிப்படையில் குடும்பத்தில் தங்கியுள்ளார்கள் மற்றும் அவர்களின் குடும்ப சூழ்நிலை என்பவற்றுக்கும் இடையில் பாரிய ஏற்றத்தாழ்வுகள் உள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் 70 வீதமான வீடுகளில் தமது உணவுத் தேவைக்காக 40 வீதமான செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் காரணமாகக் குறித்த வீடுகளில் சிறுவர்களுக்கான முதலீடுகளின் திறன் வரையறுக்கப்படுகிறது. இந்த நிலைமை கொரோனா வைரஸ் தாக்கத்துடன் மேலும் மோசமாகியுள்ளது.

உணவுக் கொள்ளளவைக் கட்டுப்படுத்தல், போசாக்கு மிக்க உணவில் குறைபாடு அதிகரித்துள்ளமை, செலவுகளுக்காகத் தங்க ஆபரணங்களை அடகு வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற நிகழ்வுகளும் குடும்பங்கள் மத்தியில் தாக்கம் செலுத்துவதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது. (நி-4)





**சங்கானை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய இளைஞரணியின் ஏற்பாட்டில் வடபிராந்திய சத்தியசாயி சர்வதேச நிறுவனத்தின் மேற்பார்வையில் இரத்த தான முகாம் நேற்றுச் சனிக்கிழமை சங்கானை சத்திய சாயி சேவா நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. பகவான் ஸ்ரீ சத்திய பாபாவின் 95 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு குறித்த இரத்ததான முகாம் இடம்பெற்றது. (படங்கள்:- செ. ரவிசாந்)**

# கொவிட்-19 தடுப்பூசி ஆய்வில் இலங்கைப் பெண் வைத்தியர்

(கொழும்பு)

உலகம் முழுவதும் வேகமாக பரவும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக தடுப்பூசி கண்டுபிடிக்கும் நடவடிக்கையை பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் முன்னெடுத்து வருகிறது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வின் பிரதான ஆய்வாளர்களாக இலங்கையை பூர்வீகமாக கொண்ட பேராசிரியர் மஹேஷி என்.ராமசாமி உள்ளடக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் பிறந்த அவர் பிரித்தானியாவில் வைத்தியராக கல்வியை தொடர்ந்துள்ளார்.

இந்த நிலையில் கொரோனா வைரஸிற்கு எதிராக தடுப்பூசி கண்டுபிடிப்பது தொடர்பில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வின் பிரதான ஆய்வாளராக உலகம் முழுவதும் அவர் பிரபலமடைந்துள்ளார்.

தடுப்பூசி தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற மருத்துவ வேலை தொடர்பில் "The Lancet" என்ற சஞ்சிகையில் பதிவிடப்படும் அறிக்கையில் முதன்மை இடம்ஒன்று பேராசிரியர் மஹேஷி ராமசாமிக்கு வழங்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் மஹேஷி என். ராமசாமியின் பெற்றோரும் புகழ்பெற்ற விஞ்ஞானிகளாவார்கள்.

மூன்று பிள்ளைகளின் தாயான மஹேஷி ராமசாமி, ஒக்ஸ்போர்ட் கொவிட் -19 தடுப்பூசி ஆய்வில் இணைந்துள்ளமை குறித்தும் அவரது ஆராய்ச்சிக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்றமையும் இலங்கையர்கள் அனைவரும் மிகவும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும். (நி-4)

# வாழ்வாதார கோரிக்கையை முன்வைத்து கொழும்பில் மக்கள் போராட்டம்



(கொழும்பு)

கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலொன்றான கொழும்பு - 15 மோதறை - இக்பாவத்த பகுதியைச் சேர்ந்த மக்கள் வீதிக்கிறங்கி ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள், தமது பகுதி தொடர்ச்சியாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையினால் தமது வாழ்வாதாரம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்தோடு, குடும்பமொன்றுக்கு தலா 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ள போதிலும், ஒரு மாதத்திற்கு மேலதிகமாக தமது பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட மக்கள், இந்நிலையில், மேலும் 14 நாட்கள் முடக்கப்படும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

நாளாந்தம் கூலித் தொழில்களை முன்னெடுத்து வாழ்ந்து வரும் தமக்கு 5000 ரூபா கொடுப்பனவை கொண்டு ஒரு மாதத்திற்கு மேல் எவ்வாறு வாழ்வது எனவும் குறித்த பிரதேச மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும், இவ்வாறானதொரு சூழ்நிலையில், தமக்கான வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வொன்றை பெற்றுத் தர அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் இக்பாவத்தைப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-4)

# தொழில்களை இழக்கும் அபாயத்தில் ஒரு இலட்சம் பணியாளர்கள்

(கொழும்பு)

இறக்குமதித் தடையை மீள் பரிசீலனை செய்யுமாறு வாகன இறக்குமதியாளர் சம்மேளனம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது இலங்கையின் பொருளாதாரத்தில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும் என்றும் குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வாகன இறக்குமதியாளர் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இறக்குமதிகளுக்கான தடை காரணமாக வாகன இறக்குமதியாளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வர்த்தகத் துறையைச் சேர்ந்தவர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

வாகன இறக்குமதியாளர்களால் அந்தத் துறையில் கணக்காளர்கள், விற்பனை பிரதிநிதிகள், சந்தைப்படுத்தும் அதிகாரிகள், சாரதிகள், சுத்திகரிப்பாளர்கள், பாதுகாப்பு பணியாளர்கள் என்ற பல்வேறு தொழில் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அதனை தவிர சேவைகள் பக்கத்தில் சுத்தப்படுத்துவோர் உட்பட்ட பல துறையினருக்கு தொழில் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் யாவரும் வாகன இறக்குமதியிலேயே தங்கியுள்ளனர்.

தற்போது சில வாகன இறக்குமதியாளர்களின் கண்காட்சி அறைகளில் ஒரு வாகனம் கூட கையிருப்பில் இல்லை.

இது அந்த இறக்குமதியாளர்கள், தமது பணியாளர்களுக்கு வேதனங்களை வழங்குவதில் பாரிய சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே தொடர்ந்தும் அரசாங்கத்தின் வாகன இறக்குமதி தடை தொடருமானால் சுமார் ஒரு இலட்சம் அளவான நேரடி பணியாளர்கள் தொழில்களை இழக்க வேண்டியேற்படும்.

அத்துடன் அவர்களை நம்பியிருக்கும் 4 இலட்சம் வரையிலான குடும்ப அங்கத்தவர்கள் பாரிய நெருக்கடிகளுக்கு உள்ளாவர் என்றும் வாகன இறக்குமதியாளர் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-4)

# கொரோனா நெருக்கடிக்கு மத்தியிலும் மக்களுக்கான பணிகள் தொடரும்

## பிரதமர் உறுதி



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தில் அபிவிருத்தி நிர்மாணப் பணிகள் அரசியல் பழிவாங்கலுக்காக இடை நிறுத்தம் செய்யப்பட்டதன் விளைவை நாட்டு மக்கள் அனுபவித்துள்ளார்கள். எனினும் தற்போது கொவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியிலும் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பேலியகொட புதிய மெனிங் மொத்த விற்பனை மத்திய நிலையத்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைத்ததன் பின்னர் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது ஆட்சிக் காலத்தில் ஆரம்பித்த அபிவிருத்தி நிர்மாணப் பணிகளை எமது அரசாங்கம் முழுமைப்படுத்துவது மகிழ்வுக்குரியது. 2 ஏக்கர் நிலப்பரப்பில் 4 அடுக்கு மாடிகளைக் கொண்டதாக புதிய மெனிங் மொத்த விற்பனை மத்திய நிலையம் 6.5 பில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மையின் விளைவை நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ளனர்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக விவசாயிகள் தங்களின் உற்பத்திகளை விற்பனை செய்து கொள்வதில் பாரிய நெருக்கடியை எதிர் கொண்டார்கள். நெருக்கடி நிலையில் அரசாங்கம் சிறந்த தீர்மானங்களை எடுப்பது அவசியமாகும். 2019 ஆட்சி மாற்றத்தினை தொடர்ந்து இந்த அபிவிருத்திப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன.

நெருக்கடியான சூழ்நிலையிலும் அரசாங்கம் மக்களுக்கான அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கும். கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை நிச்சயம் வெற்றி கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்

# தொலைபேசி அழைப்பு குறித்து

## விமானப்படை வீரரின் முக்கிய சாட்சியம்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெஜட் வீதி வீட்டுடன் தொடர்புபட்டு, முன்னாள் தேசிய உளவுச் சேவை பிரதானி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன, உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை தாக்குதல்கள் இடம்பெறுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னர் மூன்று தடவைகள், முன்னாள் ஜனாதிபதியின் பிரதான பாதுகாப்பு அதிகாரி ஊடாக முன்னாள் ஜனாதிபதியை தொடர்பு கொண்டுள்ளதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் அண்மையில் வெளிப்படுத்தப்பட்டது.**

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூரில் இருந்தபோது, இவ்வாறு உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களின் முதல் தற்கொலை தாக்குதல் இடம்பெற முன்னர் முற்பகல் 7.57, மு.ப.7.59, மு.ப. 08.01 இற்கு இவ்வாறு தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெஜட் வீதி வீட்டில், தொலைபேசி கட்டமைப்பு தொகுதியில், இயக்குநர்களாக குறித்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி காலை 8.00 மணி முதல் சேவையில் இருந்த விமானப்படை வீரரின் சாட்சியத்துக்கு அமைய இந்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

முற்பகல் 7.59 மணிக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன தொடர்புபட்ட தொலைபேசி அழைப்பு, 157 செக்கன்களும், மு.ப.8.01 இற்கு தொடர்பு பட்ட தொலைபேசி அழைப்பு 93 செக்கன்களும் நீடித்ததாக குறித்த விமானப்படை வீரர் சாட்சியமளித்தார்.

தாக்குதல்களின் பின்னரும் நிலந்த ஜயவர்தன, பிற்பகல் 1.10 மணிக்கு 687 செக்கன்கள் நீண்ட அழைப்பு உள்ளிட்ட பல அழைப்புக்களை எடுத்ததாக வும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# பாடசாலைகள் மீளத்திறக்கும் தீர்மானம் பொருத்தமற்றது

(கொழும்பு)

வைரஸ் பரவலின் ஆரம்ப கட்டத்திலேயே அரசாங்கம் முறையான தீர்மானங்களை எடுத்திருந்தால் கொரோனா வுடன் வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என்று கூற வேண்டியேற்பட்டிருக்காது.

அபாயம் அதிகரித்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் பாடசாலைகளை ஆரம்பிக்க தீர்மானித்திருப்பது பொருத்தமற்றது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கம்பஹா மாவட்டத்தில் வைரஸ் பரவ ஆரம்பித்து தற்போது கொழும்பு அபாய கட்டத்தை அடைந்துள்ளது.

அரசாங்கம் உரிய நேரத்தில் உரிய தீர்மானத்தை எடுத்திருந்தால் இவ்வாறான பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேர்ந்திருக்காது.

அபாய நிலைமையை அவதானத்தில் கொண்டு கொழும்பை முழுமையாக முடக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

மக்களின் வாழ்க்கையுடன் விளையாட வேண்டாம் என்று அரசாங்கத்திடம் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு தற்போதாவது உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் மேலும் ஸ்திரப்படுத்தப்படும் என்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் பாடசாலைகளை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இந்த தீர்மானம் மிகவும் அபாயமானது என்பதே எமது நிலைப்பாடு.

எனவே எடுத்துள்ள இந்த தீர்மானம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு அரசாங்கத்திடம் கோருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு

(கொழும்பு)

கல்வி நடவடிக்கைகள் நாளை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதன்படி அனைத்து பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்பு திட்டங்களை முன்னெடுக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு நேற்று (சனிக்கிழமை) தெரிவித்துள்ளது.

மேலும், பாடசாலைகளில் நுளம்பு ஒழிப்பு பிரசாரங்களுக்கு உதவுமாறு அந்தந்த சுகாதார அலுவலர்களுக்கு சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (ஜ-4)



பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கடந்த 18 ஆம் திகதி தனது 75 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடியிருந்தார். பிரதமரின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு விசேடமான பரிசு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இதன்படி முன்னாள் ஜனாதிபதியான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முதலில் பயன்படுத்திய வாகனத்தை அவரிடம் இருந்து கொள்வனது செய்த குடும்பத்தினர் அந்த வாகனத்தை மீண்டும் பிரதமரிடம் கையளித்துள்ளனர். (ஜ-4)

# அனைத்து பாடசாலைகளுக்கும் பொதுக் கொள்கை பின்பற்றப்படும்


(கொழும்பு)


முஸ்லிம் அறநெறி (மதரசா) பாடசாலைகளுக்கும் நாட்டின் ஏனைய அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகள் போல் கல்வியை வழங்கும் சுதந்திரம் இருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடு என கல்வியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் அரச, தனியார், சர்வதேச பாடசாலைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் சம்பந்தமாக பொதுவான கொள்கையை கல்வி விடயத்தில் நாங்கள் பின்பற்றுகிறோம். எந்தவிதமான பாடசாலையாக இருந்தாலும் அதற்கு சுதந்திரத்தை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)








நல்லூர் கந்தசுவாமி



ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர்



தொண்டைமனாறு செல்வச் சந்நிதி

வரலாற்று சிறப்பு மிக்க சூரன்போர் உற்சவ நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சுகாதார முறைகளை பின்பற்றி பக்திபூர்வமாக இடம்பெற்றது.

(படங்கள்-சிவசாந்தன், தவசீலன், மகாலிங்கம்)

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்-2020

**யா/ புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை**

வ.அபிசாயினி-182, மி.ஐஸ்வரியா-165.

**யா/ மாதகல் சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை**

அ.கயிற்றோ-174, நி.நிலைக்ஷனா-167, யே.தனுசியா-165, த.தனுஷ்கா-163.

**கிளி/மாசார் அ.த.க.பாடசாலை**

ஜெ.ராகவி-180, கு.லதுர்ஜிகா-178, து.தனுசயன்-167.

**யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலை**

சி.மேசாக் - 177, செ.மானசா - 173, றா.வர்சிகன் - 162.





பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை, ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை மற்றும் யாழ்.பல்கலைக்கழக இந்து மன்றத்தினரின் ஏற்பாட்டில் சைவப் பெருவள்ளலாரும் பரமேஸ்வராக் கல்லூரியின் தாபகருமாகிய சேர்.பொன். இராமநாதனின் 90 ஆவது குரு பூசை நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

(படங்கள்:- சிவசாந்தன்)

### ஜனாதிபதி தலைமையில் ஆரம்பமானது

# தேசிய மர நடுகை திட்டம்



(கொழும்பு)

இரண்டு மில்லியன் மரக்கன்றுகளை நடும் ஹ°ஸ்மதென துரு தேசிய மர நடுகை திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுபீட்சத்தின் நோக்கு அரச கொள்கை பிரகடனத்தின் படி, நாட்டின் வனப்பகுதியை 30 வீதமாக அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ப சுற்றாடல் அமைச்சினால் ஹ°ஸ்மதென துரு நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

வளிமண்டலத்தில் கார்பனீரொட்சைட்டின் அளவைக் குறைத்து, ஒட்சிசனின் அளவை அதிகரிக்கும் நோக்கத்துடன், அந்தந்த பிரதேசங்களுக்கு பொருத்தமான மரங்கள் நடப்படுகின்றன.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் 2 மில்லியன் மரக்கன்றுகளை நடுவதற்கு சுற்றாடல் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபையும் சுற்றாடல் அமைச்சும் பாதுகாப்பு தலைமையகம் மற்றும் இலங்கைஇராணுவமும்இணைந்து செயற்படுத்துகின்றன.(நி-4)

# அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள்; பல இலட்சம் பெறுமதியான வலைகள் நாசம்

(அராலி)

மாதகல் கடற்கரையில் இருந்து சுமார் ஆறு கிலோ மீற்றர் எல்லைக்குள் நேற்றைய தினம் உட்புகுந்த இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் மாதகல் பகுதி மீனவர்களின் வலைகளை நாசம் செய்துள்ளன.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கையில்,

எமது தொழில் முதல்கள் இன்று நேற்று மட்டுமல்ல பல வருடங்களாக தொடர்ந்து இந்திய மீனவர்களால் நாசம் செய்யப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

இன்றும் எங்கள் 19 பேரின் பல இலட்சம் பெறுமதியான வலைகள் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளால் நாசம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடற்படையினரிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் பல தடவைகள் முறையிட்டும் எவ்வித பயனும் கிட்டவில்லை.

இதனால் நாங்கள் மிகவும் கஷ்டத்தின் மத்தியிலேயே தொழில் செய்து வருகின்றோம். எமது வாழ்வாதாரமானது மிகவும் பாதிப்படைந்துள்ளது. ஒரு கட்டத்தில் நாங்கள் தொழிலினைக் கைவிட்டு விடுவோமா என்ற ஐயமும் எழுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் எமது பிரச்சினைகளை கருத்தில் எடுத்து அதற்கு சரியான தீர்வினைப் பெற்றுத் தருமாறு வேண்டி நிற்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.(நி-4-104)

# மோட்டார் சைக்கிள் திருட்டு

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் வைத்தியசாலை வளாகத்தில் களவு போயுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றுபவர் தன்னுடைய மோட்டார் சைக்கிளை வைத்தியசாலை வளாகத்தில் நிறுத்தி வைத்து விட்டு கடமைக்குச் சென்றுள்ளார். திரும்பி வந்து பார்க்கும் போது மோட்டார் சைக்கிள் களவு போய் உள்ளது தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (நி-4-60)

# டெங்கு, எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் டெங்கு மற்றும் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்திருப்பதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தாண்டில் மாத்திரம் எலிக்காய்ச்சல் காரணமாக 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமத்திய, வடமேல், சப்ரகமுவ மாகாணங்களில் எலிக் காய்ச்சல் அதிகளவில் பரவி வருவதாகவும் சுகாதார பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இரத்தினபுரியில் பெரும்பாலான மக்களின் ஜீவனோபாய தொழிலாக விவசாயம் மற்றும் சுரங்கத் தொழில்கள் காணப்படுகின்றன.

இதன் காரணமாகவே அங்கு பெரும்பாலான நபர்கள் எலிக்காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நிலையில் கொவிட்-19 வைரஸ் தொற்றைப் போலவே எலிக்காய்ச்சல், டெங்குக்காய்ச்சல் தொடர்பிலும் பொதுமக்கள் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என சுகாதார அமைச்சு மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஜ-4)


Canada VISA
நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

STUDENT VISA
- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

VISIT VISA பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

REFUSED VISA உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

Hotline: 0777-761 346

Sponsor Letters
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute
Step towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
10 வருட கால நம்பிக்கையான சேவை
(C-1109)



சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை AAA Gold Center.

0765684346 (C-1110)


## வேலணை பிரதேச சபை

### பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத நாம்பன் கட்டாக்காலி கால்நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இடம்:- வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்

காலம்:- 23.11.2020 திங்கட்கிழமை மு.ப. 11.00 மணி

- ஏலத்தில்கலந்துகொள்ளவிரும்புவோர்குறித்த இடத்தில்உரியகட்டணத்தைசெலுத்திஏலத்தில்பங்குகொள்ளலாம்.
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினை செலுத்தி உரிய பட்டியலிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச்செல்ல வேண்டும்.

தொடர்புகளுக்கு:- 021 2211505 (C-743)

நமசிவாயம் கருணாகரமூர்த்தி
தவிசாளர், வேலணை பிரதேச சபை.


உங்கள் நண்பர்களுக்கு உதவிடுங்கள்

1 Help → வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்கள் நண்பர்களுக்கு இந்த → மதிப்புமிக்க தகவலை பகிருங்கள்

2 → இலங்கைக்கு வராமலேயே உங்கள் கனவு இல்லத்தை வஜிர ஹவுஸ் மூலமாக கட்டுவிக்கலாம்

3 → 55 இலட்சம் முதல் சொகுசு வீடுகள் (இலகு தவணை வசதிகள் உண்டு)

→ யாழ்ப்பாணம், → வவுனியா
→ முல்லைத்தீவு → மன்னார்
→ கிளிநொச்சி

4 → உங்கள் வருகையின் போது குடிபுகலாம்

5 → ரூ10,000 செலுத்தி வேலை தொடங்கவும் ஆன்லைன் பணம் செலுத்தலாம் VISA MasterCard

~~128 இலட்சம்~~ 118 இலட்சம் 10 இலட்சம் தள்ளுபடி✓





24 மணிநேர சேவை (பகல்/இரவு)
0094701757736

→ யாழ்ப்பாண அலுவலகம்
54/11, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

மேலும் வடிவமைப்புகளை தேர்ந்தெடுப்பதற்கு www.vajirahouse.net

கட்டப்பட்ட அழகான வீடுளை பார்வையிட YouTube → Vajira House

1916 ம் ஆண்டு தொடக்கம், 104 வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிர்மாண துறையினர்

வஜிர ஹவுஸ்

54/11, நல்லூர் கச்சேரி வீதி யாழ்ப்பாணம்

070 1757736

(C-738)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1973 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: கேட்டை உயரம்: 5'8"
தகைமை/தொழில்:க.பொ.த.சா/த. பிரான்ஸில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் மணமகன் விவாகரத்துப் பெற்றவர் 3 பிள்ளைகள் உண்டு
தொ.இ: **B/11394**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: 27 1/2 செவ் 11 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: **Civil Engineer in London**
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: **B/11396**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: 33 1/4 செவ் 5 இல் உயரம்: 5'11"
தகைமை/தொழில்: மரைன் என்ஜினியர் (தனியார்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: **B/11398**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 8 செவ் 11 இல் உயரம்: 5'9"
தகைமை/தொழில்:க.பொ.த.உ/த. கிராம சேவகர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: **B/11399**

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 18 செவ் 11 இல் உயரம்: 5.2
தகைமை/தொழில்: பட்டதாரி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகத்தர்
தொ.இ: **G/1824**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 28 1/4 செவ் 9 இல் உயரம்: 4.3
தகைமை/தொழில்: **SLEAS,** பிரதேச செயலர்
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர் போன்றோர்
தொ.இ: **G/1834**

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 36 செவ் 7 இல் உயரம்: 5.6
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.
எதிர்பார்ப்பு: பொருத்தமான மணமகன்
தொ.இ: **G/1837**

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: 37 செவ் 10 இல் உயரம்: 5.4
தகைமை/தொழில்: பட்டதாரி அரச உத்தியோகம்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகத்தர் மணமகள் விவாகரத்தானவர்
தொ.இ: **G/1852**

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# புலம்பெயர் தமிழர்கள் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்

## சாணக்கியன் சபையில் சுட்டிக்காட்டு




**(கொழும்பு)**

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் புலம்பெயர் தமிழர்கள் ஊடாக நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்ப முடியுமென பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு- செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் நாட்டுக்கு முதலீடுகள் வர ஆரம்பிக்கும்.

மேலும், 1970 கள் முதல் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வரவு- செலவுத்திட்டங்களிலும் பாதுகாப்பிற்காகவே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் தான் நாம் இவ்வளவு கடனாளியாக இருக்கிறோம்.

இனப்பிரச்சினைக்கு தான் நாம் முதலில் தீர்வு காண வேண்டும்.

அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும். முதலீடுகளை கொண்டு வருவதற்கு மாத்திரம் வரவு-செலவுத் திட்டம் தேவையில்லை.

இதேவேளை, வெளிநாடுகளின் உதவியின்றி எம்மால் செயற்படவோ பொருளாதாரத்தை பலப்படுத்தவோ முடியாது. தேசிய பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட்டால் நாட்டுக்கு முதலீடுகள் வரும்" என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# கொரோனா தொற்றைவிட விபத்தில் உயிரிழப்போர் தான் அதிகம்



(கொழும்பு)

தினமும் வீதி விபத்துக்களினால் குறைந்தது எட்டு முதல் ஒன்பது பேர் வரை உயிழப்பதாக உள்நாட்டு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், முறையே 2018 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 151 இறப்புகளும் 2019 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 889 மரணங்களும் பதிவாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா தொற்றினால் ஏற்படும் உயிரிழப்புக்கள் மற்றும் போரினால் ஏற்பட்ட உயிரிழப்புக்களை விட விபத்துக்களால் தற்போது ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# தனியார் துறையினரின் முறைப்பாடுகளுக்கு தீர்வு

(கொழும்பு)

கொரோனா இரண்டாம் அலைக்கு மத்தியில் தனியார் துறை தொழிலாளர்களினால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத்தர தொழில் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மாவட்ட செயலாளர் அலுவலகங்களினூடாக குற்றச்சாட்டுகள் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் பிரபாத் சந்த்ரகீர்த்தி தெரிவித்தார்.

கிடைத்த முறைப்பாடுகளில் சம்பளம் வழங்கப்படாமை உள்ளிட்ட பல பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் சம்பள பிரச்சினை தொடர்பில் தனியார் துறை நிறுவன உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் கோவை அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மேல் மாகாணத்திலிருந்து கொரோனா பரவாது என்பதற்கு உத்தரவாதம் அளிக்க முடியாது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கைவிரிப்பு

(கொழும்பு)

மேல்மாகாணத்திலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கு கொரோனா தொற்று ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் அளிக்க முடியாதென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினது செயலாளர் வைத்தியர் ஷெனல் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், 'மேல்மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கொரோனா தொற்றுத் தொடர்பான முழுமையான தகவல்களையும் வழங்க வேண்டும்.

இல்லையெனில் மேல் மாகாணத்தில் இருந்து ஏனைய பிரதேசங்களுக்கு கொரோனா தொற்று ஏற்படாது என்ற எந்த உத்தரவாதமும் அளிக்க முடியாது.

மேல் மாகாணம் மிகவும் ஆபத்தான பகுதியாக இருப்பதால், கொரோனா தொற்றாளர்கள் குறித்த முழுமையான தரவுகள் உடனடியாகச் சேகரிக்கப்பட வேண்டும்.

மேல் மாகாணத்திற்கென விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு கொரோனா தொற்றாளர்கள் குறித்த தனிப்பட்ட விபரங்களும் தாமதமின்றி சேகரிக்கப்பட வேண்டும்.


இது நோயாளர்களுக்கான சிகிச்சைகளை தாமதமின்றி வழங்குவதற்கு வழி ஏற்படுத்துவதுடன், புதிய தொற்றாளர்களை உடனடியாக அறிந்து கொள்வதற்கு இலகுவாக இருக்கும்.

இதுவரை கொரோனா தொற்றாளர்கள் தொடர்பான எந்தவொரு தரவுகளும் மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் சேகரிக்கப்படவில்லை. இது மேலும் ஆபத்தான நிலைமைக்கே வழிவகுக்கும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 160 | 140 |
| தக்காளி | 140 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 90 | 60 |
| கோவா | 60 | 70 | 80 | 100 |
| கரட் | 140 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 70 | 60 | 80 |
| புடோல் | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 280-320 | 320 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 100 |
| பயற்றங்காய் | 400 | 300 | 400 | 300 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 250 | 250 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 | 160 |
| போஞ்சி | 200 | 180 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 180 | 180 | 180 | 180 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60-70 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 250 | — | — | — |
| முள்ளங்கி | 60 | 70 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | — | 100 |

# இதுவரையில் 393 பேர் கைது



(கொழும்பு)

முகக் கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை கடைப்பிடிக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாத்திரம் 34 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் பிரகாரம் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றாத நபர்களை கைது செய்யும் நடவடிக்கை கடந்த மாதம் 30 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் 393 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## இராசிபலன்

22.11.2020
கார்த்திகை 07, ஞாயிற்றுக்கிழமை
அட்டமி பின்னிரவு 3.19 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 4.06 மணிவரை
சுபநேரம் 9.10-10.40 மணிவரை
இராகுகாலம் 4.40-6.10 மணிவரை
சந்திராஷ்டமம்: புனர்பூசம்,பூசம்

வளவன்


மேஷம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


ரிஷபம்

தொழில் வளர்ச்சிக்கு வித்திடுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாய்ப்புக்கள் உங்களைத்தேடி வரலாம், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும்.


மிதுனம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கடகம்

நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலையுண்டு, கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டியநாள்.


சிம்மம்

உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.


கன்னி

கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


துலாம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.


விருச்சிகம்

குடும்பத்தினர்களின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் மேலோங்கும் , நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.


தனுசு

உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.


மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், தொலைபேசி வழியில் சுப தக வல்கள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதி ப்பும் மரியாதையும் உயரும் நாள்.


கும்பம்

சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள்,விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



மீனம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

நியாயமான கோபத்தை வீணாகச் செலவழித்துவிடாதே.

# ரூபாயின் பெறுமதியை அதிகரிக்கவே இறக்குமதியைக் கட்டுப்படுத்தினோம்

## வாசுதேவ



**(கொழும்பு)**

**எமக்குள்ள மக்கள் ஆணையினைக் கொண்டு அமெரிக்கா கொண்டுவந்த ஜெனிவா தீர்மானத்தில் இருந்து வெளியேறவும், இந்த நாட்டில் நல்லிணக்கத்தையும், மனித உரிமைகளையும், நியாயத்தை கடைப்பிடிக்கவும் நடவடிக்கை எடுப்போம் என்பதையும் அரசாங்கமாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம் என நீர் வளங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சபையில் தெரிவித்தார்.**

இன்றுள்ள நெருக்கடியான பொருளாதார நிலைமையில் 20 பில்லியன் ரூபாவிற்கு அதிகமான இறக்குமதிகளை செய்ய முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, சபையில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது இறக்குமதியை கட்டுப்படுத்த வேண்டாம் என ஐரோப்பிய ஒன்றியம் அச்சுறுத்தல் விடுத்துள்ளது. அவர்களா எமக்கான வெளிநாட்டு கையிருப்பை தருகின்றனர்.

நாட்டில் இறக்குமதியை அளவுக்கதிகமாக இடமளித்து எமக்கு தேவையானவற்றை இறக்குமதி செய்யக்கூறியும் அதற்காக தேவையான கடன்களை தாம் தருவதாக கூறினர்.

இதுதான் கடந்த ஆட்சியில் இடம்பெற்றது. இதனால் தான் ரூபாவின் பெறுமதி மோசமான விதத்தில் வீழ்ச்சி கண்டது. இதனால் வட்டி வீதம் அதிகரித்தது.

இதனையெல்லாம் குறைக்க வேண்டும் என்றும் ரூபாவின் பெறுமதியை அதிகரிக்க வேண்டும் என்ற காரணத்தினால் தான் நாம் இறக்குமதியை கட்டுப்படுத்தியுள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கேள்விகளுக்கு எமது மக்கள் கடந்த தேர்தலில் பதில் கூறியுள்ளனர். மக்கள் ஆணையுடன் நாம் இதற்கான பதிலை கூறியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# பொலிஸ்மா அதிபராக சி.டி.விக்ரமரத்ன

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்ற பேரவைக்கு பதில் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றும் சி.டி. விக்ரமரத்னவின் பெயரை பரிந்துரைத்துள்ளார்.

அந்தவகையில், நாளை திங்கட்கிழமை பாராளுமன்ற பேரவை கூடும்போது இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டு பின்னர் ஜனாதிபதியினால் நியமனம் முறைப்படி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து, அப்போதைய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிற்கு கட்டாய விடுப்பு வழங்கப்பட்டதை அடுத்து 33 வருடம் அனுபவம் கொண்ட சி.டி. விக்ரமரத்ன பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டார்.

இதனை அடுத்து பூஜித ஜயசுந்தர கடந்த மார்ச் மாதம் ஓய்வு அறிவித்ததை தொடர்ந்து பதில் பொலிஸ்மா அதிபராகவே பதவி வகித்து வரும் சி.டி. விக்ரமரத்ன இதற்கு முன்னரும் 13 முறை அந்தப் பதவியை இடைக்காலங்களில் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கடற்படையினர் 19 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினர் 19 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனாத் தொற்று வெலிசறை கொத்தணியாக விரிவாக்கம் பெற்ற போது இலங்கைக் கடற்படையினரில் பெரும் எண்ணிக்கையில் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியிருந்தனர்.

இந்நிலையில் தற்போதைய கொரோனாத் தொற்று பரவலில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியான கடற்படையினரது எண்ணிக்கை 19 ஆக அதிகரித்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 411 பேர் நாட்டிற்கு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த 411 இலங்கையர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை வந்தடைந்தனர்.

கட்டார்- டோஹாவிலிருந்து 332 பேரும் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 21 பேரும் இந்தியாவிலிருந்து 58 பேரும் இவ்வாறு நாட்டை வந்தடைந்தனர்.

குறித்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர். (ஜ-4)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 16.11.2020 - 15.12.2020



**சா**ர்வரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் விரய ஸ்தானத்திலும் விரயாதிபதி புதன் உங்கள் இராசியிலும் சஞ்சரிக்கின்றார் கள். சகாய ஸ்தானாதிபதி குரு சனி வீட்டிலும், சனி குரு வீட்டிலுமாக பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கின்றார் கள். எனவே இம்மாதம் உடன்பிறப் புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் எதிர்பார்த்தபடி அமையலாம்.

இதன் விளைவாக நல்ல பலன்கள் இல்லம் தேடி வரும். ஏற்கனவே உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் புதனோடு சுக்கிரன் சேருவதால் 'புத-சுக்கிர யோகம்' ஏற்படுகின்றது. எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். உத்தியோகத்தில் சம்பள உயர்வோடு கூடிய அழைப்புகள் வரலாம்.

### செவ்வாய் வக்கிர நிவர்த்தி காலம்

நவம்பர் 24 ஆம் திகதி, மீனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே அதன் வக்கிர நிவர்த்தியாவது, உங்களுக்கு மிகுந்த நன்மைகளைக் கொடுக்கும். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். கல்யாண முயற்சியில் இதுவரை இருந்த தடை அகலும்.

### விருச்சிக புதன் சஞ்சாரம்

வந்து சேரும் இந்த நேரத்தில் விரயத்திற்கேற்ப பண வரவும் கிடைத்துக் கொண்டேயிருக்கும். வீடு மாற்றங்களும் உத்தியோக மாற்றங்களும் விரும்பும்படி அமையும். வெளிநாட்டில் இருந்து நீங்கள் எதிர்பார்த்த நல்ல தகவல்களும் வந்து சேரும்.




### மேஷ செவ்வாய் சஞ்சாரம்

டிசெம்பர் 9 ஆம் திகதி, மேஷ இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். மேஷ இராசி, செவ்வாய்க்கு சொந்த வீடாகும். உங்கள் இராசிக்கு சப்தமாதிபதியான செவ்வாய், சப்தம ஸ்தானத்தில் சஞ்ச

தொழில் தொடங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள்.

### தனுசு புதன் சஞ்சாரம்

டிசெம்பர் 12 ஆம் திகதி, தனுசு இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 3 ஆம் இடத்திற்கு வரும்பொழுது உடன்பிறப்புகளின் திருமணம் சிறப்பாக நடைபெறும். தொழில் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும். இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து மகாலட்சுமியை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வசதிகள் பெருகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மறையும். தாய்வழி ஆதாயம், சகோதர வர்க்கத்தினரின்

## உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்

### துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன், நவம்பர் 17 ஆம் திகதி உங்கள் இராசிக்கே வரப்போகின்றார்.

நவம்பர் 25 ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் தன ஸ்தானத்திற்கு இப்பொழுது வரப்போகின்றார். விரயாதிபதியான புதன், தன ஸ்தானத்திற்கு

ரிக்கும் இந்த நேரத்தில் சகோதர ஒற்றுமை பலப்படும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக நடைபெறும். வீடு வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலர், 'விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய

ஒத்துழைப்பு திருப்திகரமாகவே இருக்கும். செவ்வாய் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு, உங்கள் செயற்பாடுகள் அனைத்திலுமே வெற்றி கிடைக்கலாம். பணிபுரியும் பெண்களுக்கு சக பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**சா**ர்வரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் வீற்றிருந்து சுக்கிரனால் பார்க்கப்படுகின்றார். தன ஸ்தானத்தில் சனியும் சகாய ஸ்தானத்தில் குருவும் வீற்றிருந்து பரிவர்த்தனை யோகம் பெறுகின்றார்கள். எனவே இம்மாதம் ஒரு இனிய மாதமாகவே அமையும்.

உள்ளவர்களின் ஆதரவோடு எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். இடமாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை எதிர்பார்த்தபடியே அமையும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

### செவ்வாய் வக்கிர நிவர்த்தி காலம்

நவம்பர் 24 ஆம் திகதி, உங்கள் இராசிநாதன் செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். எனவே இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். இட விற்பனையின் மூலம் தனஇலாபம் கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து ஒவ்வொரு செயல்களையும் நல்லவிதமாக முடித்துக்கொடுப்பர். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாகவும் உத்தியோகம் சம்பந்தமாகவும் நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி தரும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

### விருச்சிக புதன் சஞ்சாரம்

லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் இலாபம் உண்டு.

### மேஷ செவ்வாய் சஞ்சாரம்

டிசெம்பர் 9 ஆம் திகதி, மேஷ இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். மேஷ இராசி, செவ்வாய்க்கு சொந்த வீடாகும்.




உங்கள் இராசிநாதன் பலம்பெறும் இந்த நேரத்தில் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். எதிர்பார்த்த லாபம் தொழிலில் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வும்

ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் தொழிலில் தன இலாபம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக கிடைக்கும்.

அலுவலகத்தில் தாமதித்த காரியங்கள் இனி தடையின்றி நடைபெறும். கௌரவப் பதவிகள் தேடிவரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வும் சலுகைகளும் கிடைத்து சந்தோஷத்தை வழங்கும்.

இம்மாதம் சஷ்டி விரதமிருந்து சண்முகநாதப் பெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். மனதில் உற்சாகமும், செயலில் சுறுசுறுப்பும் ஏற்படும். கணவன் -மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும்.

## இம்மாதம் ஒரு இனிய மாதமாகவே அமையும்

### துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சாரம்

நவம்பர் 17 ஆம் திகதி, துலாம் இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். விரயாதிபதி விரய ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம், லாபாதிபதி புதனோடு இணைந்து 'புத-சுக்கிர யோக'த்தை உருவாக்குகின்றார். எனவே ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். அதிகாரப் பதவியில்

நவம்பர் 25 ஆம் திகதி, விருச்சிக இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு அஷ்டம லாபாதிபதியாக விளங்குபவர் புதன். உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் சூரியனோடு புதன் இணைந்து 'புத-ஆதித்ய யோக'த்தை உருவாக்குவதால், அரசு தொடர்பான காரியங்களில் அனுகூலங்கள் கிடைக்கும். இல்

சலுகைகளும் கிடைத்து சந்தோஷத்தை வழங்கும்.

### தனுசு இராசியில் புதன் சஞ்சாரம்

டிசெம்பர் 12 ஆம் திகதி, தனுசு இராசிக்குப் புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு லாபாதிபதியான புதன், தன

ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினரின் ஆதரவு திருப்தி தரும். பணிபுரியும் பெண்களுக்கு படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும். வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். வராஹி வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

(தொடரும்)

## அங்கீகாரம் கிடைக்கும்வரை

# கொரோனா தடுப்பூசிகளை மக்களிடம் பரிசோதிக்க இடமளிக்க முடியாது

## நாமல் திட்டவட்டம்

**(கொழும்பு)**

**கொரோனாவிற்கான தடுப்பூசிகளை பயன்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனமோ, உலக நாடுகளோ இன்னும் முழுமையான அங்கீகாரத்தை கொடுக்காத நிலையில் தடுப்பூசிகளை எமது மக்களிடம் பரிசோதித்துப்பார்க்க இடமளிக்க முடியாது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, 2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்ட போது ஏனைய நாடுகள் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நிலையில் நாம் எமது நாட்டையும் மக்களையும் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தோம். இரண்டாம் அலையாக இப்போது மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் உருவாகியுள்ளது.

இன்றுவரை சரியான தீர்மானங்கள் முன்னெடுத்து வைரஸை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தும் வருகின்றோம். எனினும் தடுப்பூசி ஏன் கொண்டுவரவில்லை என்ற கேள்வி எழுகின்றது.

ஆனால் கொரோனாவுக்கான தடுப்பூசி குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் இன்னமும் அங்கீகாரம் கொடுக்கவில்லை, ஏனைய நாடுகளும் கூட இன்னமும் தடுப்பூசியை உறுதிப்படுத்தவில்லை, அவ்வாறான நிலையில் தடுப்பூசியை எமது மக்களிடம் பரிசோதித்துப்பார்க்க எம்மால் இடமளிக்க முடியாது.

உலக சுகாதார ஸ்தாபனம் இந்த தடுப்பூசி குறித்த அங்கீகாரத்தை உறுதிப்படுத்தும் நிலையில் நாம் எமது மக்களுக்கு சரியான தடுப்பூசியை வழங்குவோம் என தெரிவித்தார். (ஜ-4)

# கடன்களை நம்பியே முன்னோக்கி நகரலாம்

## தவிர்க்க முடியாது என்கிறார் தயாசிறி

(கொழும்பு)

சர்வதேச கடன்களில் எமது நாடு சிக்கியுள்ள போதிலும் கடன்களை நம்பியே எம்மால் முன்னோக்கி நகர முடியும், கடன்களை தவிர்த்து எம்மால் பயணிக்க முடியாது என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர சபையில் தெரிவித்தார்.

வரவு- செலவு திட்டத்தில் குறைபாடுகள் உள்ளது உண்மையே. ஆனால் அதனை சகலரும் ஏற்றுக்கொண்டு பயணித்தாக வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் முழு உலகமுமே வீழ்ச்சி கண்டுள்ள நிலையிலேயே எமது அரசாங்கம் வரவு-செலவு திட்டமொன்றை முன்வைத்துள்ளது. இதில் பல குறைபாடுகள் இருக்கலாம், அதற்கு ஜனாதிபதியோ பிரதமரோ காரணம் அல்ல. அனைவருமே ஒன்றிணைந்து போராடினால் மாத்திரமே எம்மால் மீள முடியும்.

உலகமே இன்று பொருளாதார ரீதியில் வீழ்ச்சி கண்டுள்ளது. ஐரோப்பிய நாடுகள், ஆசிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் அனைத்துமே வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் எமக்கு பலமான வரவு-செலவு திட்டத்தை முன்வைக்க முடியாது.

எதிர்க்கட்சிகள் இந்த வரவு-செலவு திட்டத்தை தொடர்ச்சியாக விமர்சித்து வருகின்றன. எமக்குள்ள கடன்கள், நாம் முகம்கொடுக்க வேண்டியுள்ள சவால்கள் என அனைத்தையும் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

நாம் கடன்களில் தான் முன்னோக்கி செல்கிறோம். எனவே கடன்களை தவிர்த்து எம்மால் பயணிக்க முடியாது. 2024 ஆம் ஆண்டு வரையில் வருடம் ஒன்றிற்கு 4.4 பில்லியன் ரூபா என்ற ரீதியில் கடன்களை செலுத்தியாக வேண்டும். எனினும் கடன்களை செலுத்தும் நாடுகளில் நாம் முன்னணியில் உள்ளோம். எனவே எமக்கு எப்போதும் சர்வதேச உதவிகள் கிடைக்கும்.

எனினும் கடன்களில் இருந்து நாம் விடுபட வேண்டும் என்றால், எமக்கென்ற கொள்கையொன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# பேருந்துகளில் கப்பம்; கைது செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

தனியார் பேருந்துகளில் கப்பம் பெறும் குழுவினரை கைது செய்வதற்காக விசேட சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பேருந்து தரிப்பிடங்கள் மற்றும் பெருந்தெருக்களில் சிலரால் கப்பம் பெறப்படுவதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம சுட்டிக்காட்டியதுடன் இதுதொடர்பில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கப்பம் பெறும் குழுவினரை கைது செய்வதற்காக நாடுமுழுவதும் விசேட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# ஓமான் கடலில் மூழ்கிய இலங்கைப் படகு மீட்பு

(மஸ்கட்)

ஓமான் கடலில் மூழ்கிய படகில் இருந்தவர்களை, நீர்மூழ்கி வீரர்கள் உதவியுடன் மீட்டு மிதவைகள் மூலம் கரைக்கு அழைத்து வந்தனர்.

மஸ்கட் துறைமுகம் மத்திய கிழக்கு பகுதிகளில் கடல்வழி போக்குவரத்தில் முக்கிய வர்த்தக மையமாக விளங்கி வருகிறது. ஆசிய நாடுகளில் இருந்து அதிகமான சிறு கப்பல் மற்றும் படகுகள் அதிக அளவில் வர்த்தக தேவைகளுக்காக வந்து சென்றவாறு உள்ளன. இதில் ஓமான் கடலில் நேற்று முன்தினம் பலத்த காற்று வீசியது. அப்போது இலங்கைக்கு குரிய மரத்தினாலான படகு ஒன்று காரை ஏற்றிக்கொண்டு மஸ்கட் துறைமுகத்தை நோக்கி வந்தது.



சூறாவளி காற்று வீசியதால் அந்த படகால் தொடர்ந்து பயணம் செய்ய முடியவில்லை. மேலும் தண்ணீரில் கவிழ்ந்து மூழ்க தொடங்கியது. இதனால் அதிர்ச்சியடைந்த படகு ஊழியர்கள் 'மே டே' எனப்படும் அவசரகாலத்தில் அளிக்கப்படும் சமிக்ஞையை வெளியிட்டனர்.

அந்தத்தகவலை மஸ்கட் கடலோர பாதுகாப்பு படையினர் மற்றும் இராணுவத்தினர் பெற்றுக்கொண்டு தகவல் அனுப்பப்பட்ட இடத்தை நோக்கி மீட்பு குழுவினருடன் சென்றனர். அதற்குள் அந்தப் படகு முழுவதும் மூழ்கும் நிலையில் இருந்தது.

அங்கு இருந்தவர்களை நீர்மூழ்கி வீரர்கள் உதவியுடன் மீட்டு மிதவைகள் மூலம் ஏற்றிக்கொண்டு கரைக்கு வந்தனர். அவர்களுக்கு முதலுதவி மற்றும் தேவையான மருத்துவ உதவிகள் அளிக்கப்பட்டது. பின்னர் கடலில் மூழ்கிய படகை பத்திரமாக மீட்டனர். (ஜ-4)

# நாளொன்றுக்கு இருபதாயிரமாகும் பி.சி.ஆர்.சோதனைகள்

(கொழும்பு)

பி.சி.ஆர்.பரிசோதனைகள் நாள் ஒன்றுக்கு இருபதாயிரமாக அதிகரிக்கப்பட உள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.



ஆய்வுகூடங்களில் பி.சி.ஆர்.பரிசோதனைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக பிரதம தொற்று நோயியல் நிபுணர் டாக்டர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.


ஆன்டிஜன் பரிசோதனைகளையும் முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு பகுதிகளை உள்ளக்கும் வகையில் பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதிகளில் நீதிமன்ற செயற்பாடுகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டன. (படம்-தவசீலன்)

# மாவீரர் தினத்தில் மக்கள் கூடுகையை தடுக்கப் பொலிஸார் தீவிர முயற்சி



(முறிகண்டி)

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் மக்கள் கூடுகையை தடுப்பதற்கான வீதி தடைகள் அமைக்கும் பணிகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றினால் மக்கள் கூடுகைக்கான தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் அப்பகுதிகளில் வீதித் தடைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில், நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவினை நடைமுறைப் படுத்தும் வகையில் மக்கள் கூடுகையை தடுப்பதற்காக இவ்வாறு வீதித்தடை அமைக் கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-4-100)

# மஞ்சள், கஞ்சா மூடைகளுடன் இருவர் கைது




(மன்னார்)

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக கடத்தி வரப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 721 கிலோ 500 கிராம் மஞ்சள் மூட்டைகள் மற்றும் 3 கிலோ 730 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரில் மன்னார் சாயிட் சிட்டி பகுதியைச் சேர்ந்த இருவர் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய படகும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளதோடு, சந்தேக நபர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாயிட் சிட்டி பகுதியில் இருந்து மன்னார் ஊழல் தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவலுக்கு அமைவாக கடற்படையுடன் இணைந்து குறித்த மஞ்சள் மற்றும் கஞ்சா மூடைகள் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணையின் பின்னர் கைப்பற்றப்பட்ட மஞ்சள் மற்றும் சந்தேக நபர்கள் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4-285)

# டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்



(நெளுக்குளம்)

காத்தார்சின்னக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவு கிராமிய சுகநல மேம்பாட்டுக் குழுவின் ஒழுங்கமைப்பில் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வவுனியா ஸ்ரீராமபுரம் மற்றும் அண்ணாநகர் ஆகிய கிராமங்களில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் இடம்பெற்று வருகின்றது.

அக் கிராமங்களில் உள்ள டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான திண்மக்கழிவு பொருட்களை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினரின் ஒத்துழைப்புடன் அகற்றும் பணிகளும் இடம்பெற்றன.

அத்துடன் பொதுமக்களுக்கு குறித்த கழிவுப் பொருட்களைச் சேகரிப்பதற்கான மையங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு, மக்களுக்கு அறிவுறுத்தும் பணிகளில் கிராம உத்தியோகத்தர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பட்டதாரி பயிலுநர்கள் ஆகியோர் இணைந்து ஈடுபட்டனர். (நி-4-299)







பெரண்டினா தொழில் வள நிலையம் மற்றும் CHILD FIRST UK ஆகிய நிறுவனங்களின் நிதிப்பங்களிப்புடன் DMI கணனி கல்வி நிலையத்தினால் AUTO CAD கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு விசுவமடு CFCD திறன் விருத்தி நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

(படங்கள்:-தவசீலன்)

# சுகாதார நடைமுறைகளை மீறிய 20 பேர் சுயதனிமைப்படுத்தலில்

(குருமன்காடு)

சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களை மீறிச் செயற்பட்ட 20 இற்கும் மேற்பட்டோர் வவுனியாவில் சுய தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

கொவிட்-19 இன் தாக்கம் நாட்டில் அதிகரித்து வரும் நிலையில் கொவிட்-19 தாக்கம் அற்ற வவுனியாவை கட்டியெழுப்புவோம் எனும் எண்ணக்கருவில் வவுனியா மாவட்ட சுகாதாரப் பிரிவினர் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது வர்த்தக நிலையங்களில் முகக் கவசம் சீராக அணியாத பணியாளர்கள், வீதியில் முகக் கவசமின்றி பயணித்தவர்கள், தரமற்ற முகக் கவசங்களை அணிந்திருந்தவர்கள் என பலரை சுகாதாரப் பரிசோதகர்கள் இனங்கண்டதுடன் அவர்களின் பெயர் விபரங்களைத் திரட்டி குறித்த நபர்களை சுகாதார திணைக்களத்திற்கு சமுகமளிக்குமாறு திகதியும் வழங்கப்பட்டது.

இந்நிலையில் சுகாதார பரிசோதகர்களினால் வழங்கப்பட்ட திகதியில் சில நபர்கள் மாத்திரமே சுகாதார திணைக்களத்திற்கு வருகை தந்திருந்தனர்.

வருகை தந்தவர்களுடன் சுகாதாரப் பிரிவினர் கொவிட்-19 தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்கி கலந்துரையாடல் மேற்கொண்டதுடன் எச்சரிக்கையும் விடுத்திருந்தனர்.

சுகாதார நடைமுறைகளை மீறிச் செயற்பட்டதுடன், சுகாதாரப் பிரிவினரின் அழைப்பை மீறிய மிகுதி 20 இற்கும் மேற்பட்டவர்கள் இனங்காணப்பட்டு, அவர்களை சுகாதாரப் பிரிவினர் அவர்களின் வீடுகளிலேயே ஒரு வாரம் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர்.

சுகாதாரப் பிரிவினரின் இவ் அதிரடி நடவடிக்கையினால் வவுனியா மாவட்ட மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவார்கள் என சமூக ஆர்வலர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4-250)

சிறிய விஷயத்தில் நியாயம் தவறுபவன்,
பெரிய விஷயத்திலும் தொடருவான்!
– இயேசு நாதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனா வந்துற்ற போதும் இனக் கொடூரம் தீரவில்லை!

விட்டுவிட்ப் போகுதுயிர் விட்டவுடனே உடலைச் சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார். பட்டது பட்டு எந்நேரமும் பட்டு சிவனை ஏற்றுங்கள் போற்றுங்கள் சொன்னேன் அதுவே சுகம் என்றார் பட்டினத்தடிகள்.

மனித வாழ்வின் நிலையாமை பற்றி எடுத்துக் கூறியவர்களில் பட்டினத்தடிகளுக்கு நிகர் எவருமில்லை எனலாம்.

மனிதர்கள் தங்களைப் பக்குவப்படுத்தி இந்தப் பிறப்பின் தத்துவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது அவரின் உபதேசம்.

அதாவது மனிதர்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பேதம் எதுவும் கிடையாது.

இனம், மதம், மொழி என்ற பாகுபாட்டால் மனித சமூகம் பிரிந்து நின்று தர்க்கிப்பதில் எந்த நியாயமும் இல்லை.

முடி சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு பிடி சாம்பலாய் வெந்து போவது தான் இயற்கை எழுதிய நியதி. இதுவே உண்மை.

ஆம், 1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டுவந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன இப்போது இந்த மண்ணில் இல்லை.

தன் பதவிக்காக அவர் கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரம் இன்று அவரது ஐக்கிய தேசியக் கட்சியை நிர்மூலமாக்கி விட்டுள்ளது.

ஆக, நேற்று இருந்தவர் இன்றில்லை என்பதுதான் இயற்கை. இதனை இந்த உலகம் உணரத்தவறி, அண்டசராசரம் முழுவதையும் தம்மால் ஆட்டிப்படைக்க முடியும் என்ற கர்வம் மானிட குலத்தில் எழுந்தபோது,

இல்லை. இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கம் நானே! என்பதை இறைவன் நிரூபிக்க விளைந்தான்.

அறிவியல், விஞ்ஞானம், மருத்துவம், புதிய கண்டுபிடிப்பு, அணுவாயுதங்கள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், போர் விமானங்கள் என அனைத்தையும் கண்டு பிடித்த கர்வத்தில் இருந்த இந்த உலகை ஒரு கணப்பொழுதில் முடக்கிய பெருமை கொரோனாவுக்கு உண்டு.

பரம ஏழைக்கும் அமெரிக்க ஜனாதிபதிக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டதெனில் இந்த உலகில் உயர்ந்தவர், தாழ்ந்தவர்; ஆட்சி செய்பவர், ஆளப்படுபவர் என்று எந்தப் பேதமையும் கிடையாது என்பதை இந்த மானிட சமூகத்துக்கு இறைவன் உணர்த்தி நிற்கிறான்.

எனினும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ள எவரும் இல்லை.

ஏறிய மமதை இன்னமும் இறங்கிய பாடில்லை. இதோ! தமிழ் மக்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு தடை செய்ய வேண்டும் என்பதிலும் மாவீரர் வாரத்தில் ஒரு வித பதட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதிலும் ஒரு தரப்பு விழிப்பாக இருக்கின்ற தெனில், இன்னமும் திருத்தம் ஏற்பட்டதாக இல்லை என்பதுதானே உண்மை.

# துன்னாலை யாக்கரு பகுதியில் 1500 லீட்டர் கோடா மீட்பு

## சந்தேகத்தில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட துன்னாலை யாக்கரு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு ஆயிரத்து 500 லீட்டர் கோடா மீட்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

வடமராட்சி, நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட துன்னாலை - யாக்கரு வயல் வெளியில் அமைந்துள்ள பற்றைக் காட்டு பகுதியில் நீண்டகாலமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையமே இவ்வாறு முற்றுகையிடப் பட்டுள்ளது.

குறித்த பகுதியில் நீண்ட காலமாக சட்ட விரோதமாக கசிப்பு தயாரிப்பு இடம்பெற்று வந்த நிலையில் பல்வேறு தரப்பினரின் கவனத்திற்கு பிரதேச வாசிகள் எடுத்துச் சென்ற போதிலும் இது வரை எதுவிதமான நடவடிக் கைகளும் எடுக்கப்படா திருந்தது.

இந்நிலையில், இது குறித்து கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று சனிக்கிழமை மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த கசிப்பு உற்பத்தி நிலையத்தில் இருந்து ஆயிரத்து 500 லீட்டர் கோடா மீட்கப்பட்டுள்ளதுடன் துன்னாலை பகுதியைச் சேர்ந்த 28 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3.60)

# சிறைச்சாலை கொத்தணி அதிகரிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் இதுவரை 617 கொரோனாத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி குருவிட்ட சிறைச்சாலையில் நேற்று முன்தினம் 15 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 13 பேர் பெண் கைதிகள். இவர்கள் தற்போது சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

சிறைச்சாலைகளில் அடையாளம் காணப்பட்டுள்ள தொற்றாளர்களில் 578 பேர் கைதிகள் என்பதுடன் 39 பேர் சிறைச்சாலை அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மற்றுமொரு பகுதி முடக்கம்

(கொழும்பு)

பண்டாரகம - அட்டமுகம பிரதேசத்தை நேற்று முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் ஒரே நேரத்தில் 17 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் இவ்வாறு குறித்த பிரதேசத்தை தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக பண்டாரகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய பண்டாரகம சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்தில் இதுவரையில் 93 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஜ-4)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டு பண்ணும்.


என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்."

-வங்காரிமாதாய் (அமைதிக்கான நோபல் விருதுபெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

வவுனியா பிரதேசத்தில் ஜோசப் இராணுவப் படை முகாம், SFHQ Vanni, விமானப்படை முகாம், விமானப்படை முகாம் றேடார், மூன்று முறிப்பிலிருந்து பூ ஓயா வரை, Gowloom ஆடைத்தொழிற்சாலை இரட்டைப்பெரியகுளம் இராணுவ முகாம், National Youth Corps ஆகிய பிரதேசங்களிலும் மின் சாரம் தடைப்படும்.



# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

❖ உன் பொக்கிஷம் எங்கு இருக்கிறதோ, அங்கு தான் உன் இருதயமும் இருக்கிறது.

❖ எல்லாவற்றிற்கும் மேலாக உன் இருதயத்தைக் காப்பாற்றிக் கொள்.

❖ நல்ல மனுஷன் நல்லவைகளை இருதயத்தின் நல்ல பொக்கிஷத்திலிருந்து எடுத்துக் காட்டுகிறான்.

❖ கடவுளின் சிருஷ்டி ஒவ்வொன்றுமே நல்லது தான். நன்றியறிதலுடன் பெற்றுக் கொண்டால் எதையும் தள்ள வேண்டியதில்லை.

❖ எல்லாவற்றையும் பரிசோதித்துப் பார்த்து, நல்லதை விரைவில் கடைப்பிடியுங்கள்.

# வரவு-செலவுத்திட்ட உரை- 2021




**அரசாங்க பொறிமுறைகள், சந்தை கட்டமைப்புகள் மற்றும் செயல்முறைகள், வினைத் திறன்மிக்க மற்றும் மக்களை மையமாகக் கொண்ட சேவை வழங்கல் மற்றும் அறிவு பரிமாற்றம் ஆகியவற்றை எளிதாக்குவதற்கான ஒரு கருவியாக தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிற்றல் நிர்வாகத்தை மேம்படுத்தல்**

முப்படையினர், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு செயலணி சேவைகள், ஓய்வு பெற்ற, அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள், மரணித்த இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களில் தங்கியுள்ளவர்களுக்கு இராணுவ சேவை அதிகார சபை முன்னெடுத்துள்ள அங்கவீன இராணுவ வீரர்களுக்கு ஆதரவு உபகரணங்களை வழங்குதல், வீட்டுக்கடன் கல்வி மற்றும் தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி மருத்துவ உதவிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக ரூபா 750 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகிறேன்.

## பொதுமக்கள் பாதுகாப்பு

பொது மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் பொலிஸ் சேவையை வலுவூட்டுவதற்கு அரசாங்கம் விசேட கவனத்தை செலுத்தியுள்ளது. சகல பிரஜைகளுக்கும் அச்சமும் சந்தேகமுமின்றி சுதந்திரமாக வாழுவதற்கு தேவையான சூழலை உறுதிப்படுத்துதல் வேண்டும். போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துதல், வாகனம் மற்றும் வீதி சட்டங்களை முறையாக ஒழுங்கு முறைப்படுத்துதல், சுற்றுலா பொலிஸ் சேவையை பலப்படுத்துதல் அதேபோன்று கொள்ளையடித்தல் குற்றச் செயல்கள் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காக விசேட பயிற்சியை வழங்குதல், தேவையான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளை விரைவுபடுத்தி மக்கள் பாதுகாப்பிற்கு விசேட பொலிஸ் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன். பொது மக்கள் பாதுகாப்புக்காக அடையாளம் காணப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 2,500 மில்லியன் மேலதிக ஒதுக்கீட்டினை வழங்குவதற்கு முன்மொழிகிறேன்.

## தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

அரசாங்க பொறிமுறைகள், சந்தை கட்டமைப்புகள் மற்றும் செயல்முறைகள், வினைத் திறன்மிக்க மற்றும் மக்களை மையமாகக் கொண்ட சேவை வழங்கல் மற்றும் அறிவு பரிமாற்றம் ஆகியவற்றை எளிதாக்குவதற்கான ஒரு கருவியாக தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிற்றல் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி விசேட கவனத்தைச் செலுத்தியுள்ளார். சர்வதேச ஈ-வர்த்தகம் மற்றும் ஈ-கட்டண முறை மற்றும் அதிவேக தரவு பரிமாற்ற முறை மற்றும் தொடர்புடைய நடமாடும் வலையமைப்பு முறைகளை நிறுவுவதற்கு நாங்கள் உதவுவோம்.

தரவு பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு மற்றும் புலமைச் சொத்து உரிமைகள் தொடர்பாக புதிய சட்டங்கள் மற்றும் நிறுவன கட்டமைப்புகளை தாபிப்பது அவசியமானதாகும். இதன் நோக்கம் ஏற்றுமதிக்கான தொழில்நுட்பத் துறையின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கும், தேசிய பொருளாதாரத்தின் அறிவு மற்றும் தொழில்துறை சேவைகளுக்கான பங்களிப்பை மேம்படுத்துவதற்கும், தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி, தொழில் நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் தொடர்புடைய சேவைகளை விரிவுபடுத்துவதன் மூலம் நமது பொருளாதாரத்தை தொழில்நுட்ப அடிப்படையிலான தொழில் முயற்சியாளர் பொருளாதாரமாக மாற்றுவதே ஆகும். எனவே, தொழில்நுட்பத் துறையை விரிவுபடுத்துவதற்காக ரூபா 8,000 மில்லியன் விசேட ஒதுக்கீடு ஒன்றை நான் முன்மொழிகிறேன்.

## கிராமத்துக்கு தொலைத் தொடர்பு (Connect Sri Lanka)

தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட சமுதாயம் மற்றும் டிஜிற்றல் மூலம் உள்வாங்கப்பட்ட இலங்கையை உருவாக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கேற்ப "கமட சன்னிவேதனய" (கிராமத்துக்கு தொலைத்தொடர்பு) நிகழ்ச்சித் திட்டம் இரத்தினபுரி மாவட்டத்தில் 4ஜீ / பைபர் ப்ரோட்பேண்ட் செயற் பரப்பினை நூறு சதவீதம் உறுதிப்படுத்தப்படும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்கு 2021-2022 காலப்பகுதியில் தொலைத் தொடர்பு அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 15,000 மில்லியன் முதலீடு செய்யப்படவுள்ளது.

இதனூடாக நாடு முழுவதிலுமுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நடமாடும் மற்றும் நிலையான் ப்ரோட்பேண்ட் சேவைகளின் கிடைப்பனவு உறுதிப்படுத்தப்படுவதுடன் இணைப்பை வழங்குவதற்காக தொலைபேசி சேவை வழங்குநர்களுக்குத் தேவையான தொலைத் தொடர்பு கோபுரங்கள் மற்றும் பைபர் பொருத்துகள் உள்ளடங்கலான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தொழில்நுட்ப சேவைகளுக்கான தொலைபேசி தொலைத் தொடர்பு கோபுரங்கள், மூலப் பொருட்கள், உள்ளூர் உற்பத்தி மற்றும் உழைப்புகளை ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இத் தொடர்பாடல் வலையமைப்புக்கள் சுற்றாடலுக்கு குறைந்தளவு பாதிப்பினை ஏற்படுத்தும் விதத்தில் அமைக்கப்படும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொலைத்தொடர்பு கோபுரங்களை நிறுவுவதற்காக இனங்காணப்பட்ட அரசாங்கக் காணிகள் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக் குழுவுக்கு வழங்கப்படும். அதேபோன்று தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக் குழுவும் இலங்கை மின்சார சபையும் இணைந்து காணப்படுகின்ற வளங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்தும் வகையில் செயற்படும். அதற்காக 2021.01.01 ஆம் திகதி தொடக்கம் 5 வருட சலுகைக் காலம் வழங்கப்படும். நிர்மாணம் மற்றும் பொருத்தல் பணிகளுக்கான மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு உள்ளூர் தொழிலாளர்களுக்கு வரிச் சலுகை வழங்கப்படும். இம்முதலீட்டுக்காக தொலைத்தொடர்பு அபிவிருத்தி அறவீட்டில் 50 சதவீதத்தை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## தொழில்நுட்ப பூங்காக்கள்

தொழில்நுட்பத்துறை ஏற்றுமதி மூலம் வெளிநாட்டு வருமானத்தை அதிகரித்தல் மற்றும் தேசிய பொருளாதாரத்தின் அறிவு மற்றும் தொழில்சார் சேவைகளுக்கான தேவைகள் விரிவுபடுத்தப்படுத்தும் வகையில் தொழில்நுட்ப தொழில் முயற்சி பொருளாதாரமொன்றை அடுத்த 2 வருட காலப்பகுதிக்குள் ஏற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். தொழில்நுட்ப முயற்சிகள் மற்றும் அவற்றை மையமாகக் கொண்ட முதலீடுகள் மற்றும் அதனுடன் சார்ந்த சேவைத் தொழில்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற இம் மாற்றத்தினூடாக இளைஞர், யுவதிகளுக்கு உயர் வருமானத்தை சம்பாதிக்கக் கூடிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்காக முழுமையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் உடனடியாக ஆரம்பிக்க முடியுமான 5 தொழில்நுட்ப பூங்காக்களை காலி, குருநாகல், அநுராதபுரம், கண்டி மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நிறுவுவதற்கும் முன்மொழிகிறேன். இத்தொழில்நுட்ப பூங்காக்களை அதிவேகப் பாதை முறைமையுடனும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளுடனும் இணைக்கின்றவாறு அவற்றை சுற்றாடல்நேய நகரங்களாக அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 10,000 பில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

மாத்தறை, தெனியாய பிரதேசத்தில் 2023 ஆம் ஆண்டிற்கு முன்னர் துறைமுக மற்றும் விமான சேவை தொழில்நுட்ப பொறியியல் பாடங்களைப் போதிக்கின்ற புதிய பல்கலைக்கழகம் ஒன்றினைத் தாபிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

## பொதுச் சுகாதாரத்தில் முதலீடு

பொதுச் சுகாதாரத்தில் முதலீடானது முன்னொரு போதும் இல்லாதவாறு மிக முக்கியமானதாக மாறியுள்ளது. உலக சுகாதார நிறுவனம் அதேபோன்று பல நாடுகள் எதிர்வு கூறியவாறு கொவிட் தொற்றுக்கு மத்தியிலும் மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்பது இன்று யதார்த்தமாகியுள்ளது.

உலகில் இன்று 50 மில்லியனுக்கு அதிகமான கொவிட் தொற்றாளர்கள் காணப்படுவதுடன் மரணங்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தினைத் தாண்டியுள்ளது. பல்வேறு நாடுகளில் இரண்டாவது, மூன்றாவது கட்டத்தினை இந்நோய் அடைந்துள்ளது என்பதுடன் அங்கு முதற் கட்டத்தினை விட விரைவாக நோய் பரவும் ஆபத்து காணப்படுகின்றது.

இந்த யதார்த்த சூழ்நிலையில், மக்கள் மைய சுகாதார சேவையினை வழங்குவதற்கான மனித வளங்களுடன் கூடிய தாய்,சேய் சிகிச்சை நிலையங்கள், மருந்தகங்கள் மற்றும் முதியோர் சேவை நிலையங்கள், ஆய்வுகூட சேவைகள் வைத்தியசாலை ஆராய்ச்சி நிறுவகங்கள் என்பவற்றை விரிவுபடுத்துவதற்கு ரூபா 10,000 மில்லியனை மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். கொவிட் உள்ளடங்கலான தொற்று நோய்களினால் பாதிக்கப்பட்டு தற்காலிகமாக வாழ்வாதாரங்களை இழந்தவர்களுக்கு உதவ புதிய காப்புறுதித் திட்டமொன்றினை உருவாக்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

உத்தேச காப்புறுதி நிதியத்திற்காக 50 இற்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட வியாபாரங்கள் மற்றும் தொழிற்சாலைகளிடமிருந்து அவற்றின் புரள்வில் 0.25 சதவீதத்தினை பங்களிப்பாகப் பெறுவதற்கு நான் முன்மொழிகின்றேன். அனைத்து அரச ஊழியர்களுக்கும் அக்ரஹார காப்புறுதி திட்டத்திற்கு சமாந்தரமாக அரசாங்கத்தின் உதவியுடன் கொவிட் காப்புறுதித் திட்டமொன்றினைச் செயற்படுத்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

## மருந்து உற்பத்தி

எமது நாட்டின் இலவச சுகாதார சேவைக்காக மருந்து இறக்குமதிக்காக மாத்திரம் சுமார் ஐ.அ.டொ 550 மில்லியன் தொகை வருடாந்தம் செலவாகின்றது.

அத்தியாவ சிய மருந்து உற்பத்தியினை விரிவுபடுத்துவதற்காக அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் உற்பத்திக் கொள்ளளவை அதிகரிப்பதற்கு வங்கி மற்றும் நிதி வசதிகளை திறைசேரி பிணையின் அடிப்படையில் வழங்குவதற்குமுன் மொழிகிறேன்.

அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் முதலீட்டாளர்களுக்கு நவீன முதலீட்டு வலயமொன்றை உபாய முதலீட்டுச் சட்டத்தின் கீழ் ஆரம்பிப்பதற்கு முன்மொழிகிறேன்.

(தொடரும்)

## வீடொன்றின் மீது...

ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது. சிறுப்பிட்டி ஜே/271 கிராமசேவகர் பிரிவில் உள்ள வீடொன்றின் மீதே விஷமிகள் குழு இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## இளம் யுவதி...

வேளை வீட்டினுள் சுவாமி அறைக்குள் குறித்த பெண் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தர்மகுலராசா மாருதி (வயது - 22) என்பவராவார். (ம-3.30)

## 99 மேலதிக...

தில் நிறைவேற்றப்பட்டது.

பிரதமரால் வரவு - செலவுத் திட்ட யோசனை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நேற்று வரையில் 4 நாட்களுக்கு இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது.

அதனடிப்படையில் வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவாக 151 வாக்குகளும் எதிராக 52 வாக்குகளும் வழங்கப்பட்டிருந்தது. (ம-3)

## நல்லூரில்...

ஆரம்ப நாளான நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நல்லூரில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த நல்லூர் திடலிலேயே குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக ஒரு சிலர் மாத்திரம் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

மெகா பவர்
திகதி 21/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0680
வெற்றி எழுத்து D சுப்பர் இலக்க 05 வெற்றி இலக்கங்கள் 27 34 36 56

மஹஜன சம்பத
திகதி 2020/11/21
சீட்டிழுப்பு இலக்கம் 4313
ஆங்கில எழுத்து R வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 8 1 6 7 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.11.21
சீட்டிழுப்பு இலக்கம் - 350
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 23 63 64 68
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 21-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2608
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 18 34 60 78
தேசிய லொத்தர் சபை

## மணிவண்ணன்...

முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் வ.பார்த்தீபன், தனுஜன், வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் லகிந்தன் மற்றும் முன்னணியின் உறுப்பினர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர். (ம-3)

## வடக்கு, கிழக்கின்...

வடக்கு, கிழக்கில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படலாமென கருதப்படும் இடங்கள் அனைத்தும் இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை முதல் இதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறது.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை அஞ்சலிக்க அனுமதிப்பதில்லையென தமிழ் மக்களின் அஞ்சலிக்கும் அடிப்படை உரிமையையும் நசுக்கும் முடிவை எடுத்துள்ள அரசு, ஆயுதப் படைகளின் துணையுடன் அதனை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது.

இதன்படி வடக்கு, கிழக்கிலுள்ள துயிலும் இல்லங்கள் மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறுமென படைத்தரப்பு எதிர் பார்க்கும் இடங்கள் அனைத்தும் இராணுவம், பொலிஸாரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, அநேகமான பிரதேசங்களில் நீதிமன்றங்கள் மூலம் அஞ்சலி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், நீதிமன்ற உத்தரவை நடைமுறைப் படுத்தவே, அந்த பகுதிகள் படைத் தரப்பின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளதாக, படைத்தரப்பினர் குறிப்பிடுகின்றனர். (ம-3)

## கிளிநொச்சிக்கு...

போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் நேற்றுச் சனிக்கிழமை 266 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் பத்துப் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வவுனியா தனிமைப்படுத்தல் முகாமில் தங்கியிருந்த விமானப் படையை சேர்ந்த 8 பேருக்கும், கிளிநொச்சியில் இருவருக்கும் தொற்றிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திருவையாறு பகுதியில் மரணமடைந்த ஒருவரின் இறுதிக் கிரியைக்காக கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருப் பகுதியிலிருந்து வருகை தந்த குறித்த நபரின் மகள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்டது. அத்துடன் கண்டாவளைப் பகுதியில் வீதி அமைப்பு வேலைகளுக்காக வருகை தந்து தற்போது தனிமைப்படுத்தலிலுள்ள ஒருவருக்குமே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-3.18.316)

## மாவீரர் நாள்...

அமைந்திருந்த பகுதி இராணுவத்தினரின் நிரந்தர இராணுவ முகாம் உள்ளமையால் அதன் எதிர்ப்பக்கமாக உள்ள ஒரு காணியில் துயிலும் இல்ல மாதிரி அமைத்து ஆண்டுதோறும் மாவீரர்களை அஞ்சலித்த நிலையில், இந்த ஆண்டும் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்தக் காணியைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

இவ்வாறு துப்புரவு செய்யப்பட்ட காணியில் இம்முறையும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும் என்க் கருதிய இராணுவத்தினர், அந்தக் காணியில் படை முகாம் அமைப்பதோடு முட்கம்பி வேலியும் அமைத்து வருகின்றனர்.

மாவீரர் நாள் நிகழ்வு இடம்பெறும் என்பதற்காக இந்தக் காணி அபகரிக்கப் பட்டதா? அல்லது நிரந்தரமாகவே ஆக்கிரமிக்கப்பட்டதா? என்று அறியமுடியவில்லை. (ம-3)

## நீரில் மூழ்கி...

மண்டைதீவில் வயல் காணி ஒன்றில் வெட்டப்பட்டிருந்த கேணியில், அண்மையில் பெய்த மழை காரணமாக நீர் தேங்கி நிறைந்து காணப்பட்டுள்ளது.

குறித்த வயல் பகுதிக்குச் சென்ற இரு சிறுவர்களும் கேணியில் தவறிவிழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இதில் மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த இராசகுமார் சாவிதன் (வயது-7), இராசகுமார் சார்வின் (வயது-5) ஆகிய சகோதரர்களே உயிரிழந்தவர்களாவர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## +487...

வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்று சனிக்கிழமை இரவு கண்டறியப் பட்டுள்ளது.

ஒக்ரோபர் 4ஆம் திகதிக்கு பின் ஏற்பட்ட மினுவாங்கொட - பேலியகொட கொரோனா பரவல் கொத்தணியில் 16 ஆயிரத்து 262 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 19 ஆயிரத்து 767 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## அனை...

சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ சார்பாக முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மற்றும் தீவகம் சாட்டி மாவீரர் துயிலுமில்ல நினைவேந்தல் ஏற்பாட்டு குழு சார்பாக மாணிக்கவாசகர் இளம்பிறையன், கருணாகரன் குணாளன், தனுபன், வடமராட்சி மாவீரர் துயிலுமில்லம் சார்பாக வேந்தன் (ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர்) உட்பட பலரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர்.

கொரோனா

அபாயம், மாவீரர் நினைவஞ்சலியை தடுத்து தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை பாதுகாப்பு படைகளின் மூலம் நசுக்கும் பணியில் அரசு ஈடுபட்டு வரும் நிலையில், நீதிமன்றங்களின் ஊடாக நினைவேந்தல் தடையை ஏற்படுத்தி வரும் நிலையில் எவ்வாறான அணுகுமுறையை கடைப்பிடிப்பதென ஆராயப்பட்டது.

நவம்பர் 27ஆம் திகதி அனைத்து இல்லங்களின் வாசல்களிலும் தீப ஒளியை ஏற்றுமாறு தாயக மக்களிடம் வேண்டுகோள் விடுப்பது என்றும், மக்களின் அச்சத்தை போக்கும் விதமாக ஊடகங்கள் ஊடாக தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ளலாமெனவும் கருத்து கூறப்பட்டது.

எதிர்வரும் 24ஆம் திகதியன்று அனைத்து கட்சிகளும் கூடி, தாயக மக்களை தெளிவுபடுத்துவது தொடர்பாக அறிக்கையொன்று வெளியிடப்படவுள்ளது. இதில், 27ஆம் திகதி வீடுகளில் இருந்து வாசல்களில் தீபமேற்றுமாறு அழைப்பு விடுக்கப்படும். (ம-3)

## 9 பேர் பலி...

இதன்மூலம் நாட்டில் கோவிட் -19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 83ஆக அதிகரித்துள்ளது.

மினுவாங்கொட - பேலியகொட கொரோனா பரவல் கொத்தணியை அடுத்து கடந்த 6 வாரங்களில் 70 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-3)

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1109
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 21.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 85,381,540
வெற்றி இலக்கங்கள் 16 47 53 63 ஆங்கில எழுத்து E
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3439
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 21.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,963,756
வெற்றி இலக்கங்கள் 15 38 48 74 ஆங்கில எழுத்து P
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 5148
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1283
சீட்டிழுப்பு திகதி 21.11.2020
நிறம் கடும் நீலம்
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் J 22 26 48 64
SUPER 500 விசே. இலக்க 4 1 6 9
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

சீட்டிழுப்பு வாரம் 28
சீட்டிழுப்பு திகதி 21/11/2020
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 39 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,975,540/=
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 386 திகதி 21.11.2020 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 44 62 65 விதி எண் 4
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,956,708
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 29,46,351/=
திகதி : 21.11.2020
வெற்றி வாரம் : 2990
வர்ணம் : இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 45 48 54 55
இடபம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,446,400

**விற்பனைக்கு**

15 HP மோட்டர்களுடனான நல்லெண்ணெய் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. (C-744)

**077 464 4657**

**தேவை**

யாழ். நகரை அண்டிய பகுதியில் ( 5 Km இற்குள் ) சிறிய நிறுவனம் ஒன்றிற்கு முற்பணமில்லாமல் வாடகைக்கு இடம் தேவை.

தொடர்பு (4710)

**076 300 5506**

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் மேற்கு ஐயனார் கோவிலடியில் 2 பரப்புக் காணியில் அமைந்த வடக்கு வாசல் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (4713)

**077 601 1135**


# யாழ். வலயப் பாடசாலைகளை இயக்க விசேட ஏற்பாடு

## யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் அறிவித்தலுக்கு அமைய சகல பாடசாலைகளிலும் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புக்கள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இதனையடுத்து கொரோனாத் தொற்றில் இருந்து மாணவர்களைப் பாதுகாப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று சனிக்கிழமை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாண வலயத்திற்கு உட்பட்ட அதிகளவு மாணவர்களைக் கொண்ட பாடசாலை அதிபர்களுடன் நடந்த மேற்படி கலந்துரையாடலில் கொரோனாத் தொற்றில் இருந்து மாணவர்களைப் பாதுகாப்பதற்கான விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இதன் பிரகாரம் பாடசாலை அதிபர் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர், கிராம அலுவலர், பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதி, பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி ஆகியோரைக் கொண்ட குழுவொன்றை அமைத்து உரிய ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு மேலாக, அதிக மாணவர்கள் உள்ள பாடசாலைகள் விசேட சுழற்சி முறையைப் பின்பற்றி பாடசாலைகளை இயக்குவதற்கான ஏற்பாட்டு ஒழுங்குகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. (ம-03)


**வெல்டர் தேவை**

மல்லாகத்தில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு ஒட்டு வேலை செய்வதற்கு வெல்டரும், உதவியாளரும் தேவை.

ஆரம்ப வேதனமாக — மாத சம்பளம் (4709)

வெல்டருக்கு - 40, 000/- இல் இருந்து வழங்கப்படும்.
உதவியாளருக்கு - 25, 000/- இல் இருந்து வழங்கப்படும்.

தொடர்பு : **074 049 0003**

**யாழ். நகரில் திருத்த வேலைகள்**

சகலவிதமான கணனிகள், Laptop கள், LED, LCD TV கள் உடனடியாகத் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கணனிகளும் பொருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு (C-750)

021 315 0000, 077 389 8726
No. 12, BMC Lane, Jaffna.

**காணி உடன் தேவை**

4 பரப்பிற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.
15 பரப்புக்கு மேற்பட்டாலும் பரவாயில்லை.
யாழ்ப்பாண நகரத்திற்கு அண்மையாக இருக்க வேண்டும்.
எதிர்பார்க்கும் இடங்கள் இருபாலை, அரியாலை போன்ற இடங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு (4688)

**077 788 1373 , 077 507 9096**


**வாஞ்சையுடன் வாழ்த்துகின்றோம்**




செல்வி
வா. மாதங்கி
( 176 )

செல்வி
## மாதங்கி வாசுதேவன்

2020 ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து தோற்றி 176 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்த செல்வி மாதங்கி வாசுதேவன் மென்மேலும் கல்விச் செல்வம் பெற்று சாதனைகள் புரிய வேண்டி இறைவனை இறைஞ்சிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்.
அப்பப்பா - முருகுப்பிள்ளை தர்மலிங்கம்
அப்பம்மா - கோமதி தர்மலிங்கம் (C-751)

"அருணோதயம்"
நாவலடி, புலோலி மத்தி,
பருத்தித்துறை.

# மரண அறிவித்தல்



## தவமணி சுப்பிரமணியம்
**(கமலாதேவி)**

யாழ். நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி சுப்பிரமணியம் நேற்று (21.11.2020) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகவடிவேல் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் துஷிதாவின் (பட்டதாரி பயிலுநர் - வலி. வடக்கு பிரதேச செயலகம், கோப்பாய்) பாசமிகு தாயாரும் ஜெயீபனின் (ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான இராசசேகரம், தேவதாஸ், தெய்வசிகாமணி மற்றும் பத்மாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மதுஷிகா, சதுஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 9.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-752)

நீர்வேலி மத்தி.
நீர்வேலி.
077 327 6399
தகவல்:-
குடும்பத்தினர்


**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் ❯❯ 1150/=
5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு (C-705)
லண்டன் ➔ 1050/= இத்தாலி ➔ 1250/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

976,கேகேஎஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துணுக்காய்

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-735)

**வீடு விற்பனைக்கு**

மானிப்பாயில் 2 1/2 பரப்புக் காணியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை )

தொடர்பு (C-753)

**077 778 7545**

**உடனடி வேலைவாய்ப்பு VACANCY AVAILABLE**

எமது Mr. Bright நிறுவனத்தின் கிளைகள் ஒவ்வொன்றுக்கும் 15-20 பேர் புதிதாக இணைக்கப்படவுள்ளனர். ஆர்வம்மிக்க இளைஞர் யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.

- 10, O/L, A/L படித்தவர்கள் நேர்முகத் தேர்வில் பங்குபற்றலாம்.
- கிளை முகாமையாளர், உதவி முகாமையாளர், மேற்பார்வையாளர், கணக்காளர், அலுவலக உதவியாளர் போன்ற வெற்றிடங்கள் உள்ளன.
- நேர்முகத் தேர்வில் ஆட்கள் தெரிவு செய்யப்படுவர்.
- முன் அனுபவம் அவசியமில்லை.
- 15,000/- தொடக்கம் 35,000/- வரை அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகளும் உண்டு.
- வெளி மாவட்டங்களில் இருந்து வருவோருக்கு தங்குமிடம், உணவு, இலவசம்.

(4711)

**077 200 0018 , 021 431 0018**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

விலை : 30.00
Registered as a Newspaper in Srilanka
வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்
நாதம் 285
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2051 22.11.2020 தொலைபேசி : 021 222 3378



# இதயத்தால் நினைவு கூருதல்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.

விடுதலைப் போராட்டத்தில் ஆகுதியான எங்கட பிள்ளைகளை நினைவேந்தல் செய்வோம் எனக் கூற, மீண்டும் அனைவரும் எழுந்து மௌன அஞ்சலி செலுத்தினர்.

விதானையார் விக்கித்து அழுதார். அவரின் அழுகையில் ஆலமரத்து இலைகளும் அசைவதை நிறுத்தின.

கதிரவனும் கார் முகிலுக்குள் மறைந்து தன் சோகத்தை வெளிப்படுத்தினான்.

எத்தனை ஆயிரம் மாவீரர்கள் தமிழ் மண்ணின் விடிவுக்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தனர். அவர்களின் தியாகம் என்றும் தமிழர் மனங்களில் நிலைத்து நிற்கும். பண்டிதர் பரமலிங்கம் நினைவேந்தல் உரையைப் பகர்ந்தார்.

ஆலடியில நிலவிய மௌனம் கலைவதற்குச் சில நிமிடங்கள் ஆகின.

விதானையார் விசுவலிங்கத்தின் மூத்த மகன் மண் மீட்புப் போரில் தன்னை ஆகுதியாக்கிய மாவீரன். மாவீரர் வாரம் ஆரம்பித்து விட்டால் போதும், விதானையார் விசுவலிங்கம் மாவீரர்களை நினைவேந்துவதைக் கடும் விரதமாகக் கடைப்பிடிப்பார்.

அது ஒன்று தான் அவருக்கு ஆறுதலையும் தேறுதலையும் தருவதாக இருக்கும்.

மாவீரர் வாரத்தையொட்டி ஆலடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தைத் துப்புரவு செய்வது வழமையான நிகழ்வு. அந்த வழமையும் நடந்தாகி இருந்தது.

தன் தோளில் கிடந்த உத்தரியத்தால் விதானையார் தன் கண்களை ஒற்றிக் கொண்டார்.

நீடித்த அமைதியைத் தணிக்கை செய்ய பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

பண்டிதர்: நடந்து முடிந்த தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் எங்கட பிள்ளைகள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருக்கினம்.

அதிலும் கிராமத்துப் பிள்ளைகளின் சாதனைகளை நாங்கள் கட்டாயம் பாராட்ட வேணும்.

உண்மையில இந்த முறை புலமைப்பரிசில் பரீட்சையில கிராமப் பாடசாலைகளில படித்த பிள்ளைகள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருக்கினம். அவர்களுக்கு ஆலடி மாநாடு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு பண்டிதர் கூற, இடையில குறுக்கிட்ட கங்காணி கார்த்திகேயன்; அப்ப இனி பிரபலமான நகர்ப்பாடசாலைகளை நோக்கிய மாணவர்களின் நகர்வு குறையுமோ என வினவினார்.

பண்டிதர்: உள்ளதைச் சொன்னால் கிராமப் பாடசாலைகளில படிக்கிற மாணவர்களின் புலமை என்பது பரந்ததாகத்தான் இருக்குது. அந்த மாணவர்களிட்ட சுய கற்றல், சுய சிந்தனை, சுய தேடல் என்பனவும் மிகுந்திருப்பதாக கல்வியாளர்கள் கூறுகினம்.

மூப்பர்: உண்மைதான். எத்தனையோ வளமான கிராமப் பாடசாலைகள் மாணவர்கள் இல்லாமல் வெறிசோடிக் கிடக்குது.

அதேநேரம் நகரத்தில் உள்ள சில பாடசாலைகளில மாணவர் செறிவு அளவுக்கு அதிகமாக இருப்பதைக் காண முடிகிறது. இந்த இரண்டு நிலைமைகளும் எங்கட கல்வி வளர்ச்சிக்கு ஆரோக்கியம் இல்லை என்பது தான் என்ர நிலைப்பாடு.

சாத்திரியார்: மூப்பர் சொல்லத்தான் எனக்கு நினைவுக்கு வருகுது. கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களுக்காகத் தவம் கிடக்குது.

நல்லூர் முருகன் ஆலயத்திற்கு அண்மையில, யாழ்ப்பாண நகரத்துக்கு மிக நெருக்கமான இடத்தில குடிநீர், போக்குவரத்து என சகல வசதிகளையும் வளங்களையும் கொண்ட இடத்தில கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை இருக்கிறபோதிலும் அந்தப் பாடசாலையில மாணவர்கள் மிகக் குறைவாக இருப்பது வேதனைக்குரியதுதான்.

சிறாப்பர்: அப்ப அந்தப் பாடசாலையை நவீன வசதிகளைக் கொண்ட பாடசாலையாக மாற்றி அதனைப் புதுப்பொலிவாக்க முடியாதோ.



## தரம்-5 புலமைப்பரீட்சையில் கிராமத்து மாணவர்கள் சாதனை

சாத்திரியார்: அட நீங்கள் இப்படிச் சொல்லுறியள். ஆனால் இன்னும் சிலர் அப்பன் சாவது எப்ப? அமாவாசை பிடிப்பது எப்ப என்றெல்லோ நிற்கினம்.

மூப்பர்: என்ன சாத்திரியார் சொல்லுறியள். கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களன்.

சாத்திரியார்: கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில மாணவர்கள் இல்லாமல் போனால் அதனைத் தாங்கள் எடுக்கலாம் எண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முதல் வடக்கு மாகாணத்திலுள்ள முக்கிய திணைக்களங்கள் வரை காத்திருக்கினம்.

கங்காணி: என்ர முருகா! ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானால் அமைக்கப்பட்ட கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு இப்படியொரு தலைவிதியோ.

வாத்தியார்: இனி வருங்காலங்களில எங்கட ஆரம்பகாலத்துப் பாடசாலைகளுக்கு ஆபத்து வரத்தான் போகுது.

இவ்வாறு கூறியபடி வாத்தியார் வைத்திலிங்கம் நீண்ட பெருமூச்சை விட்டார். நிலைமைகளைப் புரிந்து கொள்ள முடியாத சிறாப்பர் என்ன வாத்தியார் சொல்லுறியள் என்றார்.

வாத்தியார்: இந்தாப் பாருங்க. எங்கட இடங்களில சர்வதேசப் பாடசாலைகள் அமைக்கப்படுகின்றன.

சர்வதேசப் பாடசாலைகள் இயங்கத் தொடங்க, பெரும்பாலான பாடசாலைகளை இழுத்து மூட வேண்டித்தான் வரும்.

மூப்பர்: ஏன் வாத்தியார் அப்படி நடக்கும் எண்டு சொல்லுறியள்.

வாத்தியார்: இப்பவே பெரும்பாலான பாடசாலைகளில மிகக் குறைந்த மாணவர்கள் தான் இருக்கினம்.

இந்த நிலையில சர்வதேசப் பாடசாலை இயங்கத் தொடங்கினால் 2021 ஆம் ஆண்டில முதலாம் தரத்திற்குச் சேர வேண்டிய மாணவர்களில் பெரும்பாலானவர்கள் சர்வதேசப் பாடசாலையில அனுமதி எடுப்பினம்.

என்ர பிள்ளை இன்ர நஷனல் ஸ்கூலில படிக்குதெண்டு சொல்லிப் பெருமைப்படலாமல்லோ. அப்ப ஏனைய பாடசாலைகளை இழுத்து மூடுவதைத் தவிர வேறு வழி என்ன இருக்குது.

பண்டிதர்: அழிவைத் தேடிய பயணம் தொடங்கிற்றுது. அகிம்சையை, அறத்தை, இறைபக்தியை ஏற்படுத்த வேண்டிய நேரத்தில் குறுகிய சிந்தனையோடு பலரும் நடக்கத் தலைப்பட்டு விட்டினம்.

இதுக்குப் பிறகு என்ன செய்ய முடியும்?

இவ்வாறு பண்டிதர் கூற, அதனை ஏற்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தேசிய பாதுகாப்பிற்கு யார் அச்சுறுத்தல்?




நவம்பர் 27 மாவீரர் நாள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆகுதியான மாவீரர்களை நினைவுகூருகின்ற இந் நாளையொட்டி மாவீரர் வாரம் நேற்று 21 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

மாவீரர் வாரத்தில் மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொள்வது முதல் பொது இடங்களைத் தூய்மைப்படுத்துகின்ற செயற்பாடுகள் வரை நடந்தேறும்.

எனினும் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்குத் தடை விதிக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பது தெரிகிறது.

அரசாங்கம் அதனை நேரடியாக முன்மொழியாமல், பொலிஸார் ஊடாகச் சட்டத்தின் கீழ் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்கான தடையை விதிக்கின்ற முயற்சிகள் நடந்தாகின்றன.

ஏலவே தியாகி திலீபனை நினைவேந்துவதற்கு நீதிமன்றத்தினூடாகத் தடை விதிக்கப்பட்ட நிலையில், அதே யுக்தியை மாவீரர் தினத்திலும் கையாள்வதற்கு அரசாங்கம் பிரயத்தனம் செய்கிறது.

மாவீரர் தினத்தை நினைவுகூருவது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்ற கோதாவில் மாவீரர்களை நினைவேந்துவதற்குத் தடைவிதிப்பதனை நோக்காகக் கொண்டு; பொலிஸார் செயற்பட்டாலும்- மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்குத் தடைவிதிக்கும் நியாயாதிக்கம் யாழ். மேல் நீதிமன்றத்திற்கு இல்லை என்ற அடிப்படையில், நினைவேந்தலுக்குத் தடை விதிக்கக்கோரும் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மாவீரர்களை நினைவுகூருவது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எனப் பொலிஸார் முன்வைக்கின்ற கருத்தியலில் இருக்கக்கூடிய நியாயத்துவம் என்ன? என்பது தான் புரியவில்லை.

பொலிஸார் முன்வைக்கின்ற மேற்போந்த விடயம் இலங்கையில் இருக்கக்கூடிய பொலிஸாரும் படையினரும் பௌத்த சிங்களம் சார்ந்த பேரினவாதத்தைப் பாதுகாப்பதற்கானவர்களேயன்றி, அவர்கள் இலங்கை மக்களைப் பாதுகாப்பதற்கான கட்டமைப்பைக் கொண்டவர்கள் அல்லர் என்பது நிரூபணமாகி யுள்ளது.

இலங்கையில் இன ஒற்றுமை ஏற்படவேண்டுமாயின் அனைத்து இன மக்களையும் சமத்துவமாக நடத்துகின்ற அரசாங்கம் அமைய வேண்டும்.

ஆனால், அரசாங்கத்தை அமைப்பதற்காக நடைபெறுகின்ற தேர்தல்களையொட்டி இடம்பெறுகின்ற பிரசாரங்களின் போது, சிங்களத் தரப்புகள் இனவாதத்தை முன்வைத்து வாக்குக் கேட்பதைக் காணமுடியும்.

சிறுபான்மை இனங்களை அடக்கி ஆள்வோம், அவர்களுக்கு உரிமை கொடுக்கமாட் டோம், இலங்கை பௌத்த சிங்கள நாடு. அது பௌத்த சிங்களவர்களுக்கே உரியது என்று உரக்கக் கோசம் போடுகின்றவர்களை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துகின்ற மனநிலையில் சிங்கள மக்களும் இருக்கின்றனரெனில், இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கான காலம் மிக நீண்ட தொலைவில் உள்ளதென்பதே உண்மை.

இவை ஒருபுறமிருக்க முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், தியாகி திலீபனின் நினைவு தினம், மாவீரர் நாள் என்ற நினைவேந்தலின் போதெல்லாம் அதனைத் தடைசெய்கின்ற சம்பவங்கள் தொடர்ந்து செல்வது தமிழ் இனத்தை வஞ்சிக்க வேண்டும் என்பதில் சிங்கள ஆட்சிபீடம் உறுதியாக உள்ளதென்பதை தெளிவுபடுத்தி நிற்கிறது.

எது எவ்வாறாயினும் நினைவேந்தலுக்கான அனுமதியை வழங்குவதனூடாகவே தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியும் என்ற உண்மையை அரசாங்கம் உணர்ந்து கொள்ளாமல் இருப்பதுதான் மிகப்பெரிய துரதிர்ஷ்டம்.

உண்மையில் நினைவேந்தலுக்கான உரிமை என்பது உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப் பட்டதொன்று. எனினும் அதைத் தமிழ்மக்கள் அனுபவிக்க முடியாதவர்களாக ஆக்கப்படுகின்றனர்.

இஃது தமிழ் மக்கள் மத்தியில் தீராத கவலையைத் தரவே செய்யும்.

எங்கள் உறவுகளை- எம் வாழ்வுக்காகத் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தவர்களை நினைவுகூருவதற்குக்கூட தமிழினத்திற்கு உரிமை இல்லை என்றால், அந்த அடிமைத்தனத் தோடு வாழ்வதில் இருக்கக்கூடிய அர்த்தம் என்ன? என்ற கேள்வி தமிழ் மக்களின் மனங்களில் எழுந்து கொண்டேயிருக்கும்.

இத்தகைய நினைப்பை தளரவிடாமல் பாதுகாத்து நிற்கின்ற ஆட்சியாளர்களும் படைத்தரப்புமே தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விளைவிக்கின்றனர் என்பதுதான் யதார்த்தமான உண்மை.

ஆக, உண்மைகள் உறங்கிக் கொண்டிருக்க, பொய்மையும் இனவக்கிரமும் வெவ்வேறு வடிவங்களில் எழுந்து சன்னதம் ஆடுகின்றன.

அவர்களின் அணுகுமுறைகள் ஆபத்தானவை. இன்னும் இந்த நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லக்கூடியவை.

மாவீரர்களை நினைவுகூருவது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்றால், இந்த நாட்டின் பூர்வீகக்குடிகளை சிறுபான்மை என்ற பெயரால் அடக்கி ஆள்வது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையாதா என்ன?.

எதுவாயினும் சமகாலத்துக் கொரோனாத்தொற்று கூட்டமாகக் கூடியிருந்து நினைவுகூருவதற்கு ஏற்ற சூழல் அல்ல என்ற காரணத்தால் வீடுகளில் இருந்து மாவீரர்களை நினைவுகூரமுடியும் என்ற தீர்ப்பு நியாயத்தை நிலை நிறுத்தியுள்ளது.

ஆம், இதயக்கோயில்களில் குடிகொண்டவர்களை நினைவேந்துவது உள்ளார்ந்தமானது. அதனைத் தடுப்பதற்கு இந்த மாநிலத்தில் இன்னமும் மருந்து கண்டறியப்படவில்லை.

**விதுரன்**




## பண்டிதரின் நிலை

கங்கையில் படகில் சென்ற ஒரு பண்டிதர் படகோட்டியிடம், "உனக்கு இராமாயணம் தெரியுமா?" என்றார்.

படகோட்டி, "தெரியாது, சுவாமி" என்றான்.

"அப்படியா? வாழ்க்கையில் கால்பகுதியை வீணாக்கிவிட்டாயே! போகிறது.

பாகவதமாவது தெரியுமா?" என்றார். "தெரியா துங்களே" "அப்படியா? வாழ்க்கையின் அரைப் பகுதியைத் தொலைத்துவிட்டாயே. தொலையட்டும்.

பகவத் கீதையாவது தெரியுமா?""தெரியாதே பிரபு" "ஐயகோ வாழ்க்கையின் முக்கால் பகுதியை வீணாக்கிட்டியேப்பா.

இதெல்லாம் கூடத் தெரிஞ்சுக்காம வாழ்ந்திருக்கியே, நீயெல்லாம் மனுஷனா?"

இவ்வாறு பண்டிதர் கேட்டபோது, படகில் ஒரு ஓட்டை வழியாக நீர் உள்ளே நுழைவதைக் கண்ட படகோட்டி திடுக்கிட்டுக் கேட்டான்.

"சுவாமி உங்களுக்கு நீச்சல் தெரியுமா?" "தெரியாதேப்பா!"

"சுவாமி உங்களோட முழு வாழ்க்கையும் இப்போ முடியப்போகுதே



என்ன செய்வீங்க?"

பண்டிதர் கதி என்னாயிற்று என்பதைச் சொல்லாமலே புரிந்துகொள்வீர்களே!

படகோட்டிக்குக் கல்வியறிவு இல்லை. பண்டிதருக்கோ வாழ்வியல் அறிவு இல்லை.

ஒன்று இருந்தால் ஒன்று இல்லாதபோது எல்லோருமே சமந்தானே!

**நீதி:**
**யாரையும் அலட்சியம் செய்யக்கூடாது**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## முதல் வெற்றி

32


எதிர்பார்த்ததைவிட குறுகிய காலத்திலேயே முடிந்து விட்டது யுத்தம். அதை யுத்தம் என்று கூடச் சொல்லத் தேவையில்லை. சின்னச் சண்டை அல்லது கைகலப்பு என்று சொல்லலாம்.

தொடர்ச்சியாகக் கிடைத்த இரண்டு வெற்றிகள் மன்னர் பிலிப்பைப் பூரிப்படைய வைத்திருந்தன. அப்போது அலெக்சாண்டருக்கு வயது பத்தொன்பதைத் தொட்டிருந்தது.

விடியற்காலை நேரத்தில் அரண்மனை வீரர் ஒருவர் கடிதம் ஒன்றைக் கொண்டு வந்து அலெக்சாண்டரிடம் கொடுத்தார்.

உன்னுடைய தந்தை கிளியோபாட்ரா என்பவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்.

அதைப் படித்த மாத்திரத்திலேயே கடிதத்தை


கிளியோபாட்ரா

எழுதியது தாய் ஒலிம்பியஸ் என்பது அலெக்சாண்டருக்குப் புரிந்து விட்டது. அந்த விடயத்தைப் படித்து அலெக்சாண்டர் பெரிதாக அதிர்ச்சியடையவில்லை.

ஒலிம்பியஸுக்கும் பிலிப்புக்கும் இருக்கும் கருத்து வேற்றுமைகள் சிறுவயது முதல் பார்த்து மனதில் பசைபோல ஒட்டிக்கொண்ட சங்கதிகள் ஆயிற்றே.

அம்மா தேவையில்லாத கற்பனையில் ஈடுபட்டு மனதைக் கெடுத்துக் கொள்ளப் போகிறார் பாவம் என்று தோன்றியது அலெக்சாண்டருக்கு. ஒலிம்பியஸின் அறைக்குள் நுழைந்தார் அலெக்சாண்டர்.

அம்மா, நீங்கள் கவலைப்பட வேண்டாம். தந்தை ஓய்வாக இருக்கும்போது அவருடைய குறைகளைப் பற்றிப் பேசி அவற்றைச் சரி செய்துவிடுகிறேன். என்னை நம்புங்கள்.

முகம் வாடியிருந்தது ஒலிம்பியஸுக்கு. அலெக்சாண்டரைப் பார்த்ததும் கொஞ்சம் முகத்தை மாற்றிக் கொண்டாள். அதை அலெக்சாண்டரும் கவனித்து விட்டார்.

எனக்கென்னவோ உன்னுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும் போலத் தெரிகிறது அலெக்சாண்டர். அப்படியா?, எனக்கா?, யாரால் ஆபத்து? சிரித்தார் அலெக்சாண்டர்.

வேறு யாரால்? எல்லாம் உன்னுடைய தந்தையால்தான். ஒலிம்பியஸிடம் இருந்து இப்படியொரு பதில்தான் வரும் என்பதை அலெக்சாண்டர் எதிர்பார்த்திருந்தார். பதில் சொல்வதற்கு வசதியாக தயாரிப்புடன் வந்திருந்தார்.

அம்மா நான் அரச பிரதிநிதி. மாசிடோனிய நாட்டின் இளவரசன். முத்திரைக் காப்பாளன்.

(தொடரும்)



## காதலுக்கு நீங்க எதிரியாமே வியாசரே?

**தேவா — வதிரி**

ஒருவருக்குக் கிடைக்க நினைத்ததை யாராலும் தடுக்க முடியாது என்பது?

அண்மையில் ஒரு ஆசிரியர் கூறிய விடயம் இது. பாடசாலையில் காலை இறைவணக்கம் ஒரு மரத்தின் கீழ் நடை பெற்றுக் கொண்டிருந்தது. மரத்தின் கீழ் நின்ற அவர் திடீரென அந்த இடத்தில் இருந்து விலகி சற்று தள்ளி நின்ற அடுத்த கணமே அவர் நின்ற இடத்தில் மரத்தின் பாரிய கிளை ஒன்று முறிந்து வீழ்ந்தது.

அங்கு நின்றவர்களுக்கு பெரிய ஆச்சர்யம். அது எப்படி அந்தக் கணம் அவர் அந்த இடத்தில் இருந்து விலகினார் என்று.

இதுதான் ஒருவனுக்கு எது கிடைக்க வேண்டுமோ அது கிடைத்தே தீரும். எது கிடைக்காதோ அது கிடைக்கவே கிடைக்காது.

**சுதன் — குப்பிழான்**

வரவு-செலவுத்திட்டம் எப்படி இருக்கிறது வியாசரே?

ஒருவன் வேலையினால் வரும்போது மீன் வாங்கி வந்து மனைவியிடம் கொடுக்கிறான்.

இந்தா இதை சூப்பரா குழம்புவை என.

அவர் குளித்துக் கொண்டிருக்கும் போதே குழம்புவாசனை மூக்கைத் துளைத்தது.

அவசரமாகக் குளித்துவிட்டு வந்து சாப்பிட உட்கார்ந்தார். மீன் கறி பரிமாறப்பட்டது. அந்தக் கறியில் உப்புமில்லை, புளியுமில்லை.

கடுப்பான அவர் என்ன இது இப்படி இருக்கிறது. ஆனால் வாசனை நன்றாக இருந்ததே என்றார்.

அதற்கு மனைவி சொன்னாள் வந்தது அடுத்த வீட்டு மீன்குழம்பு வாசனை என்று. நீங்கள் கேட்ட கேள்வி ஏதோ நான் வேறு பதில் சொல்லி விட்டேனே.




**ஆகாஷ் — எழுதுமட்டுவாழ்**

ஆளப் போறான் தமிழன், தமிழன் என்று சொல்லுடா போன்ற பாடல்களில் கூறப்படுவது போல தமிழன் ஒரு நாட்டை ஆளும் காலம் வருமா?

அந்தக் காலம் எல்லாம் கடந்து விட்டது ஆகாஷ். இனி சினிமாவிலும், கனவிலும் இந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதுதான் சரியானது.

இதை விடுத்து தமிழன் நாட்டை ஆள வேண்டும் என்று ஆசைப்பட்டால் நாலாம் மாடிக்குச் செல்ல வேண்டி வரும்.

அதனால் அமைதியாக இருங்க பிளீஸ்.

**ராகுல் — யாழ்ப்பாணம்**

பொய்யை நம்பும் உலகம் உண்மையை நிரூபிக்க சாட்சி கேட்கிறதே?

உண்மை என்பது மண்ணுக்குள் புதைக்கப்படும் விதை போன்றது.

என்னதான் பொய் என்ற மண்ணைப் போட்டு மூடினாலும் அது முளை விட்டு மண்ணுக்கு மேலே வந்தே தீரும்.

இதைப் பலர் புரிந்து கொள்வதில்லை.

பொய்மை பேசுபவர்கள் முன்னோக்கிச் செல்வது போன்றுதான் இருக்கும். ஆனால் உண்மை இறுதி நொடியில் வெல்லவல்லது.

ஏனென்றால் மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உண்டு. அந்த சக்தி எப்போதும் உண்மையின் பக்கமே.



## வரவு-செலவுத்திட்டம் எப்படி இருக்கிறது வியாசரே?

**தரண் — மானிப்பாய்**

எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக் கொள்வார் என்பதில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா வியாசரே?

நிறைய நம்பிக்கை உண்டு. ஒருவர் உங்களுக்குத் தீங்கு விளைவிக்கிறார் எனின் அவருடன் எதிர்த்து நின்று மல்லுக்கட்டுவதிலும் கடவுள் இருக்கிறான் என நினைத்து நீதியின் பக்கம் நடந்து பாருங்கள்.

அந்த ஒருவரின் வண்டவாளம் ஆகக் குறைந்தது ஒரு வருடங்களிலேயே தண்டவாளத்தில் ஏறும்.

உலகத்திற்கு நல்லவனாய் இருக்க நினைத்தால் நடிக்க வேண்டிவரும். நாம் எமது மனதிற்கு நல்லதாய், நேர்மையாய் நடந்தால் போதும். எல்லாவற்றையும் இறைவன் பார்த்துக் கொள்வான். அவ்வளவே.

**காவியா — கிளிநொச்சி**

சினிமா வாழ்க்கைக்கு பொருந்துமா வியாசரே?

ஒரு நாளும் பொருந்தாது. வாழ்க்கை என்பது மற்றவர்களுக்காக வாழ்வதல்ல. எமக்காக நாம் வாழ்வதே வாழ்க்கை.

இதில் இன்பம், துன்பம் என்ற இரண்டும் வரும், போகும். அதை எல்லாம் கடந்து செல்வதுதான் வாழ்க்கை.

ஒரு கதாநாயகன் நூறு ஆட்களை அடிப்பது என்பது சினிமாவுக்குப் பொருந்துமே தவிர வாழ்க்கைக்குப் பொருந்தவே பொருந்தாது.

இதைப் புரியாத பலர் சினிமாவை முதுகில் கட்டிக் கொண்டு திரிகிறார்கள்.

**கரிஷ் — யாழ்ப்பாணம்**

காதலுக்கு நீங்க எதிரியாமே வியாசரே?

அடப்பாவி ஆளானப்பட்ட அந்த சிவனே காதலுக்கு அடிமையடா. அற்பம் நான் என்ன விதிவிலக்கா.

ஏன்டா என்னை வில்லனாக்கிறாய்.



**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

## பவித்திரம் குலைந்ததுவோ?

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்று
கூறித்திரிந்த உலகம் இன்று
தனிமையில் வாழ்ந்து தப்பித்துக் கொள்ளும்
தலைவிதி ஏன்தான் வந்ததுவோ?
ஊரும் உலகும் உறவும் மகிழ்ந்து
உயர்ந்து நின்ற உலகினிலே
உயிர்கள் மடிய உலகம் அதிர
ஊரடங்கு ஏன்தான் வந்ததுவோ?
கண்மணி போன்று கற்றிடும் சிறுவரின்
காலடி தேடிக் கல்லூரி ஏங்கிட
பட்டுச் சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லும்
பவித்திரம் ஏன்தான் குலைந்ததுவோ?
அத்தனை நிலையும் அவனியில் ஏற்பட
அணுவிலும் சிறியதோர் அகோர அசுரனாய்
கொன்றிடும் கொரோனா என்றிடும் உன்னை
வென்றிடும் நாளைய உலகிது சத்தியம்

செல்வி.பாமகள் சண்முகராஜா, கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை



## தலைநிமிர்வு

தமிழன் வீரத்தின் விளைநிலம்
தன்மானத் தமிழன் தலைநிமிர்ந்த காலம்
தமிழர் தத்தளிக்கும் நிலை பாரும்
தலைமைகள் ஒன்றுபடும் காலமிது

தமிழினம் ஓர் வற்றாத நதியாகுமே
தமிழர் சாம்ராச்சியங்கள் வரலாறு சொல்லுமே
தரணியில் நதி வற்றிப் போய் வறண்டு கிடக்கிறதே
ஒன்று திரண்டிட நதி ஊற்றெடுக்குமே
ஊடறுத்துப் பாயுமே மண் மகிழ்வடையுமே

மாற்றம் ஒன்று ஏற்படுமே- அது
மாறாத தீர்வாக இருக்குமே
மானமுள்ள தமிழராய் வாழும் காலம்
மனதில் நிலைத்து செயற்படுமே

காலச்சக்கரத்தில் கரைந்தோடும் நீராய்
காலம் காலமாக ஏமாற்றப்படுகின்றோமே
கனவான்கள் ஒன்றாகிட மிடுக்கேறிடுமே
கண்ணியமான தீர்வை நோக்கிய பயணங்கள்

*பெ.தனா, தெல்லிப்பழை*

## பதில் சொல்

மறைந்த ஆசைகள் பல கோடி
இவை மீண்டும் வரும் எமைத் தேடி
ஆவல்கள் பல கோடியுடன் காத்திருந்தோம்
ஆண்டுகள் பல முடிவு தேடி இவை
கானல் நீரானது தான் முடிவு
எதிர் நீச்சல் போட்டு விடை
காண முடியுமா மாநிலமே
சொல் பதில்

*எம்.செல்வரதி, சங்குவேலி*

## கார்த்திகைப் பூவே மலர்ந்திடு




கார்த்திகை பிறந்திட்டதே காரிருளே நீ அகன்று விடு
வீர மறவன் தூங்குகிறான் விண்மீனே தாலாட்டு

வாழத்துடிக்கும் வயதில் சாகத்துடித்த சரித்திரங்கள்
சாவைக் கண்டு அஞ்சவில்லை
தமிழன் வாழ்வை எண்ணி அஞ்சியவர்


கழுத்திலே நஞ்சைக்கட்டி களமாடிய
கரிகாலன் புதல்வர்கள் தமிழரின் உரிமைக்காக
உயிரை ஈந்த தியாகங்கள்

களத்தில் வீழ்ந்து விதையானாய்- தமிழன்
வீரத்தை விருட்சமாக்க அடிபணியாது
சமர்செய்தாய் தமிழ் மண்ணைக் காப்பதற்கு

கார்மேகம் சூழ்ந்துவிடும் மும்மாரி பொழிந்துவிடும்
கல்லறைகள் நனைந்துவிடும்
கரிகாலன் மகன் கண்ணயர்வான்

கார்த்திகை காரிருளில் கார்த்திகை பூ மலர்ந்திடுமே
கல்லறைகள் ஈரமாகும் பொழியும்
மழையில் அல்ல மக்கள் கண்ணீரில்

## மௌனத்தின் தேடல்- 503



## விவசாயிகள் வாழ்வினை...

இயற்கையைப் பகைத்தோம்
எழில்வனம் அழித்தோம்
நன்னீர் ஊற்றையும் நாம்
நலிவுறச் செய்தோம்
விளைநிலம் விற்றோம்
வெறும் மாடிகள் அமைத்தோம்
விவசாயிகள் வாழ்வினை
விடம் வைத்தே கொன்றோம்

த.சிவகாமி, நல்லூர்

## உழைக்கும் கரங்கள்

ஏர் பூட்டி வயல் நிலத்தை உழுகின்ற உழவனே
நீர் உழுவது வெறும் மண்ணை அல்ல
உன்னுடைய பொன்விளையும் பூமிதனை அல்லவா!
இருகாளை தனில் ஏரினில் பூட்டி
உழுகின்ற காளை நீ அல்லவா!
உலகிற்கு உணவு அளிக்கும்– இவன்
காலடியில் வீழ்ந்து வணங்கி
கரங்கூப்பி தொழுதிடுவோம் எந்நாளுமே

ஆ.பாலமதுஜா
யா/ மெ.பெ.உ.பா.

## கல்யாணமாலை

'ஏரி' கட்டிச் செல்வோரின் பின்
கை கட்டிச் செல்லும் உலகில்
மை விழியார் பார்வை இவனை
கண்டு கொள்வதில்லை– இன்னும்
கல்யாணமாலை இவன்
கழுத்தில் விழவில்லை

பிரமன், கொக்குவில் மேற்கு

## ஏங்குகிறது மனம்

இரண்டு மாடுகளை
ஏரில் பூட்டி
ஆறுகால்களால் நடந்து
முகத்தால் வியர்வை
முத்தாய் கொட்ட
உம் உழைப்பை உலகுக்கு
உணவாக்கிய –எம்
இனிய உழவரே!
உமது இந்த உத்தம உழைப்பினை
இக்கால இளசுகளுக்குக் காட்ட
ஏங்குகிறது மனம்...
எங்கே நீர்?

திஷானிகா பிரதாப்
கல்வியங்காடு

## உழவனின் தவம்

தவமாய் தவமிருந்திடுவான்
கதிருக்காகவே
நவீனமும் கருமேகமும்
செய்திடும் சதியில் பெற்றிடும் தோல்வி
உழவனின் தவத்திற்கானதன்று
உலகிற்கானதே

சி.விதுஷிகா
யா/ மெ.பெ.உ.பா.

## மௌனத்தின் தேடல் –504



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## விவசாயியவன் விடியல்

மாடுகளோடு மாடாய் ஏர்பிடித்து நிலம் உழுது
நித்திரையின்றி நித்தம் உழைக்கும்
விவசாயியவன் விடியல் பொழுது
விடையில்லா வினாக்களுடன்
வியர்வையுடன் விரைந்து செல்லும்

ம.பவதாரணி,
யாழ். இ.ம.க.

## உத்தமன்

கார்மேகம் பொழியும் வரை
காத்திருந்து களனியெங்கும்
ஏர்பூட்டி உழவு செய்து
ஏற்றம்மிகு பயிர்வளர்த்து
உலகிற்கே உணவளிக்கும்
உத்தமனே விவசாயி

சி.கஜா,
புரசமோட்டை

# வெளிநாடுகளில் கடன் பெற்றது வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கா?

> “இலங்கை அரசு வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்காக வெளிநாடுகளிடம் கடன் பெற்றது எனின் கடனாளியாகும் அளவிற்கு என்ன அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பதை வெளிப்படுத்த வேண்டும்.



இது கொரோனா காலம். இப்போது நாம் அனைத்து பேதங்களையும் மறந்து கொரோனாவை எமது நாட்டில் இருந்து இல்லாதொழிக்க வியூகம் அமைத்துச் செயற்பட வேண்டிய நேரம்.

அதைவிடுத்து நீ பெரிது, நான் பெரிது என்ற எண்ணப்பாட்டுடன் செயற்படுவோமாக இருந்தால், பாரிய பின் விளைவுகளைச் சந்திக்க நேரும்.

நாட்டை முடக்குவதால் எந்தப் பயனும் இல்லை. அது அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்வை நடத்தும் சாமானியனை பாதிக்கும் என ஆட்சியாளர்கள் கூறுவதற்குள் சில யதார்த்தங்களும் இருக்கவே செய்கின்றன.

உலக நாடுகள் தற்போது இதே பாணியைக் கையாண்டு வருவதை நாம் இங்கு கவனிக்க வேண்டியது அவசியமானதாகிறது.

இப்போதைக்கு நாம் ஒவ்வொருவரும் எம்மை நாம் எவ்வாறு பாதுகாப்பது? என்பதை சிந்தித்து செயற்பட வேண்டிய நேரம்.

வைத்தியத்துறை கூறுகின்ற அத்தனை சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றினால் கொரோனாவில் இருந்து நாமும் தப்பிக் கொள்ளலாம். இந்தச் சமூகத்தையும் தப்பிப்பிழைக்க வைக்கலாம்.

இது இவ்வாறிருக்க, கடந்த 18 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆஹா அருமை. நாட்டை முன்னேற்ற இப்படிப்பட்ட வரவு-செலவுத்திட்டம் தேவையானது என ஆளும் தரப்பு புகழ,

வரவு-செலவுத்திட்டத்தில் மக்களின் வாழ்வை உயர்த்தும் விடயங்கள் ஏதும் இல்லை. இந்த அரசாங்கம் நாட்டு மக்களை ஏமாற்றியுள்ளது. அரசின் முகத்திரை வரவு-செலவுத் திட்டத்தினூடே கிழிக்கப்பட்டிருக்கிறது என எதிர்க்கட்சியினர் கூக்குரல் போட்டுக்கொண்டிருக்கின்றனர்.

ஆளும் கட்சி ஆஹா என்பதும் எதிர்க்கட்சி சீச்சி என்பதும் வழமையான ஒரு விடயமே.

ஆனால் இந்த 2021 வரவு-செலவுத் திட்டத்தில் மக்களுக்கு ஏதும் நன்மை இருக்கின்றதா? என்றால் அதற்கு இல்லை என்றே பதில்வரும்.

வழமையாக அரசாங்கங்களின் வரவு-செலவுத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை குறைப்பு, எரிபொருளுக்கான விலைக்குறைப்பு, அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பள உயர்வு என எதிர்பார்க்கக்கூடிய பல அம்சங்கள் பொதிந்திருக்கும்.

ஆனால் அவை எவையும் இல்லாமல் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத் திட்டம் சாமானிய மனிதனிடம் எடுபடவில்லை என்பதே உண்மையானது.

பாராளுமன்றில் வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன,

வடக்கு-கிழக்கின் அபிவிருத்திக்காகவே அரசாங்கம் வெளிநாடுகளிடம் அதிக கடன்களை வாங்கியதாக தெரிவித்த கருத்து ஆச்சரியம் அளிக்கும் விடயமாக அமைந்திருந்தது.

வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்காக இலங்கை கடனாளியானது எனின், நடந்த அபிவிருத்தி என்ன என்பதை அவர் தெரிவிக்க வேண்டும் அல்லவா? ஆனால் அவர் அதைத் தெரிவிக்கவில்லை.

போரினால் பாதிக்கப்பட்டு சொந்த பந்தங்கள், அவயவங்களை இழந்து போரின் வடுவை இன்றுவரை தாங்கிக் கொண்டிருக்கும் தமிழரின் வாழ்வாதாரம் என்பது கேள்விக்குறியாக வளர்ந்து நிற்கும் இந்தவேளையில், வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்காக இலங்கை கடனாளி ஆனதெனும் வெளிவிவகார அமைச்சரின் பேச்சு மிகுந்த வேதனையினைத் தருகிறது.

அபிவிருத்திப் பணி நடைபெற்றிருக்கிறது. அதை யாரும் மறுக்கவில்லை. வீதிப்புனரமைப்பு, புகையிரத பாதை புனரமைப்பு என பல முக்கியமான விடயங்கள் நடைபெற்றிருந்தாலும் வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்காக இலங்கை கடனாளி ஆனது என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அபிவிருத்தி என்பது A9 வீதியால் பயணிப்பது இல்லை. வன்னிப் பெருநிலப்பரப்பின் கிராமங்களில் போரினால் கணவனை, பிள்ளையை, மனைவியை இழந்து அன்றாட வாழ்வைக் கொண்டு செல்ல முடியாமல் திண்டாடும் எத்தனை குடும்பங்கள் இருக்கின்றன என்பதை நேரில் சென்று பார்த்தாலே புரியும்.

2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு அரசு அதிக அளவு பணத்தை ஒதுக்கியுள்ளது.

இது எதற்காக? பயங்கரவாதத்தைத் தோற்கடித்து விட்டதாகக் கூறுகிறீர்கள். ஆனாலும் யாருடன் போரிடுவதற்காக பாதுகாப்பு அமைச்சிற்கு இவ்வளவு நிதியை ஒதுக்கியிருக்கிறீர்கள்? என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நீங்கள் உங்கள் முகத்துடன் கோபித்துக்கொண்டு மூக்கை வெட்டப் பார்க்கிறீர்கள்.

நாட்டில் ஒரு சாராரை சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதால் தான் போர்த்தளபாடங்களை வாங்கிக் குவிக்கிறீர்கள். இவ்வாறு போர்த்தளபாடங்களை வாங்கிக் குவிப்பதனாலேயே சர்வதேச கடன் அதிகரிக்கிறது என்ற உண்மையை எடுத்துக்காட்டியிருந்தார் நீதியரசர்.

பயங்கரவாதத்தை அழிக்கின்றோம் என்ற போர்வையில் தமிழர்களுக்கு எதிராக போரிட்டதன் விளைவு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டதே.

இங்கு வர்த்தக அமைச்சர் வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்காகவே இலங்கை கடனாளி ஆனது என்பது வடக்கு, கிழக்கில் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிட்ட செலவைக் கூறுகிறதா? அல்லது அபிவிருத்திக்குச் செலவிட்டதைக் கூறுகிறதா? என்பது புரியாத புதிராக இருக்கிறது. இந்த வேளையில், 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திலும் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகிறது.

அபிமன்யு

# டெலிவரி நாய்!



உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா பீதி கொலம்பியாவையும் ஒரு கை பார்த்துவருகிறது. கொரோனாத் தடுப்புக்கான விதிமுறைகள் அங்கே கட்டாயமாக்கப்பட்டுள் ளன. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தால்தான் வெளியே வர முடியும் என்ற நிலை. இதுபோன்ற விதிமுறைகளால் வெளியே வரவே மக்கள் அஞ்சுகிறார்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் அங்குள்ள சுப்பர் மார்க்கெட்டின் டெலிவரி செய்பவரின் வேலை இணையத்தில் வைரலானது.

மக்கள் கவனத்தை தன் பக்கம் திருப்பிய அந்த டெலிவரி போய் வேறு யாருமல்ல, ஒரு நாய்! ஏரோஸ் என்ற அந்த நாய்தான் டெலிவரி வேலை பார்த்துவருகிறது. வாடிக் கையாளரின் பெயரை வைத்து வீட்டைக் கண்டறியும் அளவுக்கு, அதற்கு பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கொரோனா காலத்தில் அது பேருதவியாக மாறியிருக்கிறது. வீட்டை விட்டு வெளியே வர முடியாதவர்களுக்குத் தேடித் தேடி பொருட்களை டெலிவரி செய்கிறது இந்த நாய்!

# "உயர்ந்த" சாதனை!



கின்னஸ் சாதனைக்கென எந்த வரையறையும் கிடையாது. புதுமையாகவும் வித்தியாசமாகவும் இருக்கும் எதுவும் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துவிடலாம். அப்படித்தான் அமெரிக்காவைச் சேர்ந்த 17 வயதுப் பெண் கின்னஸில் இடம்பிடித்துள்ளார். இந்தப் பெண்ணின் கால்கள்தான் உலகிலேயே மிகவும் நீளமான கால்கள் என்ற சாதனையுடன் கின்னஸில் இடம் பிடித்துள்ளார்.


பொதுவாக 6 அடி உயரம் இருந்தாலே, தென்னை மரம் என்று கிண்டலாக அழைப்பார்கள். ஆனால், அமெரிக்காவின் டெக்சாஸைச் சேர்ந்த மசி குரின் என்ற இளம் பெண்ணின் உயரம் 6 அடி 10 அங்குலம். இவருடைய மொத்த உயரத்தில் கால்கள் மட்டுமே 4 அடி. அதாவது மொத்த உயரத்தில் 60 சதவீதம் கால்களின் உயரம். இதனால், உலகின் நீளமான கால்களைக் கொண்ட மனிதர் என்ற கின்னஸ் சாதனையை மசி குரின் படைத்துள்ளார். அண்மையில் இதற்கான சான்றிதழையும் கின்னஸ் நிறுவனம் அவருக்கு வழங்கியது.

### சாதனை விருப்பம்

கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இவருடைய கால்களின் அளவைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்மூர்வாசிகளின் சராசரி உயரத்தில் 75 சதவீதத்தைக் கால்களின் நீளம் மூலமே இவர் தொட் குரினின் இடது கால் 135.267 செ.மீ. நீளமும் வலது கால் 134.3 செ.மீ நீளமும் கொண்டவை என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஏற்கனவே, உலகின் நீளமான கால்கள் கொண்ட பெண் என்ற சாதனையைப் பெற்றிருந்த ரஷ்யாவின் எகடெரினா லிசினா என்ற பெண்ணின் சாதனையை முறியடித்து மசி குரின் புதிய சாதனையைப் படைத்துள்ளார்.கால்களின் நீளம் பற்றி மசி குரினிடம் கேட்டால், அவருக்கு வருத்தம் எதுவும் இல்லை. "கால்களின் உயரத்தை இதுவரை யாரும் என்னைக் கேலி செய்தது கிடையாது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் கால்கள் சராசரி உயரத்தைவிட அதிக வளர்ச்சி அடைந்துள்ளதை உணர்ந்தேன். இந்த உயரத்தின் காரணமாக எந்த உடையும் எனக்குப் பொருந்துவதில்லை. பிரத்தியேகமாக அளவு எடுத்து, தைத்துத்தான் உடைகளை அணிந்துவருகிறேன்" என்கிறார்.

# மூளையை இயக்கும் சிப்



மூளையே நம்முடைய சிந்தனைகளின் உறைவிடம், அறிவாற்றலின் ஆதாரம். உடலை மட்டுமல்ல நம்முடைய மனத்தையும் மூளையே இயக்குகிறது. மூளை அளப்பரிய செயலாற்றல் கொண்டது. மூளையின் எல்லையை வரையறுக்கவும் அதன் செயலாற்றலைப் பிரதியெடுக்கவும் விஞ்ஞானம் காலங்காலமாக முயன்று வருகிறது. இந்த முயற்சியின் நீட்சியே இன்று பரவலாகப் பேசப்படும் செயற்கை நுண்ணறிவு. இதன் அடுத்தகட்ட நகர்வாக, மூளையின் செயற்பாடுகளை அறிந்து, அதன் கட்டளைகளை நிறைவேற்றும் நோக்கில், பன்றியின் மூளையினுள் ஒரு கணனி சிப்பைத் தனது நிறுவனம் பொருத்தியிருப்பதாக இலன் மஸ்க் அறிவித்துள்ளார்.

### யார் இந்த இலன் மஸ்க்?

தென்னாபிரிக்காவில் பிறந்த இலன் மஸ்க் தன் 17-வது வயதில் கனடாவுக்குச் சென்று பொருளாதாரத்திலும் இயற்பியலிலும் பட்டம் பெற்றவர். 'ஸிப்2', 'எக்ஸ்.காம்' போன்ற நிறுவனங்களைத் தொடங்கிய அவர், இன்று ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா, நியுரோ லிங்க் போன்ற நிறுவனங்களைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்திவருகிறார். ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தால் விண்ணில் ஏவப்பட்ட செயற்கைக்கோள்தான், இன்றளவும் தனியாரால் ஏவப்பட்ட செயற்கைக்கோளாகத் திகழ்கிறது. சூரிய ஆற்றல் மூலம் இயங்கும் கார்களைத் தயாரிப்பதில் இவரது டெஸ்லா நிறுவனம் முன்னணியில் உள்ளது. தற்போது மனித மூளையின் செயற்பாடுகளை ஆராயும் முயற்சியில் இவரது நியுரோ லிங்க் நிறுவனம் மும்முரமாக உள்ளது.

### நியுரோ லிங்கின் நோக்கம்

மூளைக்கும் இயந்திரத்துக்கும் இடையே வயர்லெஸ் இணைப்பை உருவாக்கும் நோக்கில், 2016 இல் நியுரோ லிங்க் நிறுவனத்தை இலன் மஸ்க் தொடங்கினார். பார்வைக்குறைபாட்டுக்குக் கண்ணாடியைப் பயன்படுத்துவதுபோல் ஞாபகமறதி, கேட்கும் திறன் இழப்பு, பார்வை இழப்பு, முடக்குவாதம், பக்கவாதம், மனச்சோர்வு, தூக்கமின்மை, அதிகப்படியான வலி, வலிப்பு நோய்கள், பயம், பதற்றம், போதைக்கு அடிமையாதல், மூளை சேதம் உள்ளிட்ட மூளையின் குறைபாடுகளை அகற்றும்விதமாக ஏதேனும் கருவியை மூளையினுள் பொருத்த முடியுமா என்று ஆராய்வதே நியூரோலிங்க் நடத்தும் ஆராய்ச்சியின் அடிப்படை நோக்கம்.

### மூளைக்குள் கணனி

ஓகஸ்ட் 29 அன்று அவர் பங்கேற்ற நேரலையில், கெர்ட்ரூட் எனும் பன்றியை எலன் மஸ்க் அறிமுகப்படுத்தினார். அந்தப் பன்றியின் மூளையில், ஃபிட்பிட் கருவியை ஒத்த ஒரு கணனி சிப் பொருத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஒரு நாணயத்தின் அளவை உடைய அந்தக் கணனி சிப், நுண்ணிய கம்பிகளின் மூலம் மூளையுடன் இணைக்கப்பட்டிருந்தது. இந்த லிங்க் சிப்களை மூளையில் பொருத்துவதன் மூலம், வருங்காலத்தில் நமது நினைவுகளைச் சேமித்துவைக்க முடியும். தேவைப்படும் நேரத்தில் அதை மீட்டெடுத்து அசைபோட முடியும் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் மஸ்க்.

### எளிதில் பொருத்தலாம், அகற்றலாம்

குறிப்பிட்ட பகுதியில் மயக்கமருந்தைச் செலுத்தி, ஓர் அறுவை சிகிச்சை ரோபோ மூலம் இதை மூளையினுள் எளிதில் பொருத்திவிட முடியும். அதே நேரலையில் டோரதி எனும் மற்றொரு பன்றியை அவர் அறிமுகப்படுத்தினார். அந்தப் பன்றிக்குப் பொருத்தப்பட்டிருந்த கணனி சிப், தற்போது அகற்றப்பட்டுவிட்டது என்று மஸ்க் கூறினார். "இந்த நியூரோ லிங்க் கருவியைத் தேவைப்படும் நேரத்தில் மூளைக்குள் பொருத்திக்கொள்ளலாம், தேவையில்லையெனில் அகற்றிவிடலாம். அதனால் நமக்கு எந்த பாதிப்பும் வராது என்பதையே இந்த பன்றிகள் நமக்கு உணர்த்துகின்றன" என்று அவர் தெரிவித்தார்.

# பிசியான தாத்தா!



இன்றைய திகதியில் யூடியூபில் சமையல் செய்வது எப்படி என்ற அலைவரிசைகளுக்குத்தான் கிராக்கி அதிகம். அதைக் கச்சிதமாகப் பிடித்து முன்னேறிக்கொண்டிருக்கிறார் 79 வயதுத் தாத்தா. மெக்சிகோவில் கொரோனா பீதி காரணமாக வயதானவர்கள் வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது என்ற உத்தரவு உள்ளது. இதனால், கார்லோஸ் எலிஜோண்டோ என்ற அந்தத் தாத்தா மளிகைக் கடையில் பார்த்துவந்த வேலையை இழந்தார்.

கொரோனா வைரல்கள்.எப்போதும் பரபரப்பாக வேலை பார்த்த அவரால், வீட்டில் சும்மா இருக்க முடியவில்லை. உடனே மகளின் உதவியுடன் யூடியூப் அலைவரிசை ஒன்றைத் தொடங்கினார். தனக்குத் தெரிந்த சமையல் வித்தைகளை யூடியூப் அலைவரிசையில் இறக்கினார். சமையலுக்கு டிப்ஸ்களையும் அள்ளிவீசினார். நாள்தோறும் அவருடைய சமையல் வீடியோவுக்கு வரவேற்பு கூடியது. இரண்டு மாதங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட தாத்தாவின் யூடியூப் அலைவரிசைக்கு 4 இலட்சம் சந்தாதாரர்கள் சேர்ந்துவிட்டார்கள் என்றால் பாருங்களேன்!

# கடல் புறா
## சீன சோதிடம்

சீனத்தான் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. "சுவைகள் பலதரப்பட்டவை. அவற்றைச் சுவைக்கும் சமயங்கள் தனித்தனி" என்றான் அவன்.

அவன் பேச்சுத்திறமை பெரும் வியப்பைத் தந்தது மற்றவர்களுக்கு. சீனத்தான் நுண்ணறிவு மிகச் சிறந்தது என்ற முடிவுக்கு வந்த அநபாயனும், இளையபல்லவனும் ஒருவரையொருவர் சில விநாடிகள் பார்த்துக்கொண்டனர்.

அந்தப் பார்வையைக் கவனித்த சீனனின் இதழ்களில் ஏற்கெனவே இருந்த புன்முறுவல் இன்னும் அதிக மாகப் படர்ந்தது. "உரையாடலில் வல்லவனாயிருக்கிறானே, செயலில் எப்படியோ என்ற சந்தேகம் போலிருக்கிறது உங்களுக்கு" என்று சொல்லி மெள்ளச் சிரிக்கவும் செய்தான் சீனன்.

"அப்படி நினைக்கவில்லை நாங்கள்" என்றான் இளையபல்லவன்.

"ஏன்?" சீனன் கேள்வி மீண்டும் திடமாக எழுந்தது.

"எதற்காக நினைக்க வேண்டும்?" என்று பதிலுக்குக் கேள்வியை வீசினான் இளையபல்லவன்.

"சீனத்தில் நாங்கள் வாய்ச்சொல் வீரரை மதிப்பதில்லை. செயல் வீரரைத்தான் மதிப்போம்."

"ஏன், இரண்டிலும் வல்லவர்கள் கிடையாதா?"


"அநேகமாகக் கிடையாது. அதிகமாகப் பேசுபவன் எந்தச் செயலையும் திறமையுடன் செய்ய முடியாது. செயல் குறையும்போதுதான் நாக்கு நீளுகிறது."

"அப்படியா?"

"ஆமாம். எங்கள் நாட்டில் தொழில் செய்யும் குழந்தைகள் தொழில் புரியும் சமயங்களில் பேசினால் உடனே தண்டிப்போம். நான் மரக்கலப் பயிற்சி பெற்றபோது அலுவல் சமயத்தில் ஓரிரு வார்த்தைகள் பேசியதற்காகப் பலமுறை சவுக்கடி பட்டிருக்கிறேன். பயிற்சி சமயத்தில் அலுவல்மீது மட்டுமே நாங்கள் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். இது எங்கள் தலைவர்கள் விதிக்கும் விதி."

சீனன் வார்த்தைகள் திடமாகவும் பெருமையுடனும் வெளிவந்தன. தனது நாட்டின் பயிற்சி முறைகளைப் பற்றி அவன் கொண்டிருந்த அசாத்திய மதிப்பையும் அவன் சொற்கள் சந்தேகமின்றிச் சுட்டிக்காட்டின.

தமிழகமும் பாரதமும் சீனநாட்டின் அளவுக்கு உயர்ந்து ஏழ் கடல்களிலும் தனது கீர்த்தியைப் பரப்ப




வேண்டுமானால் மரக்கலப் பயிற்சியிலும் தொழில் புரிவதிலும் அவர்களுக்குள்ள வெறி நமது மக்களுக்கும் அவசியம் என்று அநபாயன் எண்ணினான்.

என்றாவது சோழ அரியணையில் தான் ஏறும்பட்சத்தில் ராஜராஜனும், ராஜேந்திரனும் நிறுவிய கடற்படையைப் பத்து மடங்கு பலமுள்ளதாக்கி, அவற்றைக்கொண்டு சீனநாட்டிலும் வெற்றிக்கொடி நாட்ட வேண்டும் என்ற ஆசையும் அவன் உள்ளத்தில் படரவே அவன் கண்கள் தமிழக விஸ்தரிப்பின் சாம்ராஜ்யக் கனவில் சஞ்சரித்தன.

அநபாயன் கண்களில் விரிந்த கனவில் உண்மைக் கருத்து அந்தச் சீனன் சிந்தைக்கு நிமிட நேரத்தில் புலப்பட்டுவிட்டதால் அவன் அநபாயனை அதிசயத்துடன் நோக்கிவிட்டுச் சொன்னான் "உங்கள் கனவு பலித்தால் நாட்டுக்கு நல்லது" என்று.

அந்த வார்த்தைகளால் கனவுத் திரையைக் கிழித்துக் கொண்ட அநபாயன் கேட்டான். "என்ன சொல்லுகிறீர்கள்?" என்று.

"உங்கள் கண்களில் கனவு விரிந்ததைக் கண்டேன்" என்றான் சீனன்.

"என்ன கனவு?"

"சாம்ராஜ்யக் கனவு." "நான் ஏன் கனவு காண வேண்டும்?" "நீங்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பதால்."

"நான் அரச குடும்பத்தைச் சேர்ந்தவனென்று யார் சொன்னது உங்களுக்கு?"

"முகம் சொல்லுகிறது."

"முகத்தில் எழுதி ஒட்டியிருக்கிறதா?"

"எழுதி ஒட்டவில்லை. ராஜகளை இருக்கிறது. முகத்தில் சிந்தனை நரம்பு ஒன்று குறுக்கே ஓடுகிறது."

"நீங்கள் சொல்வது விளங்கவில்லை" என்றான் அநபாயன்.

சீனன் ஆசனத்திலிருந்து எழுந்தான். "விளங்கச் சொல்கிறேன் கேளுங்கள். ஏதோ நான்கு பேர்களைப் பாலூரிலிருந்து தப்புவித்து அழைத்துப் போகவேண்டுமென்று அமீர் சொன்னான். சரியென்று ஒப்புக்கொண்டேன்.

ஒப்புக் கொண்ட சமயத்தில் அந்த நான்கு பேரில் மூவர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பவர்களென்பதை நான் உணரவில்லை.

உங்கள் மூன்று பேரைத்தான் குறிப்பிடுகிறேன். ஏனென்றால் நான்காவது பெயரை நான் இன்னும் பார்க்கவில்லை. அவரும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராயிருக்கலாம். ஆனால் நீங்கள் மூவரும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.. ஆனால்..." என்று ஏதோ சோதிடம் சொல்வது போல் சொல்லிக் கொண்டு போனவனைத் தடுக்க அநபாயன் ஆசனத்திலிருந்து எழுந்தான்.

"எழுந்திருக்க வேண்டாம். உட்காருங்கள் எனக்கு மிக விளக்கமாகப் புரிகிறது. நீங்கள் மூவரும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆனாலும் மற்ற இருவருக்கும் அரசு பெறும் ராசி முகத்தில் இல்லை.

உங்கள் முகத்தில் குறுக்கே ஓடும் அந்தப் பச்சை நரம்பு ஒரு காலத்தில் பெரும் அரசை நீங்கள் ஏற்பீர்கள், உங்களிடம் அந்த அரசு விரியும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. ஆம், திட்டமாகச் சுட்டிக் காட்டுகிறது. சந்தேகமேயில்லை" என்று கூறிய சீனன், அநபாயனை ஊடுருவிப் பார்த்தான்.

அவன் சொற்களால் வியப்படைந்த அநபாயன் ஆசனத்தை விட்டுத் திடீரென எழுந்து அமீரை நோக்கினான். "அமீர்! இவர் யார்? பெயரென்ன?"என்று வினவினான் குரலில் சந்தேகம் ஒலிக்க.

அவர் பெயரைச் சொன்னான் பெயரைச் சொன்னானா? அல்லது இடியைத்தான் எடுத்து வீசினானா? இடியைத்தான் வீசி இருக்க வேண்டும். அமீரின் பதிலைக் கேட்ட மற்ற மூவரது விபரிக்க இயலாத அத்தனை அதிர்ச்சியை அடைந்தனர்.

எந்தச் சமயத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்த அபாயத்திலும் அதிர்ச்சியடையாத அநபாயனே அந்தப் பெயரைக் கேட்டு அதிர்ச்சியடைந்தான்.

### கனவில் கதை

மூன்றே எழுத்துகள் கொண்ட அந்தச் சீனக் கடலோடியின் பெயரை அரபு நாட்டு அமீர் உச்சரித்த மாத்திரத்தில் அந்த அறையில் தங்களிடையே உதிர்த்தவை மூன்று எழுத்துகளா? அல்லது மூன்று நெருப்புத் துண்டங்களா? என்பதை நிர்ணயிக்க முடியாமல் பெரும் பிரமிப்பைப் அடைந்த மற்ற மூவரும் தங்களைப் பாலூர்ப் பெருந்துறையிலிருந்து தப்புவிக்க இந்த மனிதனைத் தவிர அமீருக்கு வேறு யாரும் கிடைக்கவில்லையா? என்ற நினைப்பால் ஓரளவு சீற்றமும் அடைந்தனர்.

அந்த மூன்று எழுத்துக்களை அமீர் அன்றுதான் உச்சரித்தானென்றாலும் அந்த எழுத்துகள் துறைமுகங்களுள்ள எந்நாட்டுக்கும் புதிதல்லவாகையால் அந்த எழுத்து தொடரைப் பெயராகத் தாங்கியுள்ள மனிதனின் பிரபாவம் சென்ற சில ஆண்டுகளாக வெளிநாடு சென்று வந்த சகல மாலுமிகள் வாயிலும் சதா புகுந்து புறப்பட்டுக் கொண்டு தானிருந்தது.

வெளிநாடு சென்று வந்த தமிழகத்தின் வணிகர் சிலர் அந்தப் பெயரைப் பயத்துடன் உச்சரித்தனர். மற்றும் சிலர் அதைப்பற்றி பெருமையுடன் கதைகள் பல சொன்னார்கள்.

ஆனால் அத்தனை கதைகளிலும் வீரத்துடன் குரூரச் செயல் களும் கலந்தே கிடந்தன. வேறு பலருக்கு அந்த மூன்று எழுத்துப் பெயருடையவன் புரியாத புதிராயிருந்தான். (தொடரும்..)

# குறைந்த செலவில் விண்வெளிக்குச் செல்லும் வழியைத் தேடிய நிறுவனம்

**விமானப் பயணத்தை விலை மலிவாக ஆக்கும் திட்டத்துடன் கப்டன் கோபிநாத் என்பவர் ஒரு விமானப் போக்குவரத்து நிறுவனம் தொடங்கிய கதையை அடிப்படையாகக் கொண்டு உருவான திரைப்படம் சூரரைப் போற்று.எளிய, கிராமத்து மக்களை பறக்க வைக்கப் போவதாக கூறி தம் நிறுவனத்தின் வெற்றிக்குப் போராடுவார் அந்தப் படத்தின் நாயகன். இதனோடு ஒப்பிடத்தக்க வகையில் மலிவு விலை விண்வெளிப் பயணம், மனிதர்களை செவ்வாயில் குடியமர்த்துவது போன்ற இலட்சியங்களைக் கொண்டு உண்மையில் உருவான நிறுவனம்தான் எலான் மஸ்க் என்பவர் உருவாக்கிய ஸ்பேஸ் எக்ஸ் (SpaceX) நிறுவனம்.**

ஒரு காலத்தில் கொலம்பியா, டிஸ்கவரி, எண்டவர் என்று பல விண்வெளி ஓடங்களை வைத்துக்கொண்டு மாற்றி, பூமிக்கும் விண்வெளிக்குமாக ஒரு பேருந்தைப் போல இயக்கிக் கொண்டிருந்த நாடு அமெரிக்கா. நிலவில் முதலில் மனிதனை கால்பதிக்க வைத்த விண்வெளி வல்லரசு.

அப்படிப்பட்ட அமெரிக்காவே, இப்போது தமது விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பவும், அங்கிருந்து அழைத்து வரவும் ஸ்பேஸ் எக்ஸ் என்ற இந்த தனியார் நிறுவனத்தின் க்ரூ ட்ராகன் வெகிக்கிள் என்ற விண்வெளி ஓடத்தை நம்பியுள்ளது.

விண்வெளிப் பயணத் தொழில் நுட்பத்தில் உலகத்தின் முன்னோடி நாடுகளில் ஒன்றான அமெரிக்கா எதற்காக தங்கள் விண்வெளி வீரர்களின் போக்குவரத்துக்கு தனியார் நிறுவன விண்கலத்தை அமர்த்த வேண்டும். அதற்காக தனியார் நிறுவனத்துக்கு ஏன் கட்டணம் செலுத்த வேண்டும்? இந்த ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் எப்படி தொடங்கப்பட்டு காலூன்றியது?

பூமிக்கும் - சர்வதேச விண்வெளி நிலையத்துக்கும் போய் வந்து கொண்டிருந்த அமெரிக்காவின் விண்வெளி ஓடங்களில் ஒன்று கொலம்பியா. 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி இந்த கொலம்பியா ஓடம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து புவிக்கு திரும்பி வந்து கொண்டிருந்த போது, புவியின் காற்று மண்டலத்தில் நுழையும்போது ஏற்பட்ட ஒரு விபத்தில் உடைந்து நொறுங்கியது. அந்த ஓடத்தில் இருந்த 7 வீரர்களும் இறந்தனர். இந்தியாவில் பிறந்து அமெரிக்கரான விண்வெளி வீரர் கல்பனா சாவ்லாவும் இறந்தவர்களில் ஒருவர்.

மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் அமெரிக்கத் திட்டத்தின் திசைவழி இந்த விபத்தால் மாற்றமடைந்தது.

சர்வதேச விண்வெளி நிலையம் அமைக்கும் பணிகள் முடிந்ததும் அமெரிக்க விண்வெளி ஓடம் ஓய்வு பெறும் என 2004ஆம் ஆண்டு ஜனவரி14ஆம் திகதி முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அறிவித்தார். விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்பும் வகையில் புதிய வகை விண்வெளி வாகனம் உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.



சர்வதேச விண்வெளி நிலையப் பணிகள் முடிவடையும்போது, தாழ் புவி சுற்றுப்பாதைக்கு விண்வெளி வீரர்களையும், சரக்குகளையும் அனுப்பி வைக்க வணிகரீதியாக செயற்படும் நிறுவனங்களுக்கு முதல் முறையாக வாய்ப்பு அளிக்கப்படும் என்று அடுத்த ஆண்டு தெரிவித்தார் முன்னாள் நாசா தலைவர் மைக் கிரிபின்.

நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் திட்டத்துக்கு தேவையான நிதியை மிச்சப்படுத்துவதற்காகவே அப்போது புதிய விண்வெளி ஓடங்களை கட்டாமல் வணிக நிறுவனங்களை நாடுவதாகவும் அவர் தெரிவித்தார். இந்தத் திட்டத்தை மேற்பார்வையிடுவதற்காக ஒரு அலுவலகத்தையும் அமெரிக்கா உருவாக்கியது.

## செவ்வாயில் குடியமர்த்தும் இலட்சியம்

தென்னாபிரிக்காவில் பிறந்தவரான எலான்மஸ்க் தமது ஸ்பேஸ் எக்ஸ் கம்பனியை தொடங்கி அப்போது சில ஆண்டுகளே ஆகியிருந்தன. விண்வெளிப் பயணத்துக்குப் பயன்படுத்தும் கருவிகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் விண்வெளிப் பயணத்துக்கான செலவைக் குறைக்க வேண்டும், மனிதர்களை செவ்வாயில் குடியமர்த்த வேண்டும் என்ற இலட்சியங்களைக் கொண்டிருந்தார் அவர்.

"பல கோள்களில் உயிர் வாழ்வை சாத்தியப்படுத்தவேண்டும் என்ற இலட்சியத்தோடு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தொடங்கப்பட்டது" என்று கூறினார் அந்த நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் மிஷன் ஹார்ட்வேர் மற்றும் ஒபரேஷன் பிரிவின் இயக்குநரான ஜெசிகா ஜென்சன்.

"ஆனால், பல ஆண்டுகளுக்கு நாங்கள் சிறிய நிறுவனமாகவே இருந்தோம். அந்த நிலையில் இருந்து மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் நிலைக்கு எப்படிச் செல்வது என்ற யோசனையில் வாய்ப்புகளை எதிர்பார்த்துக் காத்திருந்தோம்.

சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு சரக்குகளை எடுத்துச்சென்று வருவதற்கு நாசாவுக்கு ஒரு தேவை ஏற்பட்ட போது, நாங்கள் அதற்குள் நுழைந்தோம்" என்கிறார் அவர்.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் உருவாக்கிய டிராகன் 1 விண்கலத்தில் சரக்குகளை சுமந்து செல்ல முடியும். ஆனால், மனிதர்களை கொண்டு செல்ல இயலாது. ஆனால், அந்த நிறுவனத்துக்கு அந்த விண்கலம் முக்கியமான மைல்கல்லாக அமைந்தது.

தொடக்கத்தில் வணிக ரீதியாக விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பும் திட்டத்தின் மீது நம்பிக்கை வைக்காத பாராளுமன்றம் போதிய நிதியை ஒதுக்கவில்லை. ஆனால், ஒபாமா நிர்வாகத்தில் நாசாவின் புதிய தலைவராக பொறுப்பேற்ற சார்லஸ் போல்டன் என்ற முன்னாள் விண்வெளி வீரர், தொடர்ந்து வலியுறுத்தி அதற்குத் தேவையான நிதியைப் பெற்றார்.

இந்தப் பணிக்கு முதல் கட்டமாக 5 கோடி டொலர் பணத்தை முதலீடு செய்வதற்கு பல நிறுவனங்களை ஆராய்ந்த நாசா 2014இல் கடைசி சுற்று பரிசீலனைக்கு இரண்டு நிறுவனங்களை தேர்வு செய்தது.அதில் ஒன்று போயிங். மற்றொன்று ஸ்பேஸ் எக்ஸ்.

அதிலிருந்து இரு நிறுவனங்களின் விண்கல மாதிரிகளை மேம்படுத்துவது மற்றும் பரிசோதிப்பது ஆகிய பணிகளை தொடர்ந்து மேற்கொண்டனர்.

இறுதியாக 2019 மார்ச்சில் ஆட்களை ஏற்றிச் செல்லும் திறன் பெற்ற "க்ரூ ட்ராகன்" விண்கலத்தை ஆட்கள் இல்லாமல் செலுத்தி சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்து அதனுடன் வெற்றிகரமாக இணைய வைத்தது. இது முழுவதும் தானியங்கி முறையில் நடைபெற்றது.

இந்த விண்கலத்தில் "ரிப்ளே" என்று அழைக்கப்படும் மனித பொம்மை அனுப்பி வைக்கப்பட்டது. இந்த பொம்மை மீது ஈர்ப்பு விசை எப்படி செயற்படுகிறது என்பதை அளவிடுவதற்காக அந்த பொம்மையில் உணர்வி கருவிகள் பொருத்தப்பட்டன.

இது போல பல வெற்றிகள் கிடைத்த போதும், ஸ்பேஸ் எக்ஸின் பயணம் மேடு பள்ளங்கள் இல்லாத சொகுசுப் பயணமாக இல்லை. 2016இல் ஏவுதளத்திலேயே ஒரு பால்கன் 9 றொக்கெட் வெடித்துச் சிதறியது. 2019 ஏப்ரலில் ஒரு தரை சோதனையின் போது க்ரூ ட்ராகன் விண்கலம் ஒன்று வெடித்தது.

க்ரூ ட்ராகன் விண்வெளி வாகனத்தை விண்வெளியில் இருந்து திரும்ப புவிக்கு கொண்டுவரும்போது பாதுகாப்பாக தரையிறங்குவதற்காக அதில் பொருத்தப்படும் பரசூட் அமைப்பில் கோளாறு இருந்து வந்தது.

இந்த விபத்துகளாலும், கோளாறுகளாலும் தொடக்கத்தில் நிதி ஒதுக்க நாடாளுமன்றம் தயக்கம் காட்டியதாலும், 2016இல் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு மனிதர்களை சுமந்து செல்லவேண்டும் என்ற ஆரம்ப இலக்கில் தாமதம் ஏற்பட்டது.

இந்தத் தாமதத்தால் வெறுப்படைந்த நாசா நிர்வாகி ஜிம் ப்ரைடன்ஸ்டைன், வணிக ரீதியில் விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டம் மிகவும் தாமதமாவதாகவும், அமெரிக்க மக்களின் வரிப்பணத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள இந்தத் திட்டத்தில் ஆர்வம் காட்டப்பட வேண்டும் என்றும், வெற்றிகரமாக செயற்படுவதற்கான நேரம் இதுவென்றும் டுவிட் செய்திருந்தார்.

2020 ஜனவரியில் நடந்த ஒரு க்ரூ ட்ராகன் சோதனையின் வெற்றி மூலம் விண்வெளி வீரர்களை அனுப்புவதற்கு ஸ்பேஸ் எக்ஸ்"க்கு அனுமதி கிடைத்து, புளோரிடாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து மே 30ஆம் திகதி விண்வெளி வீரர்களோடு ஸ்பேஸ் எக்ஸின் முதல் க்ரூ ட்ராகன் விண்வெளி வாகனம் பறந்தது.

நாசாவின் டோஹற்லே, பாப் பென்கன் என்ற இரண்டு விண்வெளி வீரர்களும் இரண்டு மாதம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்த பிறகு அதே விண்கலத்தில் பாதுகாப்பாக புவிக்குத் திரும்பினர்.

இந்த வெற்றிக்குப் பின்பான செய்தியாளர் சந்திப்பில் முன்னைய மோதலை மறந்து ப்ரைடன்ஸ்டைனும், எலான் மஸ்கும் இணக்கமான கருத்துகளை வெளியிட்டனர்.

ஸ்பேஸ் எக்ஸின் பாதுகாப்புப் பண்பாடு குறித்துப் பாராட்டினார் நாசா தலைவர். அதற்குப் பதில் அளித்த எலான் மஸ்க், "நாசாவோடு சேராமல் போயிருந்தால் நாங்கள் எப்படி இருந்திருப்போமோ அதைவிட செம்மையான நிறுவனமாக நாசா எங்களை ஆக்கியது.

நாசா இல்லாமல் போயிருந்தால் ஒருவேளை எங்கள் நிறுவனம் பணிகளைத் தொடங்கியே கூட இருந்திருக்காது" என்று தெரிவித்தார் எலான் மஸ்க்.

# கொரோனா தடுப்பூசி எப்போது வரும்?

> “கடந்த இரண்டு வாரங்களில், பிஃபைசர், பயோஎன்டெக் மற்றும் மாடர்னா நிறுவனங்கள், தங்களின் கொரோனா தடுப்பு மருந்து சோதனை வெற்றிகரமாக நடந்து இருப்பதாக தெரிவித்தார்கள். மற்ற நிறுவனங்களின் தடுப்பு மருந்துகள் தயாராகிக் கொண்டு இருக்கின்றன. ஜன்சன் என்கிற பெல்ஜிய நாட்டைச் சேர்ந்த நிறுவனத்தின் மூன்றாவது பெரிய சோதனை, பிரிட்டனில் தயாராகிக் கொண்டு இருக்கிறது.”

### நமக்கு ஏன் கொரோனா தடுப்பு மருந்து வேண்டும்?

உங்கள் வாழ்க்கை மீண்டும் பழைய நிலைக்கு வர வேண்டும் என்றால், நமக்கு கொரோனா மாற்று மருந்து தேவை.

இப்போது கூட பெரும்பாலான மக்கள், கொரோனாவால் பாதிக்கப்படலாம். நம் வாழ்கையில் விதிக்கப்பட்டு இருக்கும் கட்டுப்பாடுகள்தான், பல மக்களின் உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

ஒரு கொரோனாத் தடுப்பு மருந்து, கொரோனாப் பாதிப்புகளை எதிர்த்து, நம் உடல் எப்படி பாதுகாப்பாக சண்டை இட வேண்டும் என கற்றுக் கொடுக்கும். இந்த கொரோனா தடுப்பு மருந்து, கொரோனாவால் நாம் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் அல்லது குறைந்தபட்சம், கொரோனாவால் உயிரிழப்புகள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும்.

கொரோனாவுக்கான சிகிச்சை முறைகளோடு, கொரோனாத் தடுப்பு மருந்து இருப்பது தான், கொரோனாவில் இருந்து விடுபடுவதற்கான வழி.

### எந்தக் கொரோனா தடுப்பு மருந்து வெற்றி அடைய அதிக வாய்ப்பு இருக்கிறது?

பிஃபைசர் ஃபயோஎன்டெக் நிறுவனங்கள் தான், தங்களின் தடுப்பு மருந்து தொடர்பான இறுதிக்கட்ட சோதனை விபரங்களை பகிர்ந்து கொண்ட முதல் பார்மா கம்பனி.


இந்த நிறுவனத்தின் கொரோனா தடுப்பு மருந்து, 90 சதவிகித மக்களை கொரோனாவில் இருந்து பாதுகாக்கும் என்கிறது தரவுகள். இதுவரை சுமாராக 43,000 பேருக்கு கொரோனாத் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதுவரை எந்தப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளும் எழவில்லை.

மாடர்னா நிறுவனம், அமெரிக்காவில் 30,000 மக்கள் மீது தன் கொரோனா தடுப்பு மருந்து சோதனை நடத்தியது. அதில் பாதி பேருக்கு டம்மி ஊசிகள் செலுத்தப்பட்டன.

வெளியிடங்கள் போல வீடு, பணியிடத்திலும் பரவும் கொரோனா - தடுக்க 5 வழிகள் கொரோனா வைரஸ்: 95% பேருக்கு பாதுகாப்பளிக்கும் "மாடர்னா" தடுப்பு மருந்து

கொரோனா வைரஸ் தடுப்பூசி எப்போது கிடைக்கும்?

மாடர்னாவின் கொரோனா தடுப்பு மருந்து, 94.5 சதவிகித மக்களை பாதுகாப்பதாகச் சொல்கிறது. முதலில் சோதனைக்குட்படுத்தப்பட்ட 95 பேரில் ஐந்து பேருக்கு மட்டுமே, கொரோனா அறிகுறிகள் வந்தது. அவர்களுக்கு மட்டுமே கொரோனாத் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறது மாடர்னா.



ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மற்றும் ஆஸ்ட்ராஜெனகா மருந்து உற்பத்தியாளர்களின், கொரோனாத் தடுப்பு மருந்து சோதனை முடிவுகள், அடுத்த சில வாரங்களில் வெளியாக இருக்கின்றன.

இதற்கிடையில், ரஷ்யாவின் ஸ்புட்னிக் V கொரோனா தடுப்பு மருந்து தொடர்பான, ஊக்கமளிக்கும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

மூன்றாம் கட்டச் சோதனைகளின் இடைக்கால முடிவுகள் அடிப்படையில், பைசர் தடுப்பு மருந்தின் அளவைத் தொட்டு இருக்கிறது ரஷ்யத் தடுப்பு மருந்து. ரஷ்யாவின் ஸ்புட்னிக் V 92% திறன் கொண்டதாக இருக்கிறது என்கிறார்கள் ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள்.

### இன்னும் என்ன தடுப்பு மருந்துகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன?

வரும் வாரங்கள் மற்றும் மாதங்களில், மேம்பட்ட கொரோனாத தடுப்பு மருந்து சோதனைகளைச் செய்து கொண்டிருக்கும், பல்வேறு அணிகளின், முடிவுகள் வெளியாக இருக்கின்றன.

ஜன்சின் சோதனை, பிரிட்டனில் 6,000 பேரைத் தேர்வு செய்யத் தொடங்கி இருக்கிறது. மற்ற நாடுகளும் ஒன்று சேர்ந்து, மொத்தம் 30,000 பேரைத் தேர்வு செய்ய இருக்கிறார்கள்.

ஏற்கனவே இந்த கம்பனி, தன் கொரோனாத் தடுப்பு மருந்தை வைத்து, ஒரு பெரிய சோதனையை நடத்தியது. அதில் பங்கெடுத்தவர்களுக்கு ஒரு டோஸ் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டது. இந்தப்பணி மூலம், இரண்டு கொரோனா தடுப்பு மருந்துகள், வலுவான மற்றும் நீடித்த நோய் எதிர்ப்பு சக்தியைத் தருகிறதா எனப் பார்க்க உதவும்.

இன்னும் சில கொரோனாத் தடுப்பு மருந்துகள், சோதனையின் கடைசி கட்டத்தில் இருக்கின்றன. இதில் சீனாவில் இருக்கும் வுஹான் இன்ஸ்டிட்யூட் ஒப் பயோலொஜிகல் புரொடெக்ட் மற்றும் சினோபார்ம் மற்றும் ரஷ்யாவின் கெமலியா ரிசர்ச் இன்ஸ்டிட்டியூட் தடுப்பு மருந்துகளும் அடக்கம்.

சீனோவேக் என்கிற சீன கம்பனியின், கொரோனாத் தடுப்பு மருந்து, பிரேசிலில் சோதனையில் இருந்தது. இந்த மருந்து கடுமையான எதிர்விணைகளைக் காட்டும் காரணத்தால் ரத்து செய்யப்பட்டது. இந்த மருந்து சோதனையின் போது ஒரு தன்னார்வலர் இறந்துவிட்டதாகவும் நம்பப்படுகிறது.

தற்போது ஆராய்ச்சியில் இருக்கும் கொரோனா மாற்று மருந்துகள் எப்படி வித்தியாசப்படுகின்றன?

உடலில் இருக்கும் வைரஸை எந்த பாதிப்பும் இல்லாமல், நம் உடலில் நோய் எதிர்ப்பு மண்டலத்துக்கு காட்டிக் கொடுப்பது தான் ஒரு கொரோனா தடுப்பு மருந்தின் வேலை. அதன் பிறகு, நம் உடலின் நோய் எதிர்ப்பு மண்டலம், வைரஸை ஒரு வெளிநபராகக் கண்டு கொள்ளும். அதன் பின், வைரஸோடு எப்படி சண்டை போட வேண்டும் என கற்றுக் கொள்ளும்.

### இதைச் செய்ய பல வழிகள் இருக்கின்றன

பிஃபைசர் ஃபயோஎண்டெக் மற்றும் மாடர்னா மேம்படுத்தி இருக்கும் தடுப்பு மருந்து ஆர் என் ஏ என்று சொல்லலாம். இது ஒரு சோதனை அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. உடலில் இருக்கும் நோய் எதிர்ப்பு மண்டலத்துக்கு பயிற்சி அளிக்க, உடலில் வைரஸின் ஜெனடிக் கோட்களை உட்செலுத்துவார்கள்.

ஜன்சென் தடுப்பு மருந்து, ஒரு பொதுவான சளி வைரஸை, ஒரு ஆபத்து இல்லாத வைரஸாக மாற்றி, மூலக்கூறு நிலையில் கொரோனா வைரஸ் போல மாற்றுகிறார்கள். இது உடலில் இருக்கும் நோய் எதிர்ப்பு மண்டலத்தால் கண்டு பிடிக்கப்பட்டு கொரோனா வைரஸை எதிர்த்துப் போராட வேண்டும்.

இதேபோலத்தான், ஒக்ஸ்போர்ட் மற்றும் ரஷ்ய தடுப்பு மருந்துகள், சிம்பன்சிகளை தொற்றி இருக்கும், பாதிப்பு இல்லாத வைரஸை எடுத்து, அதை மரபணு ரீதியாக மாற்றி, கொரோனா வைரஸ் போல காணச் செய்து, எதிர்வினைகளைப் பெற முயற்சிக்கிறார்கள்.

இரண்டு சீன கொரோனா தடுப்பு மருந்துகள், உண்மையாகவே கொரோனா வைரஸைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் வைரஸ் முடக்கப்பட்டு இருக்கின்றன. இந்த வைரஸால் பாதிப்பு ஏற்படக் கூடாது என இந்த ஏற்பாடு.

இதில் எந்த முறை, நமக்கு அதிகம் பலன் கொடுக்கிறது என்பதை அறிந்து கொள்வது அவசியம். **Challenge Trails** என்று அழைக்கப்படும் சோதனைகள், இந்த கேள்விக்கான விடையைக் கண்டுபிடிக்க உதவும். இந்த வகையான சோதனைகளில், வேண்டும் என்றே கொரோனா தொற்று ஏற்படுத்தப்படும்.

### எப்போது கொரோனா மாற்று மருந்து கிடைக்கும்?

பிஃபைசர் இந்த ஆண்டின் இறுதிக்குள், 50 மில்லியன் டோஸ் மருந்துகளை சப்ளை செய்ய முடியும் என நம்புவதாகச் சொல்கிறது பைசர். 2021ஆம் ஆண்டுக்குள் 1.3 பில்லியன் டோஸ் உற்பத்தி செய்யப்படலாம் என்கிறது.

பிரிட்டன் நாடு முதலில் 10 மில்லியன் டோஸ் மருந்துகளை இந்த 2020ஆம் ஆண்டுக்குள் பெற வேண்டும். இது போக, ஏற்கனவே ஓடர் செய்த 30 மில்லியன் டோஸ் மருந்து வேறு இருக்கிறது.

பிரிட்டனுக்கு மட்டும், ஆஸ்ட்ரசெனிகா ஒக்ஸ்போர்ட் 100 மில்லியன் டோஸ் மருந்துகளை சப்ளை செய்ய சம்மதித்து இருக்கிறது. உலகம் முழுக்க 2 பில்லியன் டோஸ்களை சப்ளை செய்ய சம்மதித்து இருக்கிறது.

5 மில்லியன் டோஸ் மாடர்னா கொரோனா தடுப்பு மருந்துகளை வாங்க தொடக்க காலத்திலேயே ஒரு ஒப்பந்தம் இருப்பதாக, பிரிட்டனின் சுகாதார அமைச்சர் மேட் ஹன்காக், சொல்லி இருக்கிறார். இந்த மருந்து வரும் வசந்த காலத்துக்குள் கிடைக்கும் எனவும் சொல்லி இருக்கிறார்.

### யாருக்கு முதலில் கிடைக்கும் இந்த கொரோனா தடுப்பு மருந்து?

கொரோனா தடுப்பு மருந்து கிடைக்கும் போது, எங்கு அதிகம் கொரோனா பரவுகிறது மற்றும் யார் மீது இந்த கொரோனா தடுப்பு மருந்துகள் சிறப்பாக செயற்படுகிறது என்பதைப் பொறுத்து மாறுபடும்.

**Old Care Home Residents** மற்றும் **Care Home Staff** என்று அழைக்கப்படும் பணியாளர்கள் தான் பிரிட்டனின் முன்னுரிமைப் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பிறகு தான் பிரிட்டனின் சுகாதாரப் பணியாளர்களான மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் வயதானவர்களுக்கு என்கிறது பிரிட்டன்.

வயது, இதுவரை, கொரோனாவின் மிகப் பெரிய ரிஸ்க் காரணி.

### இன்னும் என்ன செய்ய வேண்டும்?

சோதனைகள், தடுப்பு மருந்து பாதுகாப்பாக இருக்கிறது எனக் காட்ட வேண்டும். கொரோனா தடுப்பு மருந்து, கொரோனாவால் மக்கள் நோயுறுவதைத் தடுக்க வேண்டும் அல்லது கொரோனாவால் மரணிப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்.

பல பில்லியன் டோஸ் மருந்துக்கு, பெரியளவில் தடுப்பு மருந்து வேலை கள் மேம்படுத்தப்பட வேண்டும்.

இந்த மாற்று மருந்தைக் கொடுப்பதற்கு முன், மருந்து நெறிமுறையாளர்கள், அனுமதிக்க வேண்டும்.

உலகில் 60 - 70 சதவிகித மக்கள், கொரோனா வைரஸ் பரவாமல் இருக்க, போதுமான நோய் எதிர்ப்புச் சக்தி கொண்டவர்களாக இருப்பார்கள் என எண்ணப்படுகிறது.

### ஒரு கொரோனா தடுப்பு மருந்து எல்லோரையும் பாதுகாக்குமா?

மக்கள் நோய் எதிர்ப்புக்கு வித்தியாசமாக எதிர்வினையாற்றுகிறார்கள்.

வரலாற்று ரீதியாக, வயதானவர்கள் மீது, எந்த ஒரு தடுப்பு மருந்தும், அதிகம் வெற்றிகரமாகச் செயற்படாது. காரணம், வயதான நோய் எதிர்ப்பு மண்டலம் அத்தனை சிறப்பாக செயற்படாது.

பல முறை மருந்து கொடுப்பதன் மூலம், இந்தப் பிரச்சினையைக் கடந்து வரலாம். இதை ஒரு இரசாயனத்தோடு சேர்த்து கொடுத்து வந்தால், நோய் எதிர்ப்பு மண்டலம் மேம்படலாம்.

— B.B.C —

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : களத்தூர் கண்ணம்மா
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : ஆர்.சுதர்சனம்
பாடியவர்கள்: ஏ.எம்.ராஜா, பி.சுசீலா



கண்களின் வார்த்தைகள் புரியாதோ
காத்திருப்பேன் என்று தெரியாதோ
ஒரு நாளில் ஆசை எண்ணமே மாறுமோ

கண்களின் வார்த்தைகள் புரியாதோ
காத்திருப்பேன் என்று தெரியாதோ
ஒரு நாளில் ஆசை எண்ணமே மாறுமோ

கண்களின் வார்த்தைகள் புரியாதோ
காத்திருப்பேன் என்று தெரியாதோ
ஒரு நாளில் ஆசை எண்ணமே மாறுமோ

தேடி திரிந்தேன் ஓடோடி வந்தேன்
செல்ல கிளியே கோபமா
தேடி திரிந்தேன் ஓடோடி வந்தேன்
செல்ல கிளியே கோபமா

ஏழை மனமே பொல்லாத மனிதர்
இவரை நம்பாதே இவரை நம்பாதே
தென்றல் மறந்தார் தெம்மாங்கு பாடும்
சிலையை மறந்தே ஓடினார்

உனை மறவாமலே வந்த
துணை நானன்றோ
உனை மறவாமலே வந்த
துணை நானன்றோ

ஆஹ்ஆஹ்ஹாஆஹ்ஆஹ்ஆஆ
கண்களின் வார்த்தைகள் புரியாதோ
காத்திருப்பேன் என்று தெரியாதோ
ஒரு நாளில் ஆசை எண்ணமே மாறுமோ

ஹாஆஆஆஆஅஆஆ
ஹாஆஆஆஆஅஆஆ

வண்ண கொடியே
வண்டாடும் மலரே
எண்ணமிருந்தும் நாணமா

பாவலர் தமிழின் பண்பான காதல்
மௌன கலையன்றோ பெண்மை
மனதின் நிலையன்றோ

பாடும் மனதின் பண்பான ஆசை
பார்வை வழியே தோன்றுமே

இனி வரும் நாளெல்லாம்
நம் திரு நாளன்றோ
இனி வரும் நாளெல்லாம்
நம் திரு நாளன்றோ

ஆஹ்ஆஹ்ஹாஆஹ்ஆஹ்ஆஆ
கண்களின் வார்த்தைகள் புரியாதோ
காத்திருப்பேன் என்று தெரியாதோ
ஒரு நாளில் ஆசை எண்ணமே மாறுமோ

# இந்தியாவுக்கு எதிராக சீனாவின் புதிய ஆயுதம்

லடாக்கில், சீன மக்கள் விடுதலை இராணுவம் (பி.எல்.ஏ) மைக்ரோவேவ் ஆயுதங்கள் எனப்படும் நுண்ணலை ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக வெளிவந்த இணையத் தள ஊடகச் செய்திகளை இந்திய இராணுவம் முற்றிலுமாக மறுத்துள்ளது.

இந்திய இராணுவத்தின் கூடுதல் பொது இயக்குநரகம் (ஏ.டி.ஜி.பி.ஐ), தனது டுவிட்டர் தளத்தில், "கிழக்கு லடாக்கில் நுண்ணலை ஆயுதங்களைப் பயன்படுத்தியது குறித்த ஊடக செய்திகள் ஆதாரமற்றவை, அது குறித்த செய்தி போலியானது" என்று டுவிட் செய்துள்ளது.

சீனாவின் கூற்று முற்றிலும் ஆதாரமற்றது என்று பாதுகாப்பு நிபுணரும் இந்தியன்டிஃபன்ஸ் ரிவியூ பத்திரிகையின் இணை ஆசிரியருமான கர்னல்தான் வீர்சிங் கூறுகிறார்.

"இதுபோன்ற ஆயுதங்கள் அனைத்தும் ஒரு நேர்க்கோட்டில் தாக்கக்கூடியன. மலைப்பாங்கான பகுதிகளில் பயன்படுத்த எளிதானவை அல்ல. இது அறிவார்ந்த சிந்தனைக்கு ஒவ்வாத ஒரு விடயம். இது சீனாவின் விஷமப் பிரசாரமேயாகும்" என்று சிங் கூறுகிறார்.

இராணுவம் மற்றும் பாதுகாப்பு குறித்து எழுதுகின்ற மூத்த பத்திரிகையாளர் ராகுல்பேடி, "இது ஒரு போலிச் செய்தி போல் தெரிகிறது. இது ஒரு சீனப் பிரசாரம் போல் தெரிகிறது. அதில் நம்பகத்தன்மை இல்லை" என்று கூறுகிறார்.

**இந்திய - சீன பதற்றம்**


இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் கிழக்கு லடாக்கில் நடந்து வரும் இராணுவப் பதற்றங்களுக்கு மத்தியில் பி.எல்.ஏ. இந்த மைக்ரோவேவ் ஆயுதங்களை, இந்திய இராணுவத்தை சில உயரமான பகுதிகளில் இருந்து வெளியேற்றப் பயன்படுத்தியதாகச் சீன ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் ரென்மின் பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் துறையின் பேராசிரியர் ஜின்கெய்ன்ராங்கை மேற்கோள் காட்டிச் சில ஊடக அறிக்கைகள், சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் மூலோபாய ரீதியாக முக்கியமான இரண்டு மலை முகடுகளை மீட்க, "மைக்ரோவேவ் ஆயுதங்களை" பயன்படுத்தியதாகவும் இந்த உயரங்களில் இருக்கும் இந்திய வீரர்கள் மீது இலக்கை நோக்கிப்பாயும் ஆற்றல் ஆயுதங் களை (DEW- Directed Energy Weapons) பயன்படுத்தியதாகவும் செய்தி வெளியிட்டன.

இந்த ஆயுதங்களைப் பயன்படுத்தியதை அடுத்து, நிலைகுலைந்து போன இந்திய இராணுவம் 15 நிமிடங்களுக்குள் அகற்றப்பட்டது என்று கெய்ன்ராங் கூறுவதாகச் செய்தி வெளியானது.

**மைக்ரோவேவ் ஆயுதங்கள் என்றால் என்ன?**

மைக்ரோவேவ் ஆயுதங்கள் என்பவை, இலக்கை நோக்கிப் பாயும் ஆற்றல் ஆயுத (DEW) வகையைச் சேர்ந்தவை. இந்த நுண்ணலைகள் மின்காந்த கதிர்வீச்சின் ஒரு வடிவம். அவற்றின் அலை நீளம் ஒரு மி.மீ. முதல் ஒரு மீற்றர் வரை மாறுபடும். அவற்றின் அதிர்வெண்



கள் 300 மெகா ஹெர்ட்ஸ் (100 செ.மீ) முதல் 300 ஜிகாஹெர்ட்ஸ் (0.1செ.மீ) வரை இருக்கும்.

அவை உயர்ஆற்றல்ரேடியோ அதிர்வெண்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

"வீடுகளில் ஒரு மைக்ரோவேவ் அடுப்பு செயற்படுவது போலவே தான் இந்த ஆயுதங்களும் இயக்கப்படுகின்றன. இதில் மைக்ரோவேவ் அலைகளை அனுப்பும் ஒரு காந்தம் உள்ளது. இந்த அலைகள் ஒரு உணவுப் பொருளை ஊடுருவிச் செல்லும் போது வெப்பத்தை உருவாக்குகின்றன. இந்த ஆயுதங்களும் அதே அடிப் படையில் தான் செயற்படுகின்றன" என்று சிங் கூறுகிறார்.

இது சாத்திமே, இருப்பினும் இதுபோன்ற ஆயுதங்களின் பயன்பாடு சாத் தியம் தான் என்று ராகுல் பேடி கூறுகிறார்" பீரங்கி குண்டுகள், தோட்டாக்கள் பயன்படுத்தப் படாத போரை 'நான்-கான்டாக்ட் வார்ஃபேர்' என்று கூறுகி றோம். இவற்றில் புற ஊதாக் கதிர்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பது உண்மை தான். என்றாலும் சீனா கூறுவது பொய்யென்றே தோன்றுகிறது" என்கிறார் அவர்.

இந்த வகை ஆயுதங்களில் டிஆர்டிஓவும் செயற்படுகிறது என்றும் சீனா இந்த வகை ஆயுதங்களின் உற்பத்தியில் எந்தக் கட்டத்தில் உள்ளது என்பது தெரியவில்லை என்றும் ஆனால், இந்த ஆயுதங்கள் எதிர்கால உண்மை என்றும் பேடி கூறுகிறார்.

"ஆனால், லேசர் அடிப்படையிலான ஆயுதங்கள் உள்ளன என்பது உண்மை தான். கலவரங்களைக் கட்டுப்படுத்துவது போன்ற சிறிய பணிகளில் லேசர் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், லேசர் ஆயுதங்கள் பெரிய அளவில் நடைமுறையில் இல்லை" என்று சிங் கூறுகிறார்.

இந்தியாவில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) DEW ஆயுதங்களில் செயற்படுகிறது.

குவிக்கப்பட்ட ஆற்றலுடன் இலக்கை அழிக்கும் திறன் படைத்தவை இவ்வகை ஆயுதங்கள். லேசர், மைக்ரோவேவ் மற்றும் பார்ட்டிகல் பீம் ஆகியவை இவ்வகையைச் சேர்ந்தவை. இந்தத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இயங்கும் ஆயுதங்கள் வீரர்கள், ஏவுகணைகள் மற்றும் ஆப்டிகல் சாதனங்களை இலக்காகக் கொண்டு தாக்கவல்லன.

வழக்கமான ஆயுதங்களை விட இவ்வகை ஆயுதங்கள் அதிக திறன் படைத்தவை. இந்த ஆயுதங்களை இரகசியமாகப் பயன்படுத்தலாம். காட்சிக்குட்பட்ட நிறமாலையின் மேலேயும் கீழேயும் உள்ள கதிர்வீச்சுகள் கண்ணுக்கு தெரியாதவை. தவிர, இவை ஒலியையும் எழுப்புவதில்லை.

ஒளியின் மீது புவியீர்ப்பு சக்தி அதிக தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதால் இது ஓரளவுக்கு மேலேயே செல்லும் திறனைப் பெறுகிறது. இது தவிர, லேசர் கதிர்கள் ஒளியின் வேகத்தில் இயங்குகின்றன, அத்தகைய சூழ்நிலையில் அவை விண்வெளிப் போரில் மிகவும் திறன் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

லேசர் அல்லது மைக்ரோவேவ் அடிப்படையிலான உயர் சக்தி DEW வகை ஆயுதங்கள், எதிரிட்ரோன்கள் அல்லது ஏவுகணைகளைச் செயலிழக்கச் செய்கின்றன.

# சூர்யாவின் அடுத்த படத்திற்கு இந்த நடிகையா?

## வாரே வா கொண்டாட்டத்தில் ரசிகர்கள்



நடிகர் சூர்யா சூரரைப் போற்று என்ற படம் மூலம் வெற்றி நாயகனாக ஜொலித்து வருகிறார். முதன்முறையாக அவரது படம் முவுவு தளத்தில் ரிலீஸ் ஆகியுள்ளது.

ஆனாலும் படத்திற்கு எந்த குறையும் இல்லாமல் ரசிகர்கள் வரவேற்பு கொடுத்திருக்கிறார். காரணம் சூர்யா என்பவரை தாண்டி கதையும் பேசப்பட்டுள்ளது.

அடுத்து சூர்யா கௌதம் மேனன் இயக்கத்தில் வெப் சீரியஸிற்காக ஒரு கதையில் நடித்து வருகிறார். அதைத் தொடர்ந்து அவர் பாண்டிராஜ் இயக்கத்தில் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

புதிய படத்திற்கு சென்சேஷன் நடிகை ரஷ்மிகா நடிக்க இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பி டிசம்பர் மாதத்தில் தொடங்குகிறது.

SURIYA IN

# சூரரைப் போற்று

## திரை விமர்சனம்

ஒட்டு மொத்த தமிழ் சினிமா ரசிகர்களும் ஆவலுடன் எதிர்ப் பார்த்து காத்திருக்கும் படம் சூரரைப் போற்று. சுதா இயக்கத் தில் சூர்யா நடிப்பில் மிகப்பெரிய எதிர்ப்பார்ப்பில் இருந்து திரையரங்கில் வெளிவராமல் முதன் முறையாக OTT யில் வெளிவந்துள்ள முன்னணி நடிகரின் படம், OTT என்றாலே தமிழ் ரசிகர்களுக்கு இத்தனை நாட்கள் கசப்பு தட்ட இந்த படமாவது இனிப்பு கொடுத்ததா? என்பதை பார்ப்போம்.



**கதைக்களம்**

சூர்யா படத்தின் ஆரம்பத்திலேயே ஒரு விமானத் தை அத்துமீறி தரை இறக்குகிறார். அதிலிருந்து தொடங்குகிறது படம்.

சூர்யா நெடுமாறன் ராஜாங்கம் நினைவு எளிய மக் களையும் விமானத்தில் குறைந்த பணத்தில் பறக்ல வைக்க வேண்டும் என்ற கனவுடன் போராடி வருகிறார்.

அவர் கனவிற்கு பலர் முட்டுக்கட்டை போடுகின்றனர், ஏதாவது ஒரு வழியில் அந்த நேரத்தில் விமான பிஸினஸில் கொடிக்கட்டி பறக்கும் பரீஷ் என் பவரை சூர்யா சந்தித்து தன் யோசனைகளை சொல்கிறார். சூர்யா ஒரு கிராமத்தான், அவர் எப்படி இப்படி ஒரு யோசனையை வைத்துக் கொண்டு சுத்தலாம், என்று பரீஷ் திட்டம் போட்டு அவர் கனவை தவிடு பொடியாக்குகிறார்.

இத்தனை பெரிய பிஸினஸ் மலையை தாண்டி சூர்யா எப்படி தன் விமானத்தை இந்த வானில் பறக்ல வைக்கிறார் என் பதே படத்தின் கதை.

# பிஸ்கோத் திரை விமர்சனம்



கடந்த பெப்ரவரி மாதத் தில் மூடப்பட்ட தியேட்டர் கள் தற்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. 50 சதவீத இருக்கைள் மட் டுமே. இது சற்று மகிழ்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த தீபாவளிக்கு வெளி யாக வேண்டிய படங்கள் 2021 இற்கு தள்ளி வைக் கப்பட்டாலும் கடந்த மே மாதம் வெளியாக வேண் டிய பிஸ்கோத் படம் இன்று தீபாவளி ஸ்பெஷலாக வெளியாகியுள்ளது. பிஸ் கோத் தீபாளிக்கு விருந் துதானா? இனிக்கிறதா? என்ன சுவை என ருசித் துப் பார்ப்போமா...

படத்தின் கதாநாயகனாக சந்தானம் மூன்று கெட்டப்பில் நடித்துள்ளார். குடிசை தொழிலாக அவரின் தந்தை ஆடுகளம் நரேன் பிஸ்கோத் தயாரித்து விற்பனை செய் கிறார். தொழிலில் அவருக்கு உதவியாக அவரின் நண் பன் ஆனந்த்ராஜ். கூடவே பயணிக்கிறார்.

தன் மகனை உயர்வான இடத்தில் வைக்க வேண்டும் என வழக்கமான தந்தையாக நரேனுக்கு ஒரு ஆசை. இந் நிலையில் சந்தானம் குழந்தையாக இருக்கும் போது அவரின் தந்தை திடீரென இறந்து விடுகிறார். பின் சந்தானம் என்ன ஆனார்? பிஸ்கோத் தயாரிக்கும் தொழில் என்ன ஆனது? அப்பா நரேனின் ஆசை நிறைவேறியதா என்பது இந்த பிஸ்கோத் தயாரிப்பு.



# புதிய மூன்று விதிகள்

## அடித்து நொருக்க அதிக வாய்ப்பு

"கிரிக்கெட் உலகின் அண்மைய ஹொட் ரொபிக் பிக்பேஷ் லீக்தான். ஆண்களுக்கான பிக்பேஷ் லீகின் 10 ஆவது சீசன் டிசெம்பர் 10 ஆம் திகதி தொடங்கவிருக்கிறது. இப்போது, பிக்பேஷ் லீகை இன்னும் விறுவிறுப்பாக்குகிறோம் என்ற பெயரில் 3 புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தியிருக்கிறது கிரிக்கெட் அவுஸ்திரேலியா. Power Surge, X-Factor Player, Bash Boost எனக்கூறப்படும் இந்த மூன்று புதிய விதிமுறைகள்தான் சர்ச்சையாகியிருக்கிறது. என்ன விவகாரம் என்று பார்ப்பதற்கு முன் இந்த மூன்று விதிமுறைகளும் என்ன என்பதை பார்த்து விடுவோம்.

### Power Surge:

கிரிக்கெட்டில் பவர்ப்ளே எல்லாருக்கும் தெரியும். இருபது-20 களில் முதல் 6 ஓவர்கள் பவர்ப்ளேயாக கடைப்பிடிக்கப்படுவது வழக்கம். இந்த பவர்ப்ளேயில் 2 ஃபீல்டர்கள் மட்டுமே 30 யார்டு வட்டத்திற்கு வெளியே நிற்பார்கள். பிக்பேஷ் லீகிலும் பவர்ப்ளே இதுவரை இப்படியே பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால், இந்த **'Power surge'** என்ற புதிய விதிமுறை மூலம் பட்டிங் செய்யும் அணி கடைசி 10 ஓவரில் எப்போது வேண்டுமானாலும் 2 ஓவர்களை பவர்ப்ளேயாக எடுத்துக்கொள்ளலாம். அப்படியென்றால் பட்டிங் செய்யும் அணிக்கும் 8 ஓவர் பவர்ப்ளே கிடைக்குமா? இல்லை. முதலில் 6 ஓவராக வழங்கப்பட்டு வந்த பவர்ப்ளே இப்போது நான்கு ஓவராக குறைக்கப்பட்டு விட்டது. மேலே குறைக்கப்பட்ட 2 ஓவரை பிற்பாதியில் 10 ஓவருக்கு மேல் பட்டிங் செய்யும் அணி எடுத்துக்கொள்ளலாம்.

### X-Factor Player:

ஐ.சி.சியின் புதிய விதிமுறைப்படி ஒரு பட்ஸ்மனோ பௌலரோ காயமடைந்துவிட்டால் அவருக்குப் பதிலாக அதே ரோலை செய்யும் வேறு ஒரு வீரரை களத்தில் இறக்கிக்கொள்ள முடியும். இந்த **X-Factor player** விதிமுறையும் இது போன்றதுதான். ஆனால், காயம் காரணமாக மட்டும் ஒரு வீரருக்குப் பதிலாக இல்லாமல், ஓர் அணி விரும்பினாலே ஒரு வீரருக்கு பதிலாக இன்னொரு மாற்று வீரரை பயன்படுத்திக்கொள்ளலாம். நீங்கள் எந்த வீரரை வெளியேற்றப் போகிறீர்களோ அந்த வீரர் பட்ஸ்




மனாக இருந்தால் ஆட்டத்தில் அதுவரை பட்டிங் ஆடியிருக்கக்கூடாது. பௌலராக இருந்தால் ஒரு ஓவர் மட்டுமே வீசியிருக்க வேண்டும். அப்படியிருந்தால், அந்த வீரரை வெளியே அழைத்துவிட்டு பென்சில் உட்கார்ந்திருக்கும் தேவைப்படும் வேறு ஒரு வீரரை பயன்படுத்திக் கொள்ளலாம்.

### Bash Boost:

மட்சின் இரண்டாம் பாதியில் பட்டிங் செய்யும் அணி 10 ஓவரை நிறைவு செய்தவுடன் இந்த **Bash boost** பயன்படுத்தப்படும். இதன்படி, இரண்டாவது பட்டிங் செய்யும் அணி அதாவது ஸ்கோரை சேஸ் செய்யும் அணி 10 ஓவர்கள் முடிவில் முதலில் பட் செய்த அணி 10 ஓவர்களில் எடுத்த ஸ்கோரை விட அதிகமாக எடுத்துவிட்டால் அந்த அணிக்கு ஒரு புள்ளி வழங்கப்பட்டுவிடும். ஒருவேளை சேஸ் செய்யும் அணி 10 ஓவர் முடிவில் குறைவான ஸ்கோரை எடுத்திருந்தால் பந்துவீசும் அணிக்கு ஒரு புள்ளி வழங்கப்பட்டுவிடும். ஒரு அணி போட்டியையும் வெற்றி பெற்று இந்த **Bash boost** ஐயும் வெற்றி பெற்றால் அந்த அணிக்கு போட்டிக்கான இரண்டு புள்ளிகளோடு ஒரு புள்ளி சேர்த்து மூன்று புள்ளிகள் வழங்கப்பட்டுவிடும். ஒரு வேளை போட்டியில் தோற்றாலும் **Bash Boost** ஐ வென்றிருந்தால் ஒரு புள்ளி உறுதியாக கிடைத்துவிடும்.

புதிதாக இந்த சீசனிலிருந்து அறிமுகமாகவிருக்கும் இந்த விதிமுறைகள்தான் இப்போது விவாதத்தை கிளப்பியுள்ளன. ஏற்கனவே பவர்ப்ளே தொடங்கி ஃப்ரீஹிட் வரை பௌலர்களுக்கு எதிராக அத்தனை விதிமுறைகளும் இருக்கையில் ஆஸி கிரிக்கெட் போர்டு அறிமுகப்படுத்தியிருக்கும் இந்த விதிமுறைகள் பௌலர்களுக்கு இன்னுமே பின்னடைவாகத்தான் இருக்கும். மேலும், கிரிக்கெட்டை மொத்தமாக ஒரு எண்டெர்டெயின்மெண்டாக மட்டுமே அணுகும் இந்த போக்கினால் கிரிக்கெட்டின் இயல்பும் மொத்தமாக சீர்குலைந்துவிடும் என்கிற அச்சம் இருக்கிறது.

கிரிக்கெட்டின் ஆன்மாவை இந்த விதிமுறைகள் எப்படி சீர்குலைக்கின்றன என்பதற்கு சில உதாரணங்களை குறிப்பிடலாம். அந்த **'Power Surge'**ஐ சேஸ் செய்யும் அணி கடைசி 2 ஓவர்களில் பயன்படுத்தினால் அது எவ்வளவு பெரிய விளைவை ஏற்படுத்தும்? 19-20 ஓவர்களில் வெறும் 2 ஃபீல்டர்கள் மட்டும் வட்டத்திற்கு வெளியே நின்றால் 50-60 ஓட்டங்களைக் கூட அசால்டாக பட்ஸ்மன்களால் அடித்துவிட முடியும். குறைந்த பட்சமாக **1-4** என **Default power play** கொடுப்பது போல 10-12 என ஒரு குறிப்பிட்ட ஓவர்களையாவது **Power Surge** ஆக கொடுத்திருக்கலாம். அப்படியில்லாமல் மொத்தமாக எல்லாவற்றையும் தூக்கி பட்ஸ்மேனின் கையில் கொடுத்தது போல் இருக்கிறது இந்த விதிமுறை.

அடுத்து அந்த **X-Factor player**. இப்போது உங்கள் அணி ஒன்றிரண்டு விக்கெட்டை மட்டும் இழந்து நல்ல ஸ்கோரை வைத்திருக்கிறது எனில் கீழே பட் செய்யாமல் இருக்கும் ஒரு பட்ஸ்மனை வெளியேற்றிவிட்டு நீங்கள் ஒரு பௌலரை அணிக்குள் சேர்த்துக் கொள்ள முடியும். அதேமாதிரி, அடுத்தடுத்து விக்கெட்டை கொடுத்து ஒரு அணி தடுமாறிகொண்டிருக்கிறது எனில் உடனே ஒரு பௌலரை வெளியே எடுத்துவிட்டு எக்ஸ்ட்ராவாக ஒரு பட்ஸ்மேனை உள்ளே சேர்த்துக்கொள்ள முடியும். என்னய்யா இது கள்ள ஆட்டமா இருக்கு? இப்படி ஒரு ரூல்ஸை நம்மூரில் கிரிக்கெட் ஆடும் சிறுவர்கள் கூட ஒத்துக்கொள்ள மாட்டார்களே என்கிற குரல் கேட்கிறது.

**Bash Boost** தான் எல்லாவற்றையும் விட கொடூரமானது. முதல் 10 ஓவருக்குள் எதிரணி 10 ஓவர்களில் அடித்த ஸ்கோரை விட அதிகமாக அடித்துவிட்டால் ஒரு பொயின்ட் நிச்சயம். கொஞ்சம் நஞ்சம் எஞ்சியிருக்கும் கிரிக்கெட்டின் அழகியலை ஒட்டுமொத்தமாக இந்த விதிமுறை சூறையாடிவிடும். தோல்வியிலிருந்து போராடி மீண்டு வந்து வெல்கிற கதையெல்லாம் இனி குறைவாகவே இருக்கும். ஐ.பி.எல்.இல் திவேதியா, இஷான் கிஷான் ஆடிய ஆட்டங்கள் மாதிரியானதையெல்லாம் பிக்பேஷில் பார்க்கவே முடியாது. ஒரு அணி 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் என்றாலும் அடுத்ததாக வருகின்ற பட்ஸ்மன் **Bash boost** ஐ மனதில் வைத்து அதிரடியாகத்தான் ஆடியாக வேண்டும். வெறுமனே சிக்ஸர் அடிப்பது மட்டும்தான் கிரிக்கெட்டா? ஒருவேளை நின்று நிதானமாக பார்ட்னர்ஷிப் போட்டு வென்றாலும் அந்த அணிக்கு 2 புள்ளியும் தோற்ற அணிக்கு ஒரு புள்ளியும் கிடைத்துவிடும். முழுமையான வெற்றி என்று எதையும் கொண்டாட முடியாது. இருபது-20 ஃபார்மேட்டின் வெற்றியே அதன் எளிமையில்தான் இருக்கிறது. பிக்பேஷ் லீகில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் விதிமுறைகள் குழப்பத்தையே உண்டாக்குகின்றன.

ஸ்டம்ப் லைட்டில் தொடங்கி இந்த லீக் போட்டியை கவர்ச்சிகரமானதாக மாற்றுவதற்கு ஆஸி கிரிக்கெட் போர்டு தொடர்ந்து பல முயற்சிகளை எடுத்து வருகிறது. ஆனால், ஆரம்பத்திலிருந்தே இந்த பிக்பேஷ் லீகில் என்டெர்டெய்ன்மென்ட்டுக்காக திணிக்கப்படும் பல விடயங்களில் அங்கே விளையாடும் அவுஸ்திரேலிய வீரர்களுக்கே விருப்பம் இருந்ததில்லை. கடந்த வருடம் பிக்பேஷ் லீகிலிருந்து ஓய்வு பெற்ற ஷேன் வாட்சன் வெளிப்படையாகவே இது குறித்து, "பிக்பேஷ் லீகில் தரமான கிரிக்கெட்டுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை விட பொழுதுபோக்குக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. **BBL** அது தொடங்கப்பட்ட வழியிலிருந்து தவறி விட்டது" எனப் பேசியிருந்தார்.

பிக்பேஷ் லீகில் இப்போது DRS உபயோகிக்கப்படுவதில்லை. வெளிநாட்டு வீரர்கள் 2 பேர்தான் ஆட முடியும் என்றிருந்தது இப்போதுதான் 3 வெளிநாட்டு வீரர்கள் என மாறியுள்ளது. முழுமையாக விடுமுறை காலங்களில் போட்டிகள் நடத்தப்படுவதில்லை. போட்டி அட்டவணையில் அத்தனை குழப்பங்கள் இருக்கின்றன. இந்தியா - ஆஸி சீரிஸ் நடைபெறும் அதேநேரத்தில் இந்தத் தொடரும் நடைபெறுகிறது என களைவதற்கும் புதுப்பிப்பதற்கும் ஆயிரம் பிரச்சினைகள் இருந்தும் அவுஸ்திரேலியா கிரிக்கெட் போர்டு தேவையின்றி ஓட்டோ கண்ணாடியைத் திருப்பியிருக்கிறது.

# காதலின் சின்னம் பாபிலோனின் தொங்கும் தோட்டம்



## கட்டியது யார்?

பாபிலோனின் தொங்கும் தோட்டத்தை செமிராசின் தோட்டம் என்று குறிப்பிடுவோர் சிலர். அசிரியன் பேரரசி செமிராஸ் என்பவரால் இது உருவாக்கப்பட்டது என்று ஒரு சிலர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் அதற்குப் போதுமான வரலாற்றுச் சான்றுகள் எதுவுமில்லை.

அதேநேரத்தில் நெபுகத் நாசரால் தான் இது கட்டப்பட்டது என்பதற்கு கல்வெட்டு ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றாலும் சில புராண இதிகாசங்கள் சாட்சியாக இருக்கின்றன.

கி.மு.முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜோஸஃபஸ் தனது ஃபெரோஸஸ் எனும் காவியத்தில் தொங்கும் தோட்டம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். டயோடோரஸ் தனது "ஸ்டேசியஸ் ஸ்நீட்டஸ்" எனும் நூலிலும் கியூட்டஸ் க்யூரியஸ் தனது "அலெக்ஸாண்டர் தி கிரேட்" எனும் வரலாற்று நூலிலும் நெபுகத் நாசரால் தொங்கும் தோட்டம் உருவாக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளனர். வருங்காலத்தை முன் கூட்டியே தெரிவித்ததாகக் கூறப்படும் தீர்க்கதரிசி டேனியல் நாசரின் அரண்மனையில் வேலை பார்த்திருந்தார். அவரது குறிப்புகளிலும் நாசரால் தான் தொங்கும் தோட்டம் கட்டப்பட்டது என்று சொல்லப் பட்டிருக்கிறது.

ஆனால் ஹிரோடோடஸின் குறிப்புகளில் பாபிலோனிய அரண் மனையைப் பாதுகாப்பதற்காக கட்டப்பட்டிருந்த பாபிலோனியப் பெருஞ்சுவர் பற்றியும் பாபிலோனிய நகரின் பேரழகைப் பற்றியும் விரிவாக எழுதியிருந்தாலும் தொங்கும் தோட்டம் பற்றிய குறிப்புகள் எதுமில்லை.

ஒன்பது வருடகால இடை வெளிக்குப் பிறகு சிதேக்கியாவின் போக்குகள் சரியில்லாமல் போகவே அவனையும் அவனது சந்ததியினரையும் அழித்து விட்டு அவர்களது நாட்டை தனது தேசத்துடன் இணைத்துக் கொண்டான்.

அந்த இறுதிப் போரின் போது தான் யூதர்களின் புனிதக் கோயிலான பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த சாலமன் ஆலயத்தை அழித்தான்.

யூத தேசத்தைப் போலவே பாபிலோனுக்கு அருகிலிருந்த மெதியன் அரசோடு சதா சண்டை மூளும் சூழல் இருந்தது. தொடர்ந்து போர் அறிவிப்பு தருவதனால் நாட்டின் நிதி நிலைமை மோசமாகிவிடும் என்பதாலும் வீரர்கள் சோர்வுற்று விடுவார்கள் என்பதாலும் மெதியன் அரசனின் மகளை இராஜதந்திர நடவடிக்கையாக மணம் செய்து கொண்டான். அமைத்தீஸ் என்று அழைக்கப்பட்ட அந்த இளவரசியின் மீது மிகுந்த காதலுடன் இருந்தான் நெபுகத் நாசர்.

மலைப்பாங்கான இடமான மெதிய தேசம் இயற்கையிலேயே வனப்பு மிக்கது. எங்கு பார்த்தாலும் பசுமை கொஞ்சும் செடி கொடிகள்...அபூர்வமான கனிகள் கொழிக்கும் மரங்கள், பனி போர்த்தியபடி புன்னகைத்துக் கொண்டிருக்கும் மலர்கள் என்று இயற்கை சூழ வாழ்ந்து வந்த அமைத்தீஸ் பாபிலோனிய தேசம் வந்ததும் மிரண்டு போனாள்.

அரண்மனைகள், கட்டடங்கள் என்று அதன் எழில் தோற்றம் பார்ப்பவர்களை எல்லாம் கவர்ந்தாலும் அமைத்தீஸுக்கு தனது தாய் தேசமான மெதியன் போல் இல்லாதது ஏமாற்றமாக இருந்தது.

சதா தனது தேசத்தையும் தாய் வீட்டையும் நினைத்தபடி சோம்பிக் கிடந்த அமைத்தீஸின் மன வாட்டத்தைப் போக்குவதற்காக நெபுகத் நாசர் செயற்கையான மலைப் பிரதேசத்தையும் தோட்டத்தையும் உருவாக்க நினைத்து கட்டியது தான் பாபிலோனிய தொங்கும் தோட்டம்.

(தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2164

**றுக்சி**

இன்றைய சூழ்நிலை



**குணம்**

அவ்வளவு எளிதில் அமைந்து விடுவது இல்லை!



ஆண்களுக்கு வேலையும்! பெண்களுக்கு சேவையும்!

**ப்ர்சன்**

சந்தோஷத்துல இருக்கிறவன் தான்டா கஷ்டத்தை பார்த்து பயப்பிடுவான்



நான் கஷ்டத்துலயே வாழ்றவன்

**சயந்தன்**

கஷ்டப்பட்டு ஒரு பிரச்சினையை கப்பலில் ஏத்தி அனுப்பினால்...



வேகமாக இன்னொரு பிரச்சினை ரொக்கெட்டில் வந்து இறங்கி விடுகிறது. இதுதான் வாழ்க்கை...!

**தசிதரன்**

நம்பிக்கையின் பலமே அதை நாம் முழுவதுமாக நம்புவதில் தான் உள்ளது!



**மன்மதராசா**

டாக்டர், என் கனவர் தனக்குத் தானே பேசிக்கிறாரு



அதுக்குக் கூட அவருக்கு உரிமை இல்லையா

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 231

## மழைநீரைக் குடிநீராகப் பாவிப்பதால் ஏற்படும் நன்மைகள்

தொற்று நோய்களான வாந்திபேதி, வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல் போன்றவற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

- பல சிறுநீரக நோய்களான சிறுநீரகப் பழுது, சிறுநீரகக்கற்கள் தோன்றுதல், சிறுநீர் அடைப்பு போன்றவற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள் எலாம்.

- புற்றுநோய் தோன்றும் வீதத்தைப் பெருமளவு குறைத்துக் கொள்ளலாம்.

- தீய இரசாயனப்பதார்த்தங்கள் உடலில் சேர்ந்து உடல் நோய் வாய்ப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

- நீரிலுள்ள மேலதிக கல்சியம் இரத்தக்குழாய்களில் படிவதால் மாரடைப்பு, பாரிசவாதம் என்பன ஏற்படும் வீதம் அதிகமாகும். நீரைக் கொதிக்கவைப்பதன் மூலம் அதிலுள்ள கல்சியத்தைப் பூரணமாக அகற்றமுடியாது. மழைநீரில் கல்சியம் இல்லை.

எனவே, மழைநீரைப் பாவிப்பதன் மூலம் மேலதிக கல்சியத்தை உட்கொள்வதால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து தப்பிக்கொள்ளலாம்.

- நிலத்தடிநீர் பாதுகாக்கப்படும்.

- நன்னீர் உப்பாவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

- தூயநீரை அருந்துகின்றோம் என்ற மன நிறைவு ஏற்படும். எனவே மழைக்காலத்தில மழைநீரைச் சேகரிப்பதற்கு எம்மைத் தயார்படுத்திக் கொள்வோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

## கழுதை அறியுமா கற்பூர வாசனை




வைத்தியரைச் சந்திக்கும் பொழுது, பொதி செய்யப்பட்டு வரும் சில மாவகைகளைக் குறிப்பிட்டு இதனைச் சாப்பிடலாமா? அதனைச் சாப்பிடலாமா? என்று கேட்காதவர்கள் யாருமில்லை என்ற நிலை தோன்றியிருக்கிறது.

விலை உயர்ந்த, அந்த விலைக்குப் பெறுமதி இல்லாத இந்த உணவு வகைகள் எங்கிருந்து படையெடுத்து வந்து எம்மை இப்படி ஆக்கிரமித்துக் கொண்டன? விளம்பரங்களும் கண்களைப் பறிக்கும் விதத்தில் பொதி செய்யப்பட்டிருக்கும் அந்த அழகும் அவற்றின் நறுமணங்களும் எம்மை இலகுவில் ஏமாற்றி அடிமைப்படுத்தி விடுகின்றன.

இயற்கையான போசாக்கு மிக்க மலிவான உணவுப்பொருட்கள் எத்தனையோ இருந்தும் பகட்டாக இறக்குமதி செய்யப்பட்டுவரும் உணவுப்பொருட்களிற்கு அடிமைப்பட்டுப்போய் இருக்கிறோம். அவை தான் உண்மையான சத்துள்ள உணவுகள் என்று எண்ணிக் கொள்கிறோம்.

1800 ரூபாவிற்கு ஒருமாப் பேணியை வாங்கி உண்ணும் பொழுது 500 ரூபா எம்மில் செறிகிறது. மிகுதி 1300 ரூபாவும் நாம் செலுத்தும் கப்பம். இந்த 1800 ரூபாவிற்கு உழுத்தம்மாவோ, பயற்றம்மாவோ அல்லது முட்டைமாவோ செய்து சாப்பிடுவோமாயின் அந்த 1800 ரூபாவும் எம்மில் செறியும்.

ஒரு பொருளைப் பேணியிலோ அல்லது போத்தலிலோ பொதி செய்ய முன்பு அது பலவிதமான வெப்பநிலை மாற்றங்களுக்கும் உலர்த்துதல்களுக்கும் உட்படுத்தப்படுகின்றது. இதன்போது அதன் இயற்கையான மூலக்கூறுகளில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்படுகின்றன. அத்துடன் இவை பழுதுபடாமல் இருப்பதற்காக இவற்றிற்குப் பல்வேறுபட்ட இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்படுகின்றன. அத்துடன் நறுமணத்திற்காகவும் சுவைக்காகவும் மற்றும் சில பொருட்களும் சேர்க்கப்படுகின்றன. இவ்வாறு பொதி செய்யப்பட்டுவரும் இந்தக் கலவைகளின் காலடியில் தான் நாம் வீழ்ந்து கிடக்கிறோம்.

மேலைத்தேச நாடுகளில், இயற்கையான பொருட்களிற்கு மதிப்பு அதிகம். அவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருந்தும் அதிகவிலை கொடுத்து இயற்கையான உணவுகளை வாங்க எத்தனை முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நாம் எம்மைச் சுற்றி மலிவான இயற்கையான பொருட்கள் எவ்வளவு இருந் தும் அதிக விலை கொடுத்து பொதி செய்யப்பட்ட பொருட்களை வாங்க ஆசைப்படுகின்றோம். "கழுதை அறியுமா கற்பூரவாசனை" என்ற பழமொழி ஞாபகம் வருகின்றது.

குளிர்பான வகைகளும் சோடா வகைகளும் வந்து, எமது பாரம்பரிய தேசிக்காய்த்தண்ணீர், இளநீர், குத்தரிசிக்கஞ்சி, மோர் போன்றவற்றினை அடித்துத் துரத்தி ஏளனத்துக்குரியவையாக்கிவிட்டன.

முருங்கை இலை, வாழைப்பொத்தி, அகத்தி இலை, அகத்திப்பூ, சிறகவரை, சண்டி இலை, தூதுவளை மருந்துகள்படாத இயற்கையான ஊட்டச் சத்துள்ள மரக்கறிவகைகள். இவற்றையெல்லாம் நாம் வெறுத்து ஒதுக்கிவிட்ட காரணம் என்ன?

முட்டை மிகவும் பாதுகாப்பான, ஒப்பீட்டளவில் மலிவான, அதி உச்ச புரதச்சத்துள்ள உணவாகும். இதனை ஆபத்தான உணவு என்று மனதில் வகைப்படுத்தி வைத்திருக்கிறோம்.

இயற்கையான உணவு வகைகளின் மகத்துவத்தை நாம் உணர்ந்து கொள்வோம். மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவோம். இதன்மூலம் நாம் அநாவசியமான பணச்செலவுகளைக் குறைப்பதுடன் உடல் ஆரோக்கியத்தையும் பேணி, நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**